நல்லூர்க் கந்தனின் கொடியேற்றம் இன்று



(தொடர்புடைய செய்தி பக்கம் 3)

இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 244 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆடி 12 வெள்ளிக்கிழமை 28.07.2017

## 25 பக்கங்களாகக் குறைந்த இடைக்கால அறிக்கை

### அதுவே நாடாளுமன்றுக்கு வரும்

யாழ்ப்பாணம், ஜூலை 28
புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளில் ஈடுபட்டுள்ள வழிநடத்தல் குழு தனது இடைக்கால அறிக்கையை 35 பக்கத்திலிருந்து 25 பக்கமாகக் குறைத்து இறுதி செய்துள்ளது. 25 பக்கமாகக் குறைக்கப்பட்ட இடைக்கால அறிக்கையே அரசமைப்பு நிர்ணயச் சபையில் (நாடாளுமன்றத்தில்) சமர்ப் >> 25

புலிகள் பயன்படுத்தியதாகக் கூறி

## தமிழரின் கட்டடத்தைப் பறிக்க மகிந்த வழங்கிய கட்டளை நீக்கம்

### பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்கவும் உயர்நீதிமன்றம் ஆணை

யாழ்ப்பாணம், ஜூலை 28
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தியதாக் குற்றம்சாட்டி, கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் தமிழருக்குச் சொந்தமான கட்டடத்தைப்பறிமுதல்செய்ய, அப்போதைய பாதுகாப்பு அமைச்சரான முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சபிறப்பித்த உத்த >> 25

## மாணவன் மீது வாள்வெட்டு

### யாழ். கலட்டிச் சந்தியில் நேற்று மதியம் கொடூரம்

யாழ்., ஜூலை 28
யாழ்ப்பாணம் கலட்டிச் சந்திப் பகுதியில் தொழில்நுட்பக் கல்லூரி மாணவன் மீது நேற்று >> 24

## திடீர் தேடுதலில் வடமராட்சியில் இருவர் கைது

### பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டிலாம்

யாழ். ஜூலை 28
தமிழ் பொலிஸ் அதிகாரி மீது தாக்குதல் மேற்கொண்டமை, சிறப்பு அதிரடிப் படையினர் மீது தாக்குதல் நடத்தியமை உள்ளிட்ட பல்வேறு >> 25

மகிந்த அணிக்குச் சம்பந்தன் பளீர்

# ஆட்சிக் கவிழ்ப்புக்கு ஆதரவு வழங்காது தமிழ்க் கூட்டமைப்பு

### மக்கள் ஆணைக்கு எதிராக எதையும் செய்யமுடியாது எனவும் திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 28
ஆட்சியைக் கவிழ்க்கத் துடிக்கும் மகிந்த அணியின் முயற்சிக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்காது என நேற்றுச் சபையில் திட்டவட்டமாக அறிவித்தார் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன்.
தன்னையும், எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் கடுமையாக விமர்சித்த மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன வுக்கு சம்பந்தன் உடனடியாகவே பதிலடி கொடுத்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அத்தியாவசிய >> 25



வடக்கு மாகாண சுழற்சிமுறை ஆசனம்

## புளொட்டின் கோரிக்கை நிராகரிப்பு ஜெயசேகரத்தின் பெயர் பரிந்துரை

யாழ்ப்பாணம், ஜூலை 28
வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுழற்சிமுறை நியமன ஆசன விடயத்தில், புளொட்டின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியால் யாழ்ப்பாண வணிகர் கழகத் தலைவரான ஆர்.ஜெயசேக >> 24

## புளொட் மையக் குழு அவசரமாகக் கூடுகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 28
வடக்கு மாகாண சபையில்சுழற்சிமுறை நியமன ஆசனத்தை வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில், புளொட்டின் மையச் செயற்குழுக் கூட்டம் அவசர அவசரமாக நாளை சனிக்கிழமை வவுனியாவில் கூட்டப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.
தமது கட்சியின் கோரிக்கை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியால் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும், தமக்குத் தெரியா >> 25

ரவிராஜ் படுகொலை;

## நேவி சம்பத்துக்கு நேற்றுப் பிடியாணை

(விரிவு பக்கம் 4)

## வேலை நிறுத்தங்களின் பின்னணியில் அரசியல்

### கடும் நடவடிக்கை வேண்டும் என்று கூட்டமைப்பு சபையில் வலியுறுத்தல்

கொழும்பு, ஜூலை 28
அரசியல் நோக்கங்களோடு முன்னெடுக்கப்படும் வேலை நிறுத்தப் போராட்டங்களின் பின்னணி யில் செயற்படுபவர்களுக்கு எதிராக அரசு கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாள >> 25



## 22 கிலோகிராம் கஞ்சாவுடன் அல்வாயில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம் ஜூலை 28
யாழ்ப்பாணம் அல்வாய் சக்கோட்டை பகுதி வீடொன்றில் இருந்து 22 கிலோ கஞ்சா நேற்று அதிகாலை கைப்பற்றப் >> 25

## யாழ். மாநகர சபைக்கு வாடகையாக ரூ. 10 லட்சம் செலுத்தவேண்டும் டிடி ரிவி

யாழ்ப்பாணம், ஜூலை 28
யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கிய டிடி தொலைக்காட்சி நிறுவனம், 10 லட்சத்து 16 ஆயிரம் ரூபாவை மாநகர சபைக்குச்செலுத்த வேண்டியிருப்பதாக, யாழ்ப்பாண மாநகர சபை வழங்கிய தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் மாநகரசபையிடம் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கேட்கப்பட்ட கேள்விக்கே மேற்கண்டவாறு பதில் வழங்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந் >> 25

## பதவிக்காக மௌனம் காக்கிறார் சம்பந்தன்

### தினேஷ் குற்றச்சாட்டு ராஜித மீதும் விமர்சனம்

கொழும்பு, ஜூலை 28
நாடாளுமன்ற ஜனநாயகம் சாவுப் படுக்கையில் விழுந்துள்ள நிலையிலும் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் பதவிக்காக எதையும் பேசாது மௌனமாக இருக்கின்றார்.
இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன நேற்றுக் குற்றம் சாட்டினார்.
அமைச்சர் ராஜித சேனாரத்ன >> 25

## ஐங்கரநேசன் இன்னும் சுற்றாடல் அமைச்சரா?

### மாகாண சபை உறுப்பினர்களுக்கு இடையே நேற்றுப் பலத்த சந்தேகம்



யாழ்ப்பாணம், ஜூலை 28
வடக்கு மாகாண சபையின் முன்னாள் சுற்றாடல் அமைச்சரும், மாகாணசபை உறுப்பினருமான பொ. ஐங்கரநேசன், மாகாணசபையின் உறுப்பினர்களுக்கு >> 25



சிறு பிள்ளைகளுடன் பரிசும் வளரும்

Vardhana JUNIOR

இன்றே DFCC வங்கிக்கு வந்து வர்தன ஜூனியர் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

24 மணிநேர அழைப்பு மையம்: 011 2350000
www.dfcc.lk
DFCC வங்கி ஃபிச் ரேட்டிங் லங்கா லிமிட்டெட்டின் AA- (lka) தரப்படுத்தலைப் பெற்றுள்ளது.
DFCC வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு



நல்லூர் கந்தன் அழகைக் காண கண் ஆயிரம் வேண்டுமே

நல்லூர் கந்தன் உற்சவக் காட்சிகள் தினமும் newuthayan.com இல்



# நீதிபதியின் மெய்க்காவலரை சுட்டுக்கொன்ற தாக்குதலாளி நாட்டைவிட்டுத் தப்பி ஓட்டம்

## *அடித்துக் கூறுகிறார் நாமல் எம்.பி.*

கொழும்பு, ஜூலை 28
"யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர் மீதான துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புடைய சூத்திரதாரி நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார். யாழ்ப்பாணத்திலிருந்து எமக்கு நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன"
இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார். மகிந்த அணி கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாணத்தில் நீதிபதியின் மெய்ப்பாதுகாவலர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.



தொடர்புடைய சந்தேகநபர் சரணடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அந்தச் சந்தேகநபர் சவால் ஒன்றுக்காகத் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறெனின் அவர் சவாலுக்காக வேறு யார்மீது துப்பாக்கிச் சூடு நடத்தத் தயாராவாரோ தெரியவில்லை. அரசியல் தலைவர்கள் அவதானமாக இருந்து கொள்ளவேண்டும்.
எமக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கிடைக்கும் தகவலுக்கு அமைவாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியவர் நாட்டிலிருந்து வெளியேறிவிட்டார். அது தொடர்பில் பொலிஸார் உரிய விசாரணை நடத்தவேண்டும். ஆனாலும், சந்தேகநபர் சரணடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
அந்தச்சம்பவம் தொடர்பில் பொலிஸார், நீதிபதி மற்றும் தற்போது சரணடைந்துள்ளவர் என்று மூன்று தரப்பினரும் குறிப்பிடும் கருத்தில் முரண்பாடு உள்ளது. இந்த விடயம் தொடர்பில் தெளிவூட்டவேண்டும் என்றார். (வ-5)

# சட்டவிரோதக் குடியேற்ற விடயத்தில் அசண்டை

## வடக்கு மாகாண சபை மீது உறுப்பினர் அஸ்மின் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 28
வடக்கு மாகாணத்தின் தெற்கு எல்லைப் பகுதியில் உள்ள 3 பிரதேச செயலகப் பிரிவில் காடுகள் அழிக்கப்பட்டு சட்டவிரோத குடியேற்றம் இடம்பெறுகின்றது. மாகாணசபை அதனைத்தடுப்பது தொடர்பில் எந்த அவதானத்தையும் செலுத்தவில்லை.
இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஐ. அஸ்மின் குற்றம் சாட்டினார்.
வடக்கு மாகாண சபையின் 100ஆவது அமர்வு நேற்று நடைபெற்றது. வடக்கு மாகாணத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ள வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஐந்து வருடங்களுக்கு மேலதிகமாக சேவை செய்திருந்தால் அவர்களை இடமாற்றம் செய்ய வேண்டும் என்ற பிரேரணையை அவர் முன்மொழிந்தார். அதன்போது கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்தாவது:
வடக்கு மாகாண சபையின் தெற்குப் பிரதேசங்களான வெலிஓயா, வவுனியா தெற்கு இரண்டு பிரதேச செயலகங்களையும் இணைத்து போகஸ்வெவ என்ற குடியேற்றமும் செட்டிக்குளம் பிரதேச செயலகத்தில் ஒயாமவே என்ற குடியேற்றமும் முன்னெடுக்கப்படுகின்றன.
அவற்றைத் தடுப்பதற்கு வடக்கு மாகாணசபை எந்த முயற்சியையும் எடுக்கவில்லை. மாகாண சபை உறுப்பினர்கள் கூட அங்கு சென்று என்ன நடக்கின்றது என கேட்டறியவில்லை.
இந்தப் பிரதேச செயலகங்களில் பணியாற்றுகின்ற மாகாண சபையின் உத்தியோகத்தர்களும் இந்தக் குடியேற்றங் களுடன் தொடர்புண்டு என்று தகவல்கள் கிடைத்துள்ளன. பிரதேச செயலகங்களில் காணி, கலாசார உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பணியாற்றுகின்றனர்.
போகஸ்வெவ குடியேற்றத்தில் ஒரு ஏக்கர் விவசாயக் காணி, வீடு கட்ட நான்கு பரப்புக் காணி, தற்காலிக குடிசை அமைக்க 25 ஆயிரம் ரூபா, வாழ்வாதார உதவித்திட்டங்களாக துவிச்சக்கர வண்டிகள், தையல் இயந்திரங்கள், ஆடுகள் என்பன வழங்கப்படுகின்றன். குடிதண்ணீர் பயன்பாட்டுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள், குடிநீர்த் தாங்கிகள் போன்றனவும் வழங்கப்படுகின்றன.
இந்ததீவிர குடியேற்றங்கள் தொடர்பில் எமது மாகாண சபை எந்த நடவடிக்கையும் எடுக்கவும் இல்லை. தடுப்பதற்கு எவ்வித முயற்சிகளையும் செய்யவில்லை. அந்தப் பிரதேசங்களின் தகவல்க ளும் முறையாக யாரிடமும் இல்லை - என்றார்.
மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனும் இந்தப் பிரேரணை மீது கருத்துத் தெரிவித்தார்.
முல்லைத்தீவின் பல பகுதிகள் சட்டவிரோதமான முறையில் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. கொக்குத்தொடுவாயில் மகாவலி எல் வலயம் என்ற போர்வையில் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. தொட்ட கண்டல் குளம், வெள்ளக் கல்லடி சிவந்த முறிப்பு போன்ற பகுதிகளையும் அபகரிக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என்று அவர் தெரிவித்தார். (ற-8)

# பெற்றோலுக்காக நேற்றும் கியூ

கரணவாய், ஜீலை 28
யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது பெற்றோலுக்குஏற்பட்டுள்ள செயற்கைத்தட்டுப்பாட்டையடுத்து நெல்லியடி கட்டைவேலி ப.நோ.கூ சங்கத்துக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இரவிரவாக நீண்ட வரிசையில் நின்று பெற்றோல் நிரப்புவதனை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.
பெற்றோலியக் கூட்டுத்தான ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பை அடுத்து யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெற்றோலுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது.
நேற்றைய தினம் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பெற்றோல் விநியோகிக்கப்பட்ட போதும் அதனைப் பெறுவதற்காக பொது மக்கள் முண்டியடித்துக்கொண்டு வரிசையில் காத்திருந்தனர். (வ-108)





# விபத்தில் மூவர் காயம்

பதுளை, ஜூலை 28
பதுளையில் இருந்து மகியங்கனைக்குப் பயணித்த முச்சக்கர வண்டி சாலையை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. இந்தவிபத்து நேற்று நடந்துள்ளது. முச்சக்கரவண்டியின் சாரதி உட்பட மூவர் அதில் காயமடைந்தனர்.
காயமடைந்தவர்கள் பதுளை அரசினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)



# வடக்குப் பெண்களுக்கான வலுவூட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 28
போருக்குப் பின்னரான காலப் பகுதியில் வடபகுதிப் பெண்க்ள் எதிர்நோக்கும் சவால்கள் எனும் தொனிப்பொருளில் பெண்களுக்கான வலுவூட்டல் கருத்தரங்கு நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.
யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஏற்பாட்டில் இந்தக் இருநாள் கருத்தரங்கு நடத்தப்பட்டது. கருத்தரங்கு இன்றும் நடைபெறவுள்ளது.
பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம், போரின் பின்னர் பெண்களின் வகிபங்கு, மது, போதைப்பொருள் பாவனையும் பெண்கள் மீதான வன்முறையும், போர் உருவாக்கிய மாற்றுத்திறனாளிப் பெண்களின் சவால்கள், உயர்கல்வியில் பெண்கள், பெண்களுக்கான பாதுகாப்பான வெளி, தமிழ் சமூகத்தில் தவிர்க்கமுடியாத யதார்த்தம், முல்லைத்தீவு பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், போரின் பின்னர் பெண்கள் எதிர்நோக்கும் உள சக பிரச்சினை, கூறுபோடப்படாத பெண்ணின் சுயம் போன்ற தொனிபொருள்களில் கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன.
கருத்தரங்கில் யாழ். போதனா வைத்தியசாலை மனநல மருத்துவர் சிவயோகன் கலந்துகொண்டு குடும்பவன்முறைகள் அதில் பெண்களுக்குஏற்படும் உளநலபாதிப்புக்கள் அவற்றைக் குறைப்பதற்கு பெண்கள் எவ்வாறான உத்திகளை கையாளவேண்டும் என்பது தொடர்பான கருத்துரைகளை வழங்கினார்.
அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவர் தே.தேவானந்தா மற்றும் யாழ். பொலிஸ்நிலைய சிறுவர் மகளிர் விவகார பொலிஸ் பொறுப்பதிகாரி சிந்து உட்பட மகளிர் அமைப்புக்களை சார்ந்த பெண்கள் எனப் பலர் கருத்தரங்கில் கலந்துகொண்டனர். (ற-106)

# போராளிகளால் அச்சுறுத்தல் என்றால் 12,000 பேரையும் நாடு கடத்துங்கள்

## *ஜனநாயகப் போராளிகள் அமைப்பு தெரிவிப்பு*

நாட்டின் பாதுகாப்புக்கு முன்னாள் போராளிகளால் அச்சுறுத்தல் எனக் கருதினால், மறுவாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட 12 ஆயிரம் பேரையும் நாடு கடத்துங்கள்.
இவ்வாறு முன்னாள் போராளிகள் தெரிவித்தனர்.
முன்னாள் போராளிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகத் தெளிவுபடுத்தும் செய்தியாளர் சந்திப்பை ஜனநாயகப் போராளிகள் கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் நடத்தினர். அதன்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தார்.
இலங்கை இராணுவத்தால் மறுவாழ்வளிக்கப்பட்ட எம்மீது சுமத்தப்பட்டிருந்த அனைத்துக் குற்றச்சாட்டுக்களுக்கும் பொது மன்னிப்பு வழங்கவேண்டும். சமூகத்தில் இணைத்த முன்னாள் போராளிகளை மீண்டும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்து சிறையில் அடைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆள்சேர்த்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மறுவாழ்வுபெற்ற விடுதலையான முன்னாள் போராளியான யாழ்பல்கலைக்கழகத்தின் நுண்கலைப்பீட விரிவுரையாளரான கண்ணதாஸ்க்கு வவுனியா மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்தது. யாழ். மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதியை இலக்குவைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்துடன் முன்னாள் போராளிகளைத் தொடர்புபடுத்துவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் - என்றனர். (ற-ஐ)

# *கூட்டம்*

யாழ். மாவட்ட தேசோதய சபையின் சிறப்புக்கூட்டம் சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட சர்வோதய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கான கிளைகளை ஆரம்பிப்பது தொடர்பிலேயே இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
தேசோதய மற்றும் சர்வோதய உறுப்பினர்களைக் கலந்து கொள்ளுமாறு மாவட்ட தேசோதய சபையின் தலைவர் கோரியுள்ளார். (ற)

## பாடசாலை வளாகத்தில் வெடிபொருள்கள் மீட்பு



கொழும்பு, ஜூலை 28

**பொலன்நறுவை, வெலிகந்த லும்பிணி ஆரம்பப் பாடசாலையில் ஆர்.பி.ஜி. மற்றும் மிதிவெடி என்பன மீட்கப்பட்டுள்ளன.**

பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வொன்றுக்காக பெற்றோர்கள் இணைந்து பாடசாலை வளாகத்தைத் துப்புரவு செய்தனர். அதன் போதே வெடிபொருள்கள் மீட்கப்பட்டன.

இது தொடர்பில் பாடசாலை அதிபர் ஊடாக பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அவற்றை மீட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ)

## மின்சார வேலியால் முதியவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 28

தூரியன் பழத் தோட்டத்தைப் பாதுகாப்பதற்காகப் போடப்படிருந்த மின்சார வேலியில் சிக்கி முதியவர் ஒருவர் உயிரிழந்தார் என்று கினிகத்தேன பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கினிகத்தேன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொல்பிட்டிய ஹிட்டிகேகம புலத்தவத்தில் நேற்று நடந்துள்ளது. 62 வயதுடைய முதியவரே உயிரழந்துள்ளார்.

தோட்டத்தின் உரிமையாளர் திருடர்களிடம் இருந்து தோட்டத்தைக் காப்பாற்றுவதற்காக மின்சார வேலி அமைத்திருந்தார். உயிரிழந்த முதியவர் வீட்டு நீர் விநியோகம் தடைப்பட்டிருந்தால் தோட்டப் பகுதியில் நீர்க்குழாயை திருத்தச் சென்றபோதே மின்தாக்கி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

தோட்டத்தின் உரிமையாளரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஐ)

## கல்லாறுப் பாலத்துடன் மோதி பேருந்து விபத்து

மட்டக்களப்பு, ஜூலை 28

தனியார் பேருந்து விபத்துக்குள்ளானதில் 12 பேர் காயமடைந்தனர். மட்டக்களப்பு கல்முனை நெடுஞ்சாலையில் கல்லாறு பாலத்தில் நேற்று இந்த விபத்து நடந்துள்ளது.

பாலத்துடன் மோதியே பேருந்து விபத்துக்குள்ளானது. பாலத்தின் பல பகுதிகள் சேதங்களுக்குள்ளாகின. கொழும்பிலிருந்து கல்முனை நோக்கி வந்த பேருந்து வேகக் கட்டுப்பாட்டை இழந்து பாதையை விட்டு விலகியதால் விபத்து ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் சிறுகாயமடைந்தவர்கள் களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர். (ற-ஐ)

# சு.கட்சியை அழிக்க மகிந்த பிரயத்தனம்

## அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 28

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச கட்சியை மைத்திரியிடம் கையளித்து விட்டு, வேறு ஒரு குழுவைக் கொண்டு கட்சியைத் தாக்குகிறார்.

இவ்வாறு சமூக மேம்பாட்டு மற்றும் நலன்புரி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

கட்சி இரண்டாக உடைந்தால் ஏற்படும் பாதிப்புக்களை நாம் நன்கு அறிவோம். முன்னாள் அரச தலைவர் தற்போதைய அரச தலைவர் கலந்துரையாடுவது நல்ல விடயமாகும்.

நாம் மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து கொண்டவர்கள் அல்லர். கட்சியை மைத்திரியிடம் கொடுத்தது மகிந்தவே. கட்சியின் தலைமைப் பொறுப்பை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்ததன் பின்னரே நாம் அவருடன் இணைந்து கொண்டோம்.

இப்போது மகிந்த என்ன செய்து கொண்டிருக்கிறார்?. கட்சியை மைத்திரியிடம் கையளித்து விட்டு, வேறு ஒரு குழுவைக் கொண்டு கட்சியைத் தாக்குகிறார். இதன் மூலம் அவர் எதனை எதிர்ப்பார்க்கிறார் என்பது புரியவில்லை - என்றார். (ற)

## நீதிமன்ற உத்தியோகத்தர்களின் கவனவீர்ப்புக் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மீதான தாக்குதலைக் கண்டித்தும் நீதி விசாரணையை வலியுறுத்தியும் நீதிமன்ற உத்தியோகத்தர்கள் வடக்கு முழுவதும் நேற்று நடத்தவிருந்த கவனவீர்ப்புப் போராட்டம் கைவிடப்பட்டது. நீதிமன்ற உத்தியோகத்தர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது என்றும் இந்தக் கவனவீர்ப்பு நடவடிக்கையைக் கைவிடுமாறும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இள ஞ்செழியன் வழங்கிய ஆலோசனை க்கமைவாகவே கவனவீர்ப்புப் போராட்டம் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ)

## புதிய நடைமுறையின் கீழ் பிணை முறி ஏலவிற்பனை

### ஹர்ச டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 28

**இன்று (நேற்று) முதல் முறிகள் ஏல விற்பனை புதிய நடைமுறையின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ளது என்று தெரிவித்துள்ளார் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார பிரதியமைச்சர் ஹர்ச டி சில்வா.**

கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

புதிய நடைமுறைக்கு அமைவாக மாதந்தோறும் 15 ஆம் திகதி முறிகள் ஏலவிற்பனை இடம்பெறும். எந்த நடைமுறையாயினும், மோசடி பேர்வழிகளால் முறைகேடுகளில் ஈடுபட முடியும்.

முன்னைய வழிமுறையின் கீழ், முறிகள் ஏல விற்பனையில் வெளிப்படைத் தன்மை காணப்படவில்லை. புதிய நடைமுறையின் கீழ் 100 வீதம் வெளிப்படைத் தன்மை பேணப்படும்-என்றார். (ற)

## மரத்திலிருந்து விழுந்த சிறுவன் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 28

கொய்யாப்பழம் பிடுங்க மரத்தில் ஏறிய சிறுவன் தவறி விழுந்து உயிரிழந்தார். இந்தச் சம்பவம் கஹட்டகஸ்திகிலிய எல்லவேவ ரன்பன்வில பிரதேசத்தில் நேற்று நடந்தது.

கொய்யா மரத்தில் இருந்து கீழே விழுந்த சிறுவனின் கழுத்துப் பகுதி, மரக்கிளையில் சிக்கி இறுகியதில் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

எல்லாவேவ பாடசாலையில் 3 ஆம் தரத்தில் கல்வி பயிலும் 9 வயதுச் சிறுவனே உயிரிழந்தார். பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-ஐ)

## நல்லூரான் கொடிச்சீலை கொண்டு செல்லும் நிகழ்வு





வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழா இன்று ஆரம்பமாகின்றது. கொடியேற்றத்துக்கான கொடிச் சீலை பாரம்பரிய முறைப்படி எடுத்துவரப்படும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. யாழ்ப்பாணம் சட்டநாதர் சிவன் ஆலயத்துக்கு அருகில் உள்ள வேல் மடம் முருகன் ஆலயத்தில் நேற்றுக் காலை சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. கொடிச்சீலை சிறிய ரதத்தின் மூலம் பருத்தித்துறை வீதி ஊடக எடுத்து வரப்பட்டு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை வந்தடைந்தது. செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை ஆலயத்தில் ஒப்படைக்கப்படுவது பாரம்பரிய வழக்கமாகும். பெருந்திருவிழா இன்று முற்பகல் பத்து மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். திருவிழாக்கள் 25 நாள்கள் இடம்பெறும். எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (ற-ஐ)







### ரவிராஜ் கொலை வழக்கு:

# நேவி சம்பத்துக்கு நேற்று பிடியாணை

யாழ்ப்பாணம், ஜூலை 28
தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலை வழக்கின் முதன்மைச் சந்தேக நபரான நேவி சம்பத்துக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுப் பிடியாணை பிறப்பித்துள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் முன்னிலையாகாததைத் தொடர்ந்தே இந்த உத்தரவை நீதிமன்றம் வழங்கியுள்ளது.

நடராஜாரவிராஜ்2006ஆம்ஆண்டுநவம்பர் மாதம் கொழும்பில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். இவரது வழக்கு விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றில் நடைபெற்று, கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம்24ஆம்திகதிதீர்ப்புவழங்கப்பட்டிருந்தது. சிங்களஅறம்கூறும்சபையின்ஏகமனதான முடிவின் அடிப்படையில், கைது செய்யப்பட்ட 5 சந்தேகநபர்களையும் மன்று விடுவித்திருந்தது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக, அரச தலைவர் சட்டத்தரணியும்,நாடாளுமன்றஉறுப்பினருமானஎம்.ஏ.சுமந்திரனால்மீளாய்வுமனுவும்,ந.ரவிராஜின்மனைவியால்மேன்முறையீட்டுமனுவும்தாக்கல்செய்யப்பட்டிருந்தன. மேன்முறையீட்டு மனு நீதிபதிகளான தீபாலி விஜயசுந்தர மற்றும் லலித் ஜெயசூரியமுன்னிலையில்நேற்றுஎடுத்துக்கொள்ளப்பட்டது. ரவிராஜின் மனைவி சார்பில் அரச தலைவர் சட்டத்தரணியும், நாடாளுமன்றஉறுப்பினருமானஎம்.ஏ.சுமந்திரன் மற்றும்நிரான்அங்கிரல்ஆகியோர்முன்னிலையாகினர். சட்டமாஅதிபர்சார்பில்ரொகந்த அபயசூரிய முன்னிலையானார்.

முதன்மைச் சந்தேக நபரான நேவி சம்பத், வழக்கின் கடந்த தவணைகளின்போதும் முன்னிலையாகவில்லை. இதனைத் தொடர்ந்துஅவரது உத்தியோகபூர்வமுகவரிக்கு வழக்கில் முன்னிலையாகுமாறு பதிவுத் தபால் அனுப்பப்பட்டிருந்தது. அந்தப் பதிவுத்தபால்பெற்றுக்கொள்ளப்பட்டதுஎன மன்றில்நேற்றுத்தெரிவிக்கப்பட்டது. இதன் பின்னரும் அவர் மன்றில் முன்னிலையாகாததைத் தொடர்ந்து அவருக்குப் பிடியாணைபிறப்பித்துநீதிமன்றம்உத்தரவிட்டது. வழக்கு செப்ரெம்பர் 6ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்படும். (த-5)

### வித்தியா கொலை வழக்கு:

## விஜயகலா தொடர்புடைய காணொலி குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 28
புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கின் முதன் மைச் சந்தேகநபரான சுவிஸ் குமாரைப் பொதுமக்கள் மின்கம்பத்தில் கட்டி வைத்திருந்தபோது, இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் அங்கு பிரசன்னமாகிய துடன், தொடர்புடையதாக மன்றில் காண்பிக்கப்பட்ட காணொலி தொடர்பில், குற்றப் புலனாய்வுப் பிரிவி

>> 25

## காணொலிகள்
## NEWUTHAYAN.COM


22 கிலோ கஞ்சா அல்வாயில் சிக்கியது


நல்லூர் ஆலய கொடிச்சீலை கொண்டுவரும் நிகழ்வு


துப்பாக்கிச் சூட்டின் இலக்கு நானே இளஞ்செழியன் திடம்


நல்லூர் சூட்டுச் சம்பவம்: சந்தேக நபருக்கு மறியல்


பொலிஸ் உப பரிசோதகரின் இறுதி நிகழ்வுகள்

## விடுதலைப் புலிகளின் தியாகங்களுக்குக் கிடைத்த அங்கீகாரமே தடை நீக்கம்

### அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான அமைப்பின் தலைவர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 28
தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்று நீக்கியமை, தமிழ் மக்களுக்காக அவர்கள் செய்த தியாகத்துக்குப் பன்னாட்டு ரீதியில் அங்கீகாரம் கிடைத்துள்ளதை எடுத்துக் காட்டுகிறது. இந்த வெற்றியை நோக்கி தமிழ்அரசியல்தலைமைகளும், தமிழ்மக்களும் பயணிக்க வேண்டும்.

இவ்வாறுஅரசியல்கைதிகளைவிடுவிப்பதற்கான அமைப்பின்தலைவர் வண பிதா சக்திவேல் தெரிவித்தார்.

காணாமல்ஆக்கப்பட்டவர்களைத்தேடும்உறவினர்களால் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்படும் தொடர்போராட்டத்தில் அவர் நேற்றுக் கலந்து கொண்டார். அங்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றின் தீர்மானத்தை சில இனவாதிகள் எதிர்க்கக் கூடும். அதற்காக வீதியில் இறங்கிப் போராடவும் முடிவு செய்வார்கள். தமிழ் மக்கள் தமது அரசியலுக்காக ஒன்றித்துக் குரல் கொடுக்க வேண்டும். புலிகள் மீதான தடையை நீக்கியது தமிழ் மக்களுக்காக விடுதலைப்புலிகள் செய்த தியாகங்களுக்கு பன்னாட்டு ரீதியில் அங்கீகாரம் கிடைத்துள்ளதை உணர்த்துகிறது. இது எமக்குக் கிடைத்த வெற்றி.

தமிழ் அரசியல் வாதிகள் தமது சுயநல அரசியல் இலாபங்களுக்காக, பல்வேறு சலுகைகளுக்காக அரசுடன் ஒன்றித்து உள்ளனர். இந்த நிலை மாற வேண்டும். விடுதலைப் புலிகளின் தேசிய அரசியல் நிலைப்பாட்டை மீண்டும் எடுத்தால் மட்டுமே தமிழ் மக்களுக்கு எதிர்காலம் உண்டு. தமிழ் மக்களுக்கு விடுதலை உண்டு.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த 8 வருடங்களாகதமது உறவுகளைத்தேடிக் கொண்டிருக்கிறார்கள். வீதியில் இறங்கிப் போராடுகிறார்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்று கூற மறுக்கிறார்கள். அரசு வழங்கிய வாக்குறுதிகளையும் நிறைவே ற்றவில்லை என்றார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் நீதிமன்ற ஆயம் விடுதலைப்புலிகள்மீதானதடையைநேற்றுமுன்தினம்நீக்கித்தீர்ப்பளித்தது. விடுதலைப்புலிகளின் நிதியைத்தொடர்ந்துமுடக்கிவைக்கும்உத்தரவையும் ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்ற ஆயம் நீக்கி உத்தரவு பிறப்பித்தது. 2009 ஆம் ஆண்டின் பின்னர் இராணுவத் தோல்விக்குப் பின்னரான காலப்பகுதியில்விடுதலைப்புலிகள்இயக்கம்அபாயகரமானதாக்குதல்கள்நடத்தியமைக்கானஆதாரங்களைச் சமர்ப்பிக்க ஐரோப்பிய ஒன்றியம் தவறியிருந்தது. அதையடுத்தே இவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ந-ஜ-6)

## துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்: சட்டத்தரணிகள் கவனவீர்ப்பு




ஹற்றன், ஜூலை 28
யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியனை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டது என்று கருதப்படும்தாக்குதல்சம்பவத்துக்குக்கண்டனம் தெரிவித்து ஹற்றன் நீதிமன்றச் சட்டதரணிகள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.

நீதிமன்ற வாளகத்தில் நடத்தப்பட்ட போராட்டம் சுமார் அரை மணி நேரம் இடம்பெற்றது. 25க்கும்மேற்பட்டசட்டத்தரணிகள்கவனவீர்ப்பில் கலந்து கொண்டனர். துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த உப பொலிஸ் பரிசோதகர்ஹேமச்சந்திரவுக்குஅஞ்சலி செலுத்தினர்.

"நீதித்துறைக்குஎதிரானதாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம்" என்மும்மொழிகளிலும்எழுதப்பட்ட பதாகைகளைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கைகளில் ஏந்தியிருந்தனர். போராட்டம் முடிந்த பின்னர் நேற்று நீதிமன்றச் செயற்பாடுகளில் இருந்தும் அவர்கள் விலகியிருந்தனர்.

கடந்த சனிக்கிழமை யாழ். நல்லூர் பின் வீதியில் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியனின் வாகனத்தை மறித்து நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில்நீதிபதியின்மெய்ப்பாது காவலர்களில்ஒருவர்உயிரிழந்தார். மற்றொருவர்காயமடைந்தார். (ந-ஜ)

## உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச சட்ட வரைவு; ஓகஸ்ட்டில் விவாதம்

கொழும்பு, ஜூலை 28
உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டவரைவு அடுத்த மாதம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

>> 25

### நீதிபதி இளஞ்செழியன் மீதான தாக்குதலுக்கு நீதி கோரி

## கிளிநொச்சியில்நேற்றுக்கவனவீர்ப்பு

கிளிநொச்சி, ஜூலை 28
யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் மீது நடத்தப்பட்டது என்று கருதப்படும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக மு.ப. 10 மணியளவில் கவனவீர்ப்புப் போராட்டம் ஆரம்பமானது.

"நீதிபதி இளஞ்செழியன் நல்லிணக்கத்தின் காவலன், நீதிபதியை அச்சுறுத்துவது நீதித்துறையையே அச்சுறுத்துவதாகும், இளஞ்செழியன் மனித நேயத்தின் அடையாளம், நீதித்துறைக்கே சாவுமணி, நீதிபதிகளின் பாதுகாப்பே நீதிபதியின் பாதுகாப்பாகும், சட்டமா அதிபர் திணைக்களமே வழக்குகளைத்தாமதப்படுத்தாதே,"போன்றவாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர்.

"நல்லூரில் கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்டதுப்பாக்கிசூட்டுச்சம்பவத்தில்உண்மைகளை மறைக்க முயற்சிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் நீதியான முறையில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்." என்று வலியுறுத்தினர்.

காணாமல்ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும்வலியுறுத்திஅவர்களின் உறவினர்கள் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக தொடர் போராட்டம் நடத்துகின்றனர். அவர்களின் போராட்டம் 158ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

(ந-ஜ-6)



## பரீட்சை முடிந்ததும் டெங்கு ஒழிப்பு பணி

### ஒரு மணி நேரத்துக்கு வடக்கில் கிடுகுப்பிடி

யாழ். ஜூலை 28
"வடக்குமாகாணபாடசாலைகளில் டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகள்பரீட்சைமுடிந்தவுடன் இன்று முன்னெடுக்கப்படவேண்டும். நாளைமறுதினம்சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் குறித்த நேரத்தில் இது முன்னெடுக்கப்பட வேண்டும்"

இவ்வாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்செ.உதயகுமார் தெரிவித்தார். இதுதொடர்பில்அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாடசாலைகளில் மூன்று நாள்களும் பாடசாலைச்சமூகத்தினர் டெங்கு ஒழிப்பில் ஈடுபட வேண்டும் என்றுகொழும்புஅரசு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. அதனை நாம் வடக்கு மாகாணத்தில் உள்ளபாடசாலைகளுக்கு அனுப்பியுள்ளோம். பாடசாலைச் சமூகங்கள்கட்டாயம்டெங்கு ஒழிப்புப்பணியைமுன்னெடுக்க வேண்டும்.

பாடசாலைகளில் இரண்டாந் தவணைப் பரீட்சைகள்தற்போது இடம்பெறுகின்றன. காலையில் பரீட்சைகள் ஆரம்பமாகி 11.30 மணிக்குநிறைவடைந்த பின்னரே ஒரு மணித்தியாலம் டெங்கு ஒழிப்பில் ஈடுபடவேண்டும் - என்றார். (4, ரி)

## தென்மராட்சி வலயத்தில்
# மாணவர் நாடாளுமன்றங்களின் அமர்வுகளில் 600 பிரச்சினைகள்
### உறுப்பினர்களால் முன்வைப்பு

தென்மராட்சி.ஜூலை 28
தென்மராட்சி வலயத்தில் 23 பாடசாலைகளில் நடந்த மாணவர் நாடாளுமன்ற அமர்வுகளில் 600 இற்கும் மேற்பட்ட குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன என்று தென்மராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தினர் தெரிவித்தனர். அங்கு பார்வையாளர்களாகச் சென்ற பெற்றோர்களால் ஒரு சில குறைபாடுகள் தீர்க்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் உருவாக்கப்பட்ட மாணவர் நாடாளுமன்ற செயற்பாடுகள் தற்போது பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளன என்று வலயத்தினர் கூறினர்.

இதனூடாகப் பல பாடசாலைகளுக்கு உதவிப் பொருள்கள் பொது மக்களிடமிருந்து கிடைக்கின்றன என்று பாடசாலைகளின் அதிபர்கள் தெரிவித்தனர்.

"வலயத்தில் 23 பாடசாலைகளில் மாணவர் நாடாளுமன்றங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. பொது மக்கள் தாமாகவே முன்வந்து பாடசாலைகளுக்குத் தேவையான பொருள்களை வழங்கி வருகின்றனர்.

மாணவர் நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் பாடசாலையின் தேவைகள் பற்றிய விவாதங்கள் பெற்றோரைச் சென்றடைகின்றன. மாணவர் நாடாளுமன்ற அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் பொது மக்களிடம் தமது பாடசாலையின் தேவைகள் தொடர்பாகத் தெரிவித்து உதவி கோரி வருகின்றனர். அதனால் பாடசாலைகளில் காணப்பட்ட தேவைகள் மாணவர் நாடாளுமன்றங்களின் உதவியுடன் கிடைத்து வருகின்றன.

மாணவர் நாடாளுமன்றின் செயற்பாடுகள் கிராம மட்டத்தில் வரவேற்பினைப் பெற்றுள்ளதால் புலம்பெயர்நாடுகளிலிருந்து சொந்த இடங்களுக்கு வருகை தந்துள்ளவர்கள் பாடசாலைகளின் குறைகளைக் கேட்டறிந்து உதவிகளை வழங்கி வருகின்றனர்" என்று அதிபர்கள் மேலும் தெரிவித்தனர்.

கடந்த வாரம் தென்மராட்சி கல்வி வலய மாணவர் நாடாளுமன்ற கன்னி அமர்வில் மாணவர் நாடாளுமன்ற அமைச்சர்களால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளை நிகழ்வுக்கு வருகை தந்திருந்த மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஏற்றுக் கொண்டார்.

பாடசாலைகளின் தேவைகள் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமென உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4 ,9)

## மோ.சைக்கிள், அலைபேசி வாங்கிக் கொடுத்து பெற்றோரே பிள்ளைகளைக் கெடுக்கின்றனர்

### வாள்வெட்டு வழக்கில் யாழ்.நீதிவான் காரசாரம்

யாழ்ப்பாணம், ஜூலை 27
"பிள்ளைகளை ஒழுங்காக வளர்க்க வேண்டியது பெற்றோரின் கடமை. கல்வி கற்கின்ற காலப்பகுதியில் பிள்ளைகளுக்கு மோட்டார் சைக்கிள்கள், அலைபேசிகளை வாங்கிக் கொடுத்துப் பெற்றோர்களே பிள்ளைகளைப் பாழாக்குகின்றனர்"

இவ்வாறு யாழ்ப்பாண நீதிவான் மன்ற நீதிவான் சி. சதீஸ்தரன் தெரிவித்தார்.

நல்லூர் அரசடிப் பகுதியில் கடந்த ஜனவரியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 7 பேர் மறியலில் உள்ளனர். அவர்களது வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.

மோட்டார் சைக்கிள்களில் வாள்களுடன் சென்ற 10 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் கடையைத் தாக்கிப் பெற்றோல் குண்டும் வீசினர். கடை யில் நின்றிருந்த இருவரை வெட்டினர். காயமடைந்த இருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். சாலையால் பயணம்செய்தவர்களையும் அந்தக் கும்பல் வாள்களை வீசி அச்சுறுத்தியது.

சம்பவம் அங்கிருந்த கண்காணிப்புக் கமராவில் பதிவாகியது. அந்தக் காட்சிகள் ஊடகங்களில் வெளியாகின.

சம்பவம் இடம்பெற்று ஒரு வாரத்தின் பின்னர் 5 சந்தேகநபர்களை யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்தனர். மேலும் இருவரைக் கொழும்பு கொட்டாஞ்சேனையில் வைத்து சம்பவம் இடம்பெற்று இரண்டு வாரங்களின் பின்னர் கைது செய்தனர். 7 பேரும் தொடர்ச்சியாக 7 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களின் பிணை மனு நேற்றுமுன்தினம் பரிசீலிக்கப்பட்டது.

4 சந்தேகநபர்களினது பெற்றோரை அழைத்த நீதிவான் "பிள்ளைகளை ஒழுங்காக வளர்க்க வேண்டியது பெற்றோரின் கடமை. கல்வி கற்கின்ற காலப்பகுதியில் மோட்டார் சைக்கிள்கள், அலைபேசிகளை வாங்கிக் கொடுத்துப் பெற்றோர்களே பிள்ளைகளைப் பாழாக்குகின்றனர். இந்தச் சந்தேகநபர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டே நீதிமன்றம் பிணை வழங்கிப் பெற்றோரிடம் ஒப்படைக்கின்றது. இவர்கள் இனியும் குற்றச் செயல்களில் ஈடுபட்டு நீதிமன்றுக்கு கொண்டு வரப்பட்டால் நீதிமன்றிடம் கருணையை எதிர்பார்க்க வேண்டாம்" என்று கடுமையாக எச்சரித்தார்.

நான்கு சந்தேகநபர்களும் தலா இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு அரச உத்தியோகத்தர்களின் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அவர்கள் ஒவ்வொரு திங்கட்கிழமையும் நீதிமன்றில் கையொப்பமிட வேண்டுமெனவும் கடவுச்சீட்டுக்களை நீதிமன்றில் ஒப்படைக்க வேண்டும் எனவும் நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த வழக்கிலுள்ள ஏனைய மூன்று சந்தேகநபர்களுக்கும் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலை நீடிக்குமாறும் நீதிவான் சி. சதீஸ்தரன் உத்தரவிட்டார். (4,103)

# பெண்ணை ஏமாற்றி மணம் முடித்த தென்பகுதி ஆசாமி மீது வழக்கு

சாவகச்சேரி, ஜூலை 28
முதல்திருமணம்சட்டப்படிநடைமுறையுள்ள போது, மற்றொரு பெண்ணை ஏமாற்றித் திருமணம் முடித்த குற்றச்சாட்டில் தென்பகுதியைச்சேர்ந்த குடும்பத்தலைவருக்கு எதிராக சாவகச்சேரிநீதிவான்மன்றில்வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பெண்ணொருவரை சட்டப்படி திருமணம்செய்தகுடும்பத்தலைவர், தொழில் நிமிர்த்தம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து போயுள்ளார். இந்தப் பயணத்தின் போது, அவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்ணொருவரைக் காதலிப்பதாகக் கூறியுள்ளார். அந்தப்பெண்ணும்தனதுபெற்றோரின் சம்மதத்துடன், அவரைத் திருமணம் செய்துகொண்டுள்ளார்.

இருவருக்கும் இடையே இடம்பெற்ற பதிவுத் திருமணத்தின் போது, பெண்ணின் பெற்றோரால் அந்தக் குடும்பத்தலைவருக்கு 4 லட்சம் ரூபா பணமும் தங்க நகைகளும் சீதனமாக வழங்கப்பட்டுள்ளது. இருவரும் சில நாட்களே சேர்ந்து வாழ்ந்த நிலையில் அந்த குடும்பத்தலைவர் ஏற்கனவே பதிவுத் திருமணம் செய்துள்ளார் என்ற விடயம் அந்தப் பெண்ணுக்குத் தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில் தன்னை ஏமாற்றித் திருமணம் முடித்தார் என்று அந்தப் பெண் பொலிஸ் முறைப்பாடு செய்தார். அதுதொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், குடும்பத்தலைவருக்கு எதிராக சாவகச்சேரி நீதிவான் மன்றில் வழக்குத்தாக்கல் செய்தனர். அந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

" இந்த வழக்கின் எதிரி முதலவதாகத் திருமணம் செய்த பெண்ணை பிரிந்து வாழ்கின்றார். முதலாவதுமனைவியை மணநீக்கம் செய்வதற்காக அவர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளார்" என்று எதிரி தரப்புச் சட்டத்தரணி மன்றில் விண்ணப்பம் செய்தார்.

எதிரி தரப்பு விண்ணப்பத்தை ஏற்க மறுத்த முறைப்பாட்டாளரான பெண்ணின் பெற்றோர் தாம் கொடுத்த நகைகளையும் பணத்தையும் எதிரியிடமிருந்து மீளப் பெற்றுத் தருமாறு நீதிமன்றில் கோரினர்.

சீதனமாகக்கொடுக்கப்பட்ட மூன்றுகாப்புக்களில் ஒன்று நேற்று நீதிமன்றில் ஒப்படைக் கப்பட்டது. மிகுதி 2 காப்புக்கள் அடகு வைத்தமைக்கான பற்றுச்சீட்டும் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

சீதனமாகப் பெற்ற 4 லட்சம் ரூபாவை விரைவில் மீளச்செலுத்துமாறு எதிரிக்கு நீதிமன்று உத்தரவிட்டது. (வ-4, 9)

# பாலில் தண்ணீர் கலக்கப்படவில்லை

### மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவு சங்கத்தின் பொதுமுகாமையாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 28
கொக்குவில் பால் சங்கத்தில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் பாலில் குடிதண்ணீர் கலக்கப்படவில்லை. சம்பவம் நடைபெற்ற தினத்தில் முகாமையாளர் தாமதமாக வந்தமையினால் பால் பரிசோதனைக் கருவியை பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனாலேயே அங்கு குழப்பநிலை ஏற்பட்டது. இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

கொக்குவில் பகுதியில் இயங்கி வரும் பால் சங்கத்தினருக்கும் அந்தப் பகுதியைச் சேர்ந்த சிலருக்குமிடையே கடந்த செவ்வாய்க்கிழமை முறுகல் நிலையேற்பட்டது. அந்தச் சங்கத்தில் கொள்வனவு செய்யப்படும் பாலில் தண்ணீர் கலக்கப்படுகிறது என குற்றம்சாட்டி வாடிக்கையாளர்கள் சிலர் அங்கு பணிபுரிபவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளரால் அனுப்பிவைக்கப்பட்ட செய்திக்குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது, "எமது சங்கத்தின் கிளைகளில் பால் கொள்வனவு செய்யப்படும் போது அதில் கொழுப்பின் அளவு மற்றும் நீர் கலக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் நவீன உபகரணங்கள் மூலம் பரிசோதிக்கப்படுகின்றன. சம்பவம் நடைபெற்ற தினத்தில் பொது முகாமையாளர் தாமதமாகக் கடமைக்கு வந்துள்ளார். முகாமையாளர் வருவதற்கு முன்னதாக அங்கிருந்த உதவியாளர் நவீன பால்பரிசோதனைகருவியை பாவிக்கும் திறனற்றவராக காணப்பட்டதால் அவர் பால் அடர்த்திமானி மூலம் பாலைக் கொள்வனவு செய்துள்ளார். இவ்வாறான நிலையிலேயே அங்கு குழப்பநிலை ஏற்பட்டுள்ளது. குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய முகாமையாளரை தற்காலிகமாக இடமாற்றம் செய்துள்ளோம். அங்குள்ள வாடிக்கையாளர்களுடன் கலந்துரையாடியுள்ளோம். வாடிக்கையாளர்கள் கொள்வனவு செய்யும் பால் தரக்குறைவானது எனக் கருதும் பட்சத்தில் 0213212926,0776181889 என்ற தொலைபேசி இலக்கங்களுடன்தொடர்புகொண்டு முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும். அவ்வாறு முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் நாம் முறையான நடவடிக்கை எடுப்போம். என்றுள்ளது. (21.8)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# வீடுடைத்துக் கொள்ளையிட்ட இளைஞனுக்கு 2 வருடக் கடூழியம்

## யாழ்ப்பாணம் நீதிவான் மன்று தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28
இரவு நேரம் வீட்டை உடைத்துக் கொள்ளையில் ஈடுபட்ட கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த இளைஞனுக்கு 2 வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து யாழ்ப்பாணம் நீதிவான் மன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.
கடந்த ஜனவரி மாத ஆரம்பப் பகுதியில் திருநெல்வேலி கிழக்குப் பகுதியிலுள்ள வீடொன்றை இரவு நேரம் உடைத்த அந்த இளைஞன் அங்கிருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.
விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மறுநாள் அந்த இளைஞனைக் கைது செய்ததுடன் அவரிடமிருந்து கொள்ளையிட்ட பொருள்களையும் மீட்டனர். அத்துடன் இளைஞனையும் நீதிமன்றில் முற்படுத்தினர். இளைஞன் தனக்கெதிரான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டார்.
யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று இந்த வழக்கு தண்டனைத் தீர்ப்புக்காக அழைக்கப்பட்டது. இளைஞன் தன் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதுக்கு அமைவாக குற்றவாளிக்கு 2 வருட கடூழியச்சிறைத்தண்டனைவிதித்து நீதிவான் தீர்ப்பளித்தார்.
(வ-103)

# நந்தகுமார் மீளவும் கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜூலை 28
வடமராட்சிக் கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளராக மீண்டும் சி.நந்தகுமார் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது கடமைகளை இன்று பொறுப்பேற்பார்.
வடமராட்சிக் கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் ஓய்வு பெற்றுள்ளார். ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு மாகாண கல்வி அமைச்சால் விண்ணப்பம் கோரப்பட்டது. விண்ணப்பித்தவர்களுக்கு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. நேர்முகத் தேர்வில் சி.நந்தகுமார் முதலிடம் பெற்றுள்ளார். அவருக்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் நியமனம் வழங்கியுள்ளார்.
வடமராட்சிக் கல்விப் பணிப்பாளராக சி.நந்தகுமார் முன்னர் பணியாற்றியிருந்தார். பின்னர் அவர் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் மீளவும் வடமராட்சி கல்விப் பணிப்பாளராக அவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
இதேவேளை, வடக்கு மாகாண முதலமைச்சரால், அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரிக்க அமைக்கப்பட்ட விசாரணைக் குழு, வடமராட்சிக் கல்விப் பணிப்பார் சி.நந்தகுமாரின் இடமாற்றம் தொடர்பில் விசாரணை நடத்தியிருந்தது. (வ-5,101,173)

# மதிப்புறுத்தும் நிகழ்வு

தென்மராட்சி, ஜூலை 28
கெற்பேலி அ.த.க. பாடசாலைக்கு காணியை அன்பளிப்பாக வழங்கிய ஐவரை மதிப்புறுத்தும் நிகழ்வு இன்றுமு.ப.10மணிக்குபாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய கல்வி அபிவிருத்திப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதன் முதன்மை ஆசிரியர் சு.செல்வராசா ஆகியோர் கலந்து கொள்வர்.
1960ஆம்ஆண்டுபாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. நன்கொடையாளர்கள் அண்மையில் பாடசாலைக்குரிய காணி உறுதியை பாடசாலை நிர்வாகத்திடம்கையளித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

• • •

கடந்த வருடம் நடந்த ஜீ.சீ.ஈ. சாதாரணதரப்பரீட்சையில்யாழ்பிராந்தியத்தில்9ஏபெறுபேறுபெற்றமாணவர்களைக் மதிப்புறுத்தும் நிகழ்வு நாளை இடம்பெறவுள்ளது.
பலாலி பாதுகாப்புப் படைகளின் தலைமையகம் இதனை ஏற்பாடு செய்துள்ளது. யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளது என்று பாதுகாப்புத் தலைமையகம் அறிவித்தது. (4)

# சாரதிகளுக்கு விளக்க மறியல்

தென்மராட்சி, ஜூலை 28
அனுமதிப்பத்திரமின்றிமணல்ஏற்றிய வாகனச் சாரதிகள் இருவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
சாவகச்சேரிபொலிஸாரால்சாவகச்சேரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டவழக்குநேற்றுவிசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்குகளைவிசாரித்த நீதிவான் சாரதிகள் இருவரையும் விளக்க மறியலில் வைக்குமாறுஉத்தரவிட்டார்எனத்தெரிவிக்கப்பட்டது.
அத்துடன் ஒருவரை கைகளாலும் கற்களாலும் தாக்கி காயப்படுத்திய மூவரை விளக்க மறியலில் வைக்குமாறும் நீதிமன்று உத்தரவு பிறப்பித்தது. (ற-9)

# கொடியேற்றம்

புங்குடுதீவு பெருங்காடு கோயில்வலம் முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
எதிர்வரும் 5 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் மறுநாள் நண்பகல் 12 மணிக்கு தேர்த் திருவிழாவும் 7 ஆம் திகதி மு.ப 11.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

# நல்லூரான் பதியில் ஆன்மிக நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 28
யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷனால் ஆன்மீக நிகழ்வுகள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.
ஆன்மீக அருளுரை எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 21ஆம் திகதி திங்கட்கிழமை வரை சின்மயா மிஷன் மண்டபத்தில்பல்வேறுதலைப்புக்களின் கீழ் இரவு 7.15 தொடக்கம் 8 மணிவரை நடைபெறவுள்ளது.
அத்துடன் "எனது மனம் எனது பலம்"என்னும்கருப்பொருளிலான கண்காட்சியும்சின்மயாமிஷனில் மாலை 4 மணி தொடக்கம் 9 மணி வரை இடம்பெறும்.
திருவிழாக் காலத்தில் மு.ப. 10.45 தொடக்கம்11.45வரையில்சுவாமி உள் வீதி உலா வரும் போதும் மாலை 6 மணி தொடக்கம் 7 மணி வரை சுவாமி வெளி வீதி உலா வரும் போதும் ஆராதனைகள் இடம்பெறும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (வ-ரி)

## நூல் வெளியீடு

சுன்னாகம் கலைஇலக்கியச் சங்கத்தின்முதல் வெளியீடாக கலாபூசணம் சு.துரைசிங்கத்தின் அரும் பண்பாட்டுக்கோலங்கள்நூல்வெளியீட்டுவிழா நாளை சனிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு இடம்பெறும்.
சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோவில் திருமண மண்டபத்தில் சங்க உபதலைவர் மருத்துவர் அ.ஜெயக்குமாரன் தலைமையில் இது நடைபெறவுள்ளது.
வரவேற்புரையினை சுன்னாகம் கலைஇலக்கியச் சங்க நிர்வாக உறுப்பினர் வி.அமிர்தலிங்கமும், வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக தொல்லியல்துறைத் தலைவர் பேராசிரியர் ப.புஸ்பரத்தினமும் வழங்குவர். (4)

## நீதிமன்றின் ஆணைக்கு அமைவாக

# மருதடி விநாயகர் ஆலயம் பெறுநர் குழுவால் கையேற்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28
மல்லாகம் மாவட்ட நீதிமன்றின் ஆணைக்கு அமைவாக மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் பெறுநர் குழுவால் கையேற்கப்பட்டுள்ளதாக, சண்டிலிப்பாய்ப்பிரதேச செயலர் திருமதி யு.யசோதா அறிவித்தார்.
"மல்லாகம் மாவட்ட நீதிமன்றின் ஆணையின்பிரகாரம்மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் பெறுநர்களாக மல்லாகம் மாவட்ட நீதிமன்றின்பதிவாளர், இந்துக்குருமார் ஒன்றியத்தின் 2 மூத்த குருக்கள், யாழ்ப்பாண மேலதிக மாவட்டச் செயலர், வலி.தென்மேற்குப் பிரதேச செயலாளர், யாழ்ப்பாண மாவட்டச் செயலகக் கணக்காளர் ஆகியோர் நியமிக்கப்பட்டுனர்" என்று சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார்.
(வ-5)

# கோயில் நகைகளை மோசடி செய்த பொருளாளருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம் ஜூலை 28
கோயில் நகைகளை மோசடி செய்த குற்றச்சாட்டில் கோயில் பொருளாளர் ஒருவர் யாழ்ப்பாணசிறப்புக் குற்றத் தடுப்பு பிரிவினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.
அவர் யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்ட போது எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.
யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் உள்ள கோயிலுக்கு அடியவர்கள் நகைகள் வழங்கினர். அவற்றைப் பொருளாளர் வங்கியில் அடகு வைத்து கோயில் கணக்கில் வரவு வைத்துவிட்டுத் தனது சொந்தத் தேவைக்குப் பணத்தைப் பயன்படுத்தியுள்ளதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.
கட்டம் கட்டமாக 2014 ஆம் ஆண்டிலிருந்து அவர் முப்பது இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளைக் கையாடியதாகக் கோவிலில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு நடவடிக்கையின் போது தெரிய வந்ததாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.
விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகநபரை நேற்றுமுன்தினம் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர்.
அவரை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார்.
(4 ,103)

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 300 | 500 | 300 |
| கணவாய் | 600 | 800 | 800 | 1000 |
| பாரை | 500 | 700 | 600 | 700 |
| சுறா | 500 | 700 | 800 | – |
| சீலா | 400 | 200 | 500 | 400 |
| விளை. | 600 | 500 | 600 | 600 |
| முரல் | 400 | 500 | 400 | 500 |
| கும்பிளா | 400 | 400 | 500 | 600 |
| கிளாக்கன் | 800 | – | 600 | – |
| ஓரா | 350 | 400 | 500 | 500 |
| திரளி | 300 | 200 | 300 | 200 |
| நகரை | 550 | 150 | 400 | – |
| சூடை | 150 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 200 | 300 | 300 | 300 |
| திருக்கை | 300 | 250 | 400 | – |
| மதனம் | 200 | 200 | 300 | 500 |
| கொய் | 150 | 60 | 80 | 100 |
| பாலை | 250 | 250 | 400 | 500 |
| வாழை | 150 | – | 300 | – |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 120 | 60 | 80 | 60 |
| கத்தரி | 100 | 150 | 140 | 160 | 140 |
| மரவள்ளி | 70 | 80 | 80 | 60 | 70 |
| பயிற்றை | 120 | 100 | 120 | 120 | 120 |
| பாகல் | 180 | 350 | 200 | 160 | 180 |
| க.கிழங்கு | 140 | 130 | 120 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 90 |
| சி.வெங்காயம் | 150 | 180 | 200 | 200 | 120 |
| பூசணி | 100 | 100 | 100 | 120 | 100 |
| தக்காளி | 100 | 150 | 160 | 140 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 80 | 60 |
| கீரை | 25 | 30 | 40 | 15 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 500 | 400 | 200 | 300 | 200 |
| புடோல் | 100 | | 80 | 80 | 80 |
| கோவா | 140 | 150 | 160 | 120 | 120 |
| வெண்டி | 100 | 120 | 100 | 100 | 100 |
| போஞ்சி | 160 | 160 | 200 | 160 | 160 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 120 | 120 |
| தேங்காய் | 60 | 55 | 58 | 60 | 60 |
| உ.கிழங்கு | 100 | 120 | 120 | 100 | 100 |
| தேசிக்காய் | 70 | 80 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 240 | 270 | 180 | 220 |
| கரட் | 200 | 280 | 280 | 180 | 220 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 200 | 100 | 200 |

# மணல் கடத்திய சாரதிக்கு 25,000 தண்டம்

தென்மராட்சி, ஜூலை28
சிறு உழவு இயந்திரத்தில் (லாண்ட் மாஸ்ரர்) சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்று 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தது.
தனன்களப்பிலிருந்து மட்டுவிலுக்குச் சட்ட விரோதமாக மணல் கொண்டு சென்றபோது சாவகச்சேரிப் பொலிஸார் அவரைக் கைது செய்தனர். வழக்குத் தொடர்ந்தனர். வழக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.
சந்தேகநபர் குற்றத்தை ஏற்றுக்கொண்டார். அவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
இது தவிர, அனுமதிப் பத்திரமின்றி வீடுகளில் அளவுக்கு அதிகமாகக் கள் வைத்திருந்த 10 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்று தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதித்தது.
சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் இந்த வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தனர். (4,9)

### வடக்கு மாகாணத்துக்கென

# கால்நடைப் போதனாசிரியர் பயிற்சிக்கு 56 பேர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 28
வடக்கு மாகாண கால்நடை சுகாதார உற்பத்தித் திணைக்களத்தின் தரம் III போதனாசிரியர் வெற்றிடங்களுக்கென 56 பேர் நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட்டனர். அவர்களுக்கான பயிற்சிகள் கொழும்பில் வழங்கப்படவுள்ளன. பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது.
வடக்கு மாகாண கால்நடை சுகாதார உற்பத்திகள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் எஸ்.வசீகரன் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாண கால்நடை சுகாதார உற்பத்தித் திணைக்களத்தின் தரம் III போதனாசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணம் கோரப்பட்டது. நேர்முகத்தேர்வுக்கு வந்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகக் காணப்பட்டது. எனவே பயிற்சி நெறி மூலமாக உத்தியோத்தர்களை உள்வாங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.
ஆரம்பத்தில் வடக்கு மாகாண கால்நடை சுகாதார உற்பத்திக் திணைக்களத்தின் தரம் III போதனாசிரியர்களுக்கான 94 வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன.
நான்கு விண்ணப்பங்களே கிடைத்தன. நால்வரையும் நேர்முகம் செய்திருந்தோம். ஒருவர் உடற்தகுதி இல்லாத காரணத்தினாலும், மற்றொருவர் ஒரே தடவையில் உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் மூன்று பாடங்களிலும் சித்தி பெறாததாலும் நிரா கரிக்கப்பட்டனர். இரண்டு பேரைத் தெரிவு செய்து நியமனம் வழங்கப்பட்டது.
மீதமாக உள்ள 92 போதனாசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. கொழும்பு கால்நடை சுகாரதார உற்பத்திக் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் துறைசார்ந்த விஞ்ஞானக் கற்கைநெறி டிப்ளோமாவைப் படிப்பவர்கள் மிகக் குறைவு. உயிரியல் பிரிவில் உயர் தரத்தில் கற்றுச் சித்தியடை பவர்கள் வேறு கற்கை நெறிகளை நாடிச் செல்கின்றனர்.
இந்தப் பாடநெறியைக் கற்பவர்களின் எண்ணிகை குறைவு. அதனால் தற்போது தரம் III போதனாசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நேர்முகத் தேர்வின் மூலமாகப் பயிற்சியாளராக விண்ணப்பம் மூலமாக 56 பேர் உள்வாங்கப்பட்டனர். அவர்களுக்கு இரண்டு வருட துறை சார்ந்த டிப்ளோமா கற்கையை வழங்கப்படும். பயிற்சிக்கால கொடுப்பனவை வழங்கி பயிற்சி நிறை வடைந்தவுடன் போதனாசிரியர்களாக நியமனம் வழங்கவுள்ளோம்.
அவர்களில் 49 பேர் நேற்றுமுன்தினம் நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர். நியமனக் கடிதத்தை பெறாமல் உள்ளவர்கள் 2 வார காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு பெற்றுக்கொள்ளத் தவறும் பட்சத்தில் அவர்களுக்கான நியமனங்கள் நிராக ரிக்கப்படும்.
நியமனக் கடிதங்கள் பெற்றுக்கொண்டவர்கள் திணைக்களத்தில் பயிற்சி உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றுவர். குறித்த துறை சார்ந்த டிப்ளோமா கற்கை நெறி கொழும்பில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றார். (4, ரி)





யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. ஆலய வீதியில் மணல் பரவி திருவிழாவுக்கான ஏற்பாடுகள் முழு மைப்படுத்தப் பட்டதனை அவதானிக்க முடிந்தது. கோவில் சூழல் கண்கவர் அலங்காரமாகக் காணப்படுகிறது. பக்தர்களின் நன்மை கருதி வீதித் தடைகள் போடப்பட்டுள்ளன. குப்பைகளை போடுவதற்கான குப்பை வாளிகளும் வைக்கப்பட்டுள்ளன. (4,ரி)

# நீதிமன்றிலிருந்து கைதி தப்பி ஓட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 28
திருட்டுக் குற்றச்சாட்டில் யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தப்பட்ட விளக்க மறியல் கைதி தப்பி ஓடிவிட்டார். சிறை அதிகாரிகள் அவரைத் துரத்திச் சென்றபோதும் கைதியைப் பிடிக்கமுடியவில்லை.
யாழ்ப்பாணம் இருபாலையில் பூசாரி வீட்டில் திருடிய குற்றச்சாட்டில் குறித்த நபர் கைது செய்யைப்பட்டு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றினால் ஒரு மாதமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்.
அவர் மீதான வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அவருக்கு மறியல் நீடிக்கப்பட்டது. அதன்பின்னர் குறித்த கைதியை மீண்டும் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லமுற்பட்டபோதே நீதிமன்ற வளாகத்துக்குள் இருந்து தப்பியோடினார். (4,12)

# பீடி புகைத்தோருக்கு ரூ. 2 ஆயிரம் தண்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 28
பொது இடத்தில் பீடி புகைத்த இருவருக்கு தலா ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது சாவக்சேரி நீதிமன்று.
பொதுமக்கள் கூடும் இடங்களில் புகைத்தலுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
அந்தச் சட்ட ஒழுங்கை மீறிக் கொடிகாமம் சந்தையில் புகைப்பிடித்த குற்றஞ்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர். மதுவரித்திணைக்களத்தினர் சந்தையில் இவர்களைப் பிடித்தனர். 28 மற்றும் 55 வயதுடைய இருவருக்கு எதிராகவும் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர். இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தபோது இருவரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டனர். அவர்களை எச்சரித்த நீதிமன்று தலா ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது. (4,9)



முதலாம் திருவீதி

# கொடியேற்றத் திருவிழா

## நல்லூரான் கொடியேறுதே

நல்லையில் தில்லையை
நாளும் கண்டிட நல்லூரான்
கொடியேறுதே
நாடோறும் அவன் புகழ்
பாடிப் பணிந்திட
நாதனின் கொடியேறுதே
தொல்லைதரு வினை மலம்
தொடர்ந்தே யோடிடத்
தோகையனின்
கொடியேறுதே
தும்பிமுகன் தம்பியைத்
துதிபாடத் துணைநாடத்
தூயவனின் கொடியேறுதே
கல்லையொத்த மனங்களும்
உருகிடத் திருந்திடக்
கந்தனின் கொடியேறுதே
கழல்பாடும் கவிதைகள்
கன்னலென கொடியேறுதே
எல்லையிலா அவன் கருணை
எமையாள நாம் வாழ
எழிலோனின் கொடியேறுதே
ஏறுமயில் மீது வந்து
இன்னருள் புரிந்திட
இளையோனின்
கொடியேறுதே!

*தேவி. கணேஸ்,*
*ஆனைப்பந்தி*

## ஒரு ரூபா போதும்

கோடியை எண்ணியே வாழ்பவர் பலர்
கூடிய சொத்தினில் திளைப்பவர் பலர்
மாடியில் வாழ்ந்து உயர்ந்தவர் பலர்
நாடியே நல்லூரில் வணங்காதவர் இலர்

ஆட்சியைப் பிடித்தவரும் வந்திறங்குவர்
ஆனாப் படித்தவரும் கூட வந்திறங்குவர்
சாட்சியாயிருப்பவரும் வந்திறங்குவர்
சகலரும் சமனாகவே விழுந்துவணங்குவர்

ஆயிரமும் கையிலே வைத்திருப்பர் சிலர்
ஐயாயிரமும் கையிலே வைத்திருப்பர் சிலர்
பாயிரமும் கையிலே வைத்திருப்பர் பலர்
பரம ஏழையின் கையிலே முருகன்
நாணயமாயிருப்பார்

ஒரு ரூபா போதும் அதுவும் வேண்டாம்
உண்மையாயிரு அதுவே போதுமப்பா
வரவை எண்ணி கோடியில் மூழ்காதே
வாழவைப்பான் முருகன்
வந்தொருக்கால் கும்பிடு

*கே. எஸ். சிவாஞானராஜா*

## ஆறுதலை அருள்

செந்தமிழ்
வேலனே
சீர்மிகு நல்லூரா
உந்தன்
கருணையே
உய்விக்கும்
கந்தனே
ஏறுகின்ற
உந்தன் எழில்
கொடி காண்பித்து
ஆறுதலைத்
தந்தே அருள்

*வே. இராமர்*




ஆடும் பரி. வேல். அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனி யானைச் சகோதரனே

திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

சிறிநதியா நகை மாளிகை
சிறிநதியா நகைமாளிகை
இல.01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2709
சிறிநதியா நகைமாளிகை
இல.56, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 6744

NSR & நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபம்
NSR திருமண மண்டபம்
No.01, Stanley Road Junction, Jaffna. Tel. 021 222 4452
கிளை: நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபம்
No.01, 465/26, Point Pedro Road, Nallur Jaffna.
Tel. 021 222 4452

சிறிநதியா ஸ்ரூடியோ
No.108A, Luxzsu Plaza Building,
Navalar Road, Jaffna.
Sreenathiyastudio@gmail.com
Tel.: 021 222 8412
Sreenathiya

# விமர்சனம் இருந்தாலும் பயணம் நாகரிகமானது

## வடமாகாண சபை செயற்பாடு பற்றி சீ.வீ.கே கருத்து

யாழ்ப்பாணம், ஜூலை 28
"வடக்கு மாகாண சபை மீது பல விமர்சனங்கள் இருந்தாலும் அவற்றையும் தாண்டி நாம் அனைவரும் நாகரிகத்துடன் பயணித்துக் கொண்டிருக்கிறோம்" இவ்வாறு சபையில் கூறினார், வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே சிவஞானம். வடக்கு மாகாண சபையின் 100 ஆவது அமர்வு கைதடியில் உள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று இடம் பெற்றது. அங்கு சபை அறிவித்தலின் போது இதனைத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை தொடர்பில் வெளியே பல விமர்சனங்கள் இருக்கின்றன. ஆனால் சபையில் நாம் அனைவரும் நாகரிகமாக நடந்துகொண்டிருக்கிறோம். வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எமக்குப் பல சந்தர்ப்பங்களில் ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர். அதற்காக மாகாண சபை சார்பில் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கிறோம்.

மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து பல விடயங்களை நாம் எதுவித வாக்கெடுப்புக்களும் இன்றி ஏகமனதாக நிறைவேற்றி இருக்கின்றோம். உள்நாட்டு போரில் இனப்படுகொலை நடைபெற்றது என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்கினர். அதற்கு நன்றியைத் தெரிவிக்க வேண்டும்.

அந்தத் தீர்மானத்துக்கு உடன்படுவது சிரமம் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறியிருந்தனர். அது தொடர்பில் அவர்களுக்குத் தெளிவுபடுத்திய பின்னர் ஏகமனதாக ஆதரவினை வழங்கியிருந்தனர் - என்றார். (4,8)



### இனிப்பூட்டிய பானங்கள்

★ மறைக்கப்பட்டுள்ள சீனியை இவை அதிகம் கொண்டுள்ளன.
இவற்றை அறிந்து வந்தால் மேலதிக கலோரிகள், உடலில் கொழுப்பாக படிந்து உடல் நிறையை அதிகரிக்கச் செய்கின்றது.
இளம் வயதினரின் உடல் நிறை கூட்டுவதில் இவற்றின் பங்களிப்பே அதிகம்
ஆரோக்கியமான உணவுப் பழக்கமே ஆரோக்கியமான வாழ்வுக்கு வழி சமைக்கும்.

*தகவல்*
*சு.வை.அ.பணிமனை,*
*யாழ்.மாநகர சபை.*



# ஒரு மில்லியன் ரூபா நிதி கிளிநொச்சிக்கு

## வறட்சியை எதிர்கொள்ள கேட்டதில் கால்வாசியே கிடைத்தது

யாழ்ப்பாணம், ஜூலை 28
கிளிநொச்சி மாவட்டத்தில் கடும் வறட்சி காரணமாக 31 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குக் குடிதண்ணீர் விநியோகம் உள்ளிட்ட அவசர பணிகளுக்காக 5 மில்லியன் ரூபா கோரப்பட்டது. முதற்கட்டமாக ஒரு மில்லியன் கிடத்துள்ளது என்று மாவட்ட மேலதிக செயலர் சத்தியசீலன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கிளிநொச்சி மாவட்டத்தின் 4 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 95 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளன. அவற்றில் 31 கிராம அலுவலர் பிரிவுகளில் பல ஆயிரக்கணக்கான மக்கள் வசிக்கின்றனர். கடும் வறட்சியான காலநிலைக்கு ஈடுகொடுக்க முடியாமல் அவர்கள் திண்டாடுகின்றனர். குடிதண்ணீரைப் பெறுவது சவாலான விடயமாகி விட்டது. அவர்களுக்கு எங்களால் இயன்றளவு குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. சில அலுவலர் பிரிவுகளிலுள்ள மக்களுக்குக் குடிதண்ணீர் மட்டுமன்றிப் பிறதேவைகளுக்கான தண்ணீரையும் விநியோகித்துக் கொண்டிருக்கிறோம். அவ்வாறிருந்தும் நாம் முன்னெடுக்கும் பணிகள் போதுமானதாக இல்லை. அதனால் இடர் முகாமைத்துவப் பிரிவுக்கு அறிக்கையிட்டுள்ளோம்.

பிரதேச செயலகங்களின் குடிதண்ணீர் விநியோக வாகனங்களும், பிரதேச சபைகளின் குடிதண்ணீர் வாகனங்களும் பணியில் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டுள்ளன. ஆனால் அவை போதுமானதாக இல்லை. குடிதண்ணீர் விநியோகம் உள்ளிட்ட பணிகளுக்காக 5 மில்லியன் ரூபாவை விடுவிக்குமாறு இடர் முகாமைத்துவ அமைச்சிடம் கோரியிருந்தோம். முதற்கட்டமாக ஒரு மில்லியன் ரூபா கிடைத்தது. மிகுதிப் பணம் விரைவில் வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. இதேவேளை , பாதிக்கப்பட்ட தமக்கு நிவாரணம் வ்ழங்குமாறும் மக்கள் கோரியுள்ளனர். அது தொடர்பிலும் இடர் முகாமைத்துவப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பதில் கிடைக்கவில்லை என்று மேலதிக செயலாளர் தெரிவித்தார். (4 ,101)

## சாலை மின் சமிக்ஞையில் நிற்காதவருக்கு ரூ.1500 தண்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 28
சாலையில் மின் சமிக்ஞையில் வாகனத்தை நிறுத்தாமல் சென்றவருக்கு ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டார். அதனை அடுத்து ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (4,12)

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஜூலை 28
25 வருடங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 1990,91 கல்வியாண்டு கலைப்பீட மாணவர்கள் ஒன்றுகூடவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாண நகர ரில்கோ விருந்தினர் விடுதியில் எதிர்வரும் ஓகஸ்ட் 5ஆம் திகதி இவ்வாறு கூடவுள்ளனர்.

ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் 1989 ஆம் ஆண்டு தேறிய மாணவர்கள் 1991 ஆம் ஆண்டு கல்வியாண்டில் கலை, வர்த்தகம், முகாமைத்துவம், நுண்கலை ஆகியதுறைகளில் கற்றவர்களே இவ்வாறு கூடவுள்ளனர்.

அக்காலப் பகுதியில் பட்டம் பெற்று வெளியேறியவர்கள் தொடர்பான நூல் ஒன்றும் வெளியிடப்படவுள்ளதுஎன்று தெரிவிக்கப்பட்டது. (4, 50)

# வடக்கு மாகாண சபையின் "100 அமர்வுகளும் வீண்"

## எதிர்க் கட்சி உறுப்பினர் தவநாதன் சாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 28
"வடக்கு மாகாண சபையின் நூறு அமர்வுகளும் எந்தவிதமான பயனும் அற்ற நிலையிலேயே நடந்துள்ளன. இனிவரும் அமர்வுகளையாவது ஓரளவேனும் பயனுள்ளதாக நடத்தவேண்டும்" இவ்வாறு வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் குற்றஞ் சாட்டினார்.

வடக்கு மாகாண சபையின் 100 ஆவது அமர்வு அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

"வவுனியா மாவட்டத்தில் ஒருசில விளையாட்டுச் சங்கங்கள் பதிவு செய்யப்படவில்லை. அந்த விடயத்தில் விளையாட்டு உத்தியோகத்தர் பக்கச்சார்பாகச் செயற்பட்டுள்ளார்" என்று குற்றஞ் சாட்டி வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.ஜெயத்திலக தெரிவித்தார். குறித்த உத்தியோகத்தருக்கு எதிராக விசாரணை நடத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

பிரேரணை தொடர்பில் கருத்துக்களைப் பதிவு செய்யும்போதே தவநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

"மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பெரிய தீர்மானங்கள் சில நிறைவேற்றப்பட்டுச் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் மாகாண சபையில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை.

வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து நூற்றுக்கணக்கான பிரேரணைகளை நிறைவேற்றியுள்ளோம்.

எந்தவிதமான பயனும் இல்லாமல் நூறு அமர்வுகளை நடத்தி விட்டோம். 101 ஆவது அமர்விலிருந்தாவது எதாவது பயனுள்ள பணிகளைச் செய்வோம். அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார். (4,8)

# ஒருங்கிணைப்புக் கூட்டங்களின் தீர்மானங்கள் உறங்கு நிலையில்

## மாகாண சபையில் ரவிகரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 28
முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் நிறைவேற்றப் படும் தீர்மானங்கள் பல உறங்கு நிலையிலேயே காணப்படுகின்றனஎன்றுவடக்குமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் குற்றம்சாட்டினார்.

வடக்கு மாகாண சபையின் 100 ஆவது அமர்வு கைதடியில் உள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. அங்கு, முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் தொழிலுக்குச் சென்று வருவதற்கு வெளிச்ச வீடு அவசியம் என்று தெரிவித்து பிரேரணையை முன்மொழிந்தார் ரவிகரன். "மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் கதைக்க வேண்டிய விடயங்களை மாகாண சபையில்பிரேரணையாகக் கொண்டு வந்து நேரத்தை வீணடிப்பதால் பிரேரணை நிறைவேற்றும் சபை என்று சாடுகின்ற நிலைமை ஏற்படுகின்றது"என்றார்உறுப்பினர் பரஞ்சோதி.

பரஞ்சோதியின் கருத்துக்கு பதிலளித்த ரவிகரன் "எமது மாவட்டஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் எடுக்கப்பட்டுள்ள பல தீர்மானங்கள் உறங்கு நிலையிலேயே இருக்கின்றன. மாகாண சபையில்பிரேரணை ஊடாக விரைந்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியே இந்த பிரேரணையை முன்மொழிந்தேன்" என்றார். அதன் பின்னர் பிரேரணை ஏகமனதான ஆதரவுடன் தீர்மானிக்கப்பட்டது. அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டதாவது:

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் காலத்தில் ஆழ்கடல் தொழிலுக்குச் சென்று வெளிச்ச வீட்டின் ஒளியை அடிப்படையாகக் கொண்டு இரவில் கரைதிரும்பினர். பல ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டிருந்த அந்த வெளிச்சவீடு தற்போது அழிவடைந்துள்ளது.

மீனவர்கள் தங்கள் அமைப்புக்களின் ஊடாகப் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும்வெளிச்சவீடுஅமைத்துக் கொடுக்கப்படவில்லை.

இதற்கான வேலைத்திட்டங்கள் துறைமுகங்கள் கப்பல் துறை அமைச்சினாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். சுமார் 73 கிலோமீற்றர் நீளமான முல்லைத்தீவின் கடற்கரையைஅடிப்படையாகக்கொண்டு 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவ குடும்பங்கள் வாழ்கின்றன.

வெளிச்ச வீடு இல்லாததால் மீனவர்கள் திசை மாறிச் சென்றுபலமுறைஅவதிப்பட்டுள்ளனர். வெளிச்ச வீடு அமைத்துத்தர துறை முகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுக்க மகாண சபை வலியுறுத்த வேண்டும்" என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

"முல்லைத்தீவு மாவட்டத்துக்கு மட்டுமல்லாது வடக்கின் அனைத்து மாவட்டங்களுக்கும் கடற்கரையில் வெளிச்ச வீடுகள் அமைக்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வரலாம்" என்று கூறிய அமைச்சர் பா.டெனீஸ்வரன், ரவிகரனின் பிரேரணையைவழிமொழிந்தார்.

"மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைவிட மாகாணசபையே உயர்வானது. எனவே ரவிகரனின் பிரேரணை சபையில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது" என்று அவைத்தலைவர் சபையில் தெரிவித்தார். ரவிகரனின் பிரேரணை திருத்தமின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டது. (4,8)

# இலங்கை திட்டமிடல் சேவை உத்தியோகத்தர்களுக்கு அநீதி

## அரச தலைவரிடம் முறைப்பாடு

திருமலை, ஜூலை 28

இலங்கை திட்டமிடல் சேவை உத்தியோகத்தர்களுக்கு இழைக்கப் பட்டுள்ள அநீதியை நிவர்த்திக்குமாறு கிழக்கு மாகாணத் திட்டமிடல் உத்தியோகத்தர் சங்கம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அரச தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தற்போது இலங்கை திட்டமிடல் சேவை முதலாம் வகுப்புக்காக அனுமதிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை 141 ஆகக் காணப்படுகின்றது. ஆனால் தற்போது 172 முதலாம் வகுப்பு உத்தியோகத்தர்கள் சேவையில் உள்ளனர். இவர்களுள் 31 பேருக்கு உரிய பதவிகள் இல்லாத காரணத்தினால் அவர்கள் திட்டமிடல் சேவை மூன்றாம் வகுப்பு பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் வகுப்புக்காக மேலதிகமான பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால் நிர்வாக சேவையில் முதலாம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்குப் பற்றாக்குறை உள்ளது.

இதனால் நிர்வாக சேவையின் மூன்றாம் வகுப்பு உத்தியோகத்தர்கள் பலர் முதலாம் வகுப்பு பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

அதாவது இலங்கை திட்டமிடல் சேவை முதலாம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்குப் பதவி இல்லாததால் அவர்கள் கீழ் நிலையில் உள்ள மூன்றாம் வகுப்புப் பதவிகளை வகித்து வருகின்றனர்.

அதேவேளை, நிர்வாக சேவையின் முதலாம் வகுப்பில் ஆளணி இல்லாமல் அதிக பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதனால் அந்தச் சேவையின் மூன்றாம் வகுப்பு உத்தியோகத்தர்கள் முதலாம் வகுப்பு பதவிகளை வகித்து வருகின்றனர்.

இந்த இரண்டு சேவைகளும் நாடளாவிய சேவைகள் என்று குறிப்பிடப் பட்டுள்ள போதிலும் இரண்டுக்குமான ஆளணி விடயத்தில் பெரும் இடைவெளி காணப்படுகின்றது.

இது திட்டமிடல் சேவை உத்தியோகத்தர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியாக இருப்பதோடு இலங்கை அரசமைப்பு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சமத்துவ உரிமைகளை மீறும் செயலாகவும் உள்ளது.

எனவே, இந்த விடயங்களை தங்களது மேலான கவனத்துக்கு எடுத்து திட்டமிடல் சேவை உத்தியோகத்தர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியைப் போக்க ஆவண செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம் என்றுள்ளது. (த-ய-45)

### காத்தான்குடி குப்பை பிரச்சினைக்குத் தீர்வு

செங்கலடி, ஜூலை 28

மட்டக்களப்பு காத்தான்குடி ஆற்றுப்பகுதியில் குப்பைப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் 5 ஏக்கர் அரச காணியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கான காணி அடையாளம் காணப்பட்டு விரைவில் வழங்கப்படும் என்று உறுதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கள்கிழமை மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிப்லி பாருக்கினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த உறுதி வழங்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக காத்தான்குடி கழிவுக் குப்பைகளை வாவியில் கொட்டுகின்ற நிலை காணப்படுகின்றது. இந்தக் குப்பைகளை கொடுவாமடுவில் அமைக்கப்பட்டுள்ள திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்துக்கு வழங்குவதானாலும் தரம் பிரித்தே வழங்க வேண்டியிருக்கிறது. அதற்காக 5 ஏக்கர் காணி மண்முனைப்பற்று பிரதேச செயலகப்பிரிவுக்குள் வழங்க ஆவன செய்யுமாறு சிப்லி பாருக் கோரிக்கை விடுத்தார்.

இதனையடுத்து கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அஹமட், இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் 5 ஏக்கர் காணியை அடையாளம் கண்டு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாகாணக் காணி ஆணையாளருக்குப் பணிப்புரை விடுத்தார்.

(கு-ய-47)

# மைத்திரியுடன் பேச நான் தயார்

## கூறுகின்றார் மகிந்த



கொழும்பு, ஜூலை 28

நாட்டின் நலனுக்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட எவருடனும் பேசுவதற்குத் தான் தயாராக இருப்பதாக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தனது கீச்சகம் ஊடாக, நேற்று முன் தினம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார். இதன்போது, நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, சிறிசேனவுடன் பேசத் தயாரா எனக் கேட்டபோது, தான் யாருடனும் பேசத் தயார் என்று அவர் கூறினார்.

இலங்கை உள்நாட்டு விடயங்களில் வெளிநாடுகளின் தலையீடு உள்ளதா எனக் கேட்டபோது, வெளித் தரப்பினரின் நிகழ்ச்சி நிரல்களை அரசு நடைமுறைப்படுத்தும் போது வெளிநாட்டுத் தலையீட்டுக்கு அவசியமில்லை என அவர் கூறினார்.

கேள்வி: தற்போது யாழ்ப்பாணத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் உணர்த்தும் விடயம்?

பதில்: குறித்த சம்பவம், விசாரணை செய்யப்பட வேண்டும். இது, பலவீனமடைந்துவரும் சட்டம் ஒழுங்கு நிலையைக் காட்டுகிறது.

கேள்வி: நாட்டின் நீதி நிலைமை பற்றிய உங்களது கருத்து என்ன?

பதில்: நீதித்துறையின் சுயாதீனத்தில், இன்னமும் நம்பிக்கை கொண்டுள்ளோம். ஆனால், நீதித்துறையில் தலையீடுகளை மேற்கொள்ள முயற்சிகள் இடம்பெறுகின்றன - என்றார். (த)

### உள்நாட்டு இறைவரிச் சட்டம்; நாணய நிதியத்திடம் முறையீடு

அரசினால் கொண்டுவரப்படவுள்ள புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டத்தைத் தடுத்து நிறுத்துமாறு மகிந்த அணியினர் பன்னாட்டு நாணய நிதியத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பன்னாட்டு நாணய நிதியம் தனது மூன்றாம் கட்ட நிதியான 1.3 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கியபோது உள்நாட்டு இறைவரிச் சட்டத் திருத்தத்தை ஒரு நிபந்தனையாகக் குறிப்பிட்டிருந்தது.

முன்னாள் நிதியமைச்சராக இருந்த மகிந்த ராஜபக்ச மக்களுக்கு வழங்கியிருந்த பல்வேறு சலுகைகள் புதிய சட்டத்தால் அற்றுப்போய்விடும் என்பதால் இலங்கை அரசு புதிய சட்டத்தை செயற்படுத்துவதைத் தடுக்கவேண்டுமெனப் பன்னாட்டு நாணய நிதியத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார். (சு-ய)

# ஆய்வுகூட உரிமையாளரிடம் லஞ்சம்; மருத்துவ நிபுணருக்கு பிணை மறுப்பு

கொழும்பு, ஜூலை 28

தனியார் ஆய்வுகூடமொன்று வழங்கும் ஆய்வுகூட அறிக்கையை ஏற்றுக்கொள்வதற்காக அந்த ஆய்வுகூட உரிமையாளரிடமிருந்து 75 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாகப் பெற்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் குளியாப்பிட்டிய அரச வைத்தியசாலையின் சிறப்பு வைத்திய நிபுணர் சமர்ப்பித்திருந்த பிணை மனுவைக் கொழும்பு தலைமை நீதிவான் லால் ரணசிங்க பண்டார நிராகரித்ததுடன், அவரை ஓகஸ்ட் 4ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அதேவேளை, இந்தச் சம்பவத்தில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் அந்த ஆய்வுகூடத்தின் உதவியாளர் ஒருவர் மீதான விசாரணை முடிவடைந்திருப்பதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தெரிவித்ததையடுத்து அவரை ஐந்து இலட்ச ரூபா பெறுமதியான பிரத்தியேகப் பிணையில் விடுதலை செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த)

**வலிகாமம் வடக்கு பிரதேசசபை**
**பொது அறிவித்தல்**

எமது சபையின் பயன்பாட்டில் இருந்த பற்றுச்சீட்டுப் புத்தகம் ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. இப்பற்றுச்சீட்டு புத்தகத்தில் உள்ள இலக்கம் 20030 தொடக்கம் 20050 வரையான பற்றுச்சீட்டுக்கள் ஊடாக எந்த விதமான கொடுப்பனவுகளினையும் மேற்கொள்ள வேண்டாம் என பொதுமக்கள் கவனத்துக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது. மேலும் குறித்த 20030 தொடக்கம் 20050 வரையான பற்றுச்சீட்டின் ஊடாக ஏதாவது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தால் அது தொடர்பாக வலிகாமம் வடக்கு பிரதேசசபைக்கு நேரடியாகவோ அல்லது தொலைபேசி இலக்கம் 021 224 1130 ஊடாக அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை.(மல்லாகம்)**

**வாடகைக்கு**

TATA 207 ரக முழு பொடியுடனான வாகனம் மாதாந்த வாடகைக்கு உள்ளது.

**077 846 0271**

**வேலை வாய்ப்பு**

வவுனியாவில் உள்ள Mineral water shop ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை.
ஆண்/பெண் - பகுதி / முழு நேரம்

**077 606 2716**

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

கைதடி சந்தியிலிருந்து 150 M தூரத்தில் A 9 பாதைக்கு அருகில் பொன்னம்பலம் எரிபொருள் நிலையத்துக்கு அருகில் 8.5 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு.071 476 5998

**பெயர்மாற்றம்**

163/5 கடற்கரை வீதி, பாஷையூர் யாழ்ப்பாணத்தில் வதியும் **முத்துராமலிங்கம் பாலசிங்கம்** ஆகிய நான் 28/7/2017 இன்றிலிருந்து எனது பெயரை **செபஸ்ரியாம்பிள்ளை மனுவல்பிள்ளை** என்று மாற்றி கொள்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையெழுத்திடுவேன் என்று அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**- செபஸ்ரியாம்பிள்ளை மனுவல்பிள்ளை -**

**பணியாளர்கள் தேவை**

**சுய தொழிலாளர் அபிவிருத்திக் கூட்டுறவுக் கம்பனி கீழ் காணப்படும் பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.**

1. விற்பனைப் பிரதிநிதி
2. சாரதி (light)
3. கணக்காளர் - கணினி அறிவுடையவர்கள் (பெண்)
4. அலுவலக உதவியாளர் (பெண்)
5. பிரதேச இணைப்பாளர் (இருபாலாரும்)
6. பண அறவீட்டாளர்
7. தாகு முறை பணியாளர்கள்.
   (முழுநேரமும் பகுதி நேரமும் - இருபாலாரும்)

விண்ணப்ப முடிவு திகதி - இரண்டுவாரம்

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:-**
சுயதொழிலாளர் அபிவிருத்திக் கூட்டுறவுக் கம்பனி
இல:- 119/4, கண்டிவீதி,
எழுதுமட்டுவாள் தெற்கு,
எழுதுமட்டுவாள்.

Congratulation

**யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை**
**பாராட்டுகின்றோம்**



**தமிழ்மொழித் தினம் - 2017**
**தேசிய நிலை முதலாம் இடம்**

ஆக்கத்திறன் வெளிப்பாடு பிரிவு ஒன்று நிகழ்வில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தனக்கும் பாடசாலைக்கும் பெருமை ஈட்டித் தந்த

செல்வி
**ஆர்த்தி ஸ்ரீதரன்**

அவர்களைப் பாராட்டுவதோடு அவர் மேலும் பல வெற்றிகளைப் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

Congratulations

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்
**யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை**

# ஈராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 26 . 06 . 1952

மறைவு 28 . 07 . 2015

திதி:- துவாதசி

## அமரர் வயிரவிப்பிள்ளை விஜயரட்ணம்(கிளி)

(செல்வம் பிறதர்ஸ், மன்னார்)

ஆறாத்துயர் தந்து மீளாத்துயில் கொண்ட
எங்கள் அன்புத் தெய்வமே! நீ
எம்மை விட்டு நீங்கி ஈராண்டுகள் ஆகியும்
எம்நெஞ்சை விட்டு அகலாது நிலைத்து நிற்கின்றாய்.

**உனது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சித்திவிநாயகப் பெருமானை என்றென்றும் வேண்டி நிற்கின்றோம்.**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

பெற்றா, மன்னார்.
023 225 0423

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, மக்கள், மருமக்கள் மற்றும்
குடும்பத்தினர்.

# 2ஆம் ஆண்டு நினைவலைகள்



## திருமதி இந்திராணி இராசரத்தினம்

தோற்றம் 23.08.1942

மறைவு 22.07.2015

திதி:- வளர்பிறை சஷ்டி 28.07.2017

வஞ்சனை இல்லா உள்ளம் யாவர்க்கும் உதவிடும் குணம்
வேசமில்லா நேசந்தந்த ஞானம்
வீட்டுக்கொரு பெருவிருட்சம் என்று உம் நிழலில் நாம் ஆற
கடமை முடிந்தது என்று காலைப்பொழுதில்
பாசக்கயிறு வீசிப் பறித்துச் சென்றதேனோ?
விழி கசிந்து இங்கு வேதனையில் தவிக்கின்றோம்
**உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் பரம்பொருளை வேண்டுகின்றோம்**

இணுவில் கிழக்கு,

கணவர், பிள்ளைகள்,

# ரணிலின் பொருளாதாரக் குழுவை மைத்திரி பொறுப்பேற்கவேண்டும்

## சு.க. இளைஞர் முன்னணி அழுத்தம்

கொழும்பு, ஜூலை 28

தனது நிர்வாகத்தின் கீழ் வரும் பொருளாதார முகாமைத்துவக் குழுவை சரியாக நிர்வகிக்கத் தலைமை அமைச்சரால் முடியாவிட்டால் அரச தலைவர் அந்தக் குழுவை தனது நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரவேண்டுமென சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணி வலியுறுத்தியுள்ளது.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் இளைஞர் முன்னணியின் தலைவர் சாந்த பண்டார இவ்வாறு தெரிவித்தார்.

தலைமை அமைச்சரின் நிர்வாகத்தின் கீழுள்ள பொருளாதார முகாமைத்துவக் குழுவின் அண்மைக்கால நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லாததால் நாடு பல்வேறுபொருளாதாரப்பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி வரும் எனவும், எனவே, நிலைமை மேலும் விபரீதமாவதற்கு முன் அரச தலைவர் அந்தப் பொறுப்புகளை ஏற்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (த)

# பள்ளிவாசல் மீது குண்டுவீச்சு; கைதான இருவரும் விடுதலை

கொழும்பு, ஜூலை 28

குருநாகல் மல்லவப்பிட்டியவிலுள்ள முஸ்லிம் பள்ளிவாசலொன்றின் மீது பெற்றோல் குண்டொன்றை வீசிய குற்றச்சாட்டில் வழக்கு தொடரப்பட்டிருந்த இரு இளைஞர்களையும் குரு நாகல் தலைமை நீதிவான் சம்பத் ஹேவாவசம் விடுதலை செய்துள்ளார்.

மல்லவப்பிட்டியவில் குருநாகல் கண்டி வீதியிலுள்ள பள்ளிவாசல் மீது பொதுபலசேனாவின் உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இவர்கள் இருவரும் கடந்த மேமாதம் 21ஆம் திகதி பெற்றோல் குண்டுவீசித் தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. பள்ளிவாசலுக்கு முன்பாக இருந்த கண்காணிப்புக் கமராப் பதிவுகளின் அடிப்படையில் பொலிஸார் சாட்சிங்களைச் சமர்ப்பித்திருந்தனர். அந்தப் பதிவுகள் அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டன. எனினும் அதில் இவர்கள் இருவரும் சரியாக அடையாளம் காணப்படவில்லை எனப் பகுப்பாய்வாளர் திணைக்களம் பதிலளித்திருந்தது. இதனடிப்படையில் எதிராளிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை எனத் தெரிவித்த நீதிவான். அவர்கள் இருவரையும் விடுதலைசெய்தார். (து-ய)

# நெஞ்சை விட்டகலாத பதினாறு ஆண்டு நினைவுகள்



## அமரர் வைரமுத்து வரப்பிரசிங்கம்

(ஓய்வுபெற்ற தபாலக ஊழியர் - தெல்லிப்பழை)

மலர்வு 07.09.1940

உதிர்வு 26.07.2001

திதி:- பூர்வபக்க ஷஷ்டி (28.07.2017)

குடும்பத்தின் குலவிளக்காய் எம்மை வளர்த்து வழிகாட்டிய தெய்வமே!
இப்பாரினில் எம்மைப் பரிதவிக்க விட்டுச் சென்று பதினாறு ஆண்டுகள்
ஓடி மறைந்ததே அப்பா! என்றும் எம் இதயங்களில் விடிவெள்ளியாய் ஒளி தந்து
வழிநடத்துவீர்கள் எங்கள் அன்புத் தந்தையே!.
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவன் அருள்புரிவாராக

நி.மு:- கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.
த.மு:- கணையோடை,
கண்ணகி அம்மன்
கோயிலடி,நவாலி தெற்கு, மானிப்பாய்.

பிரிவால் துயருறும்,
மனைவி,மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

# 7 ஆம் ஆண்டு நினைவலைகள் (28.07.2017)



## அமரர் முருகேசு சண்முகம்

தோற்றம் 18.04.1926

மறைவு 15.08.2010

திதி: பூர்வபக்க சஷ்டி

நிலைத்தது இந்த நித்திலம்
நீண்டது - உங்கள் இலட்சியம்
குலைந்தது எங்கள் கொடிமலர்
கொள்கைகள் கொண்ட நறுமலர்
அனைத்தும் நிகழ்ந்து இன்றுடன்
ஆண்டு ஏழு ஆனதே
ஆன போதும் ஓயுமோ
ஐயா உங்கள் அன்பலை.

**குடும்பத்தினர்.**

57, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

# முதலாம் ஆண்டு நினைவுதினம்



அமரர்

## வினாசித்தம்பி செல்லையா

தோற்றம் 05.03.1929

மறைவு 08.08.2016

ஓராண்டு கடந்தாலும் உங்கள்
ஆடம்பரமில்லாத அன்பான
பேச்சும் செயல்களும் இன்னமும்
எங்கள் எல்லோரினதும் மனங்களில்
அகலாது நிற்கின்றதே
என்றும் மறவாத பாசமும்
நேசமும் கொண்டு உங்கள்
ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

**குடும்பத்தினர்**

வேணி அகம்

இல.76, பருத்தித்துறை வீதி,

# அபிவிருத்திப் பங்கீடுகள் சமமாக இருக்கவேண்டும்

## கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் வலியுறுத்தல்

மட்டக்களப்பு, ஜூலை 28

கிழக்கு மாகாண சபையினால் முன்வைக்கப்படும் அபிவிருத்திப் பங்கீடுகள் விகிதாசார முறையில் முன்வைக்கப்படவேண்டும். இல்லாவிட்டால் விகாராதிபதி அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் போன்று இன்னும் பல தேரோக்கள் மட்டக்களப்புக்கு வருவார்கள் எனக் கிழக்கு மாகாணசபையின் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி பொதுச் சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட திக்கோடையில் ஆரம்ப வைத்திய பராமரிப்பு பிரிவு அமையவுள்ளது. இந்த வைத்தியசாலைக் கட்டடத்துக்குரிய அடிக்கல் கடந்த செவ்வாய்க்கிழமை நடப்பட்டது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் வாழும் பகுதியிலுள்ள வைத்தியசாலைகள் எந்தவித அபிவிருத்திகளையும் காணவில்லை. போரால் பாதிக்கப்பட்ட எமது பகுதியிலுள்ள வைத்தியசாலைகளைப் புனரமைப்புச் செய்ய வேண்டும் என நான் கிழக்கு மாகாண சபையில் பிரேரணைகளை முன்வைத்தேன். இருந்தபோதும் அவை நடைபெறவில்லை. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாணசபையில் பங்காளியாக இருப்பதையிட்டு வெட்கித் தலைகுனியும் நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்திலுள்ள பாடசாலை ஒன்றின் காணியை அபகரிக்கின்றபோது அங்கு சுற்றியுள்ள அரசியல்வாதிகள் அவற்றைத் தடுத்து நிறுத்தியிருந்தால் தற்போது அம்பிட்டிய தேரர் போன்றோர் அரசியல் யதார்த்தத்துக்கு வராமாட்டார்கள்.

மண்ணகழ்வுக்கு அனுமதி பெற்றுக் கொடுப்பவர்கள் எவரும் எந்த வேதனைகளையும் அனுபவிப்பதில்லை. மாறாக அப்பாவிப் பொதுமக்கள்தான் தினமும் செத்துமடிந்து கொண்டிருக்கின்றார்கள். சிறப்பு அதிரடிப்படையினர் சுட்ட காரணத்தினால்தான் செங்கலடிப் பகுதியில் ஒருவர் இறந்தார். நீரில் மூழ்கியவர்களைக் காப்பாற்றுவதற்கும் பொதுமக்களை அவ்விடத்திற்குச் செல்ல அதிரடிப்படையினர் விடவில்லை. மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கல், தடிகளைக் கொண்டு தாக்குதல் நடத்தி மிகப்பெரிய போரே நடைபெற்றது. இதனால் எனது வாகனத்திற்கும், நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வாகனத்திற்கும் சேதம் ஏற்பட்டது.

இவற்றைவிடக் கடந்த திங்கள்கிழமை இரவு செங்கலடியில் மேற்கொள்ளப்பட்ட பொலிசாரின் கண்ணீர்ப்புகை வீச்சினால் 9 வயதுடைய பாலகன் ஒருவரும் இறந்துள்ளார். இதுதான் இன்றைய தமிழர்களுடைய நிலைமை.

தமிழர்களுக்குக் கொடுக்க வேண்டிய அதிகாரப் பரவாலாக்கலைக் கொடுக்கவேண்டும் எனச் சிங்கள அரசியல் தலைவர்களும் இனவாதிகளும் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார்.

(த-ய-46)

## கேள்வி அறிவித்தல்
## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலரால் **சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ்** யாழ் மாவட்ட செயலகத்தால் கீழே குறிப்பிடப்பட்ட பொருள்களை பெற்றுக் கொள்வதற்காகப் பொருத்தமான வழங்குநரிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகமையுடைய விலைக்கேள்வியாளர்கள் **மாவட்ட திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் 28.07.2017 ஆம் திகதி தொடக்கம் **காலை 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 வரை** விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் இவை தொடர்பான மேலதிக தகவல்களினைப் பெறவிரும்பின் மாவட்ட செயலக திட்டமிடல் செயலக **021 222 2427** எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றினை **மாவட்ட திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றுடன் நிறுவன வியாபார பதிவுச் சான்றிதழினையும் சமர்ப்பித்து **28.07.2017 முதல் 17.08.2017 வரை காலை 9.00 மணியிலிருந்து பி.ப 2.00 மணிவரையான** காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000/= கட்டணமாக செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் **தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம் , யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு 18.08.2017 திகதியன்று **மு.ப 10.30** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் **அரச அதிபர் அலுவலகத்**தில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் கையொப்பமிட்டு கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும்.
6. காலந்தாழ்த்தப்பட்ட விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேற்குறிப்பிட்ட முகவரியில் **18.08.2017 திகதியன்று மு.ப 10.30 மணிக்கு** நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது அவர்களது எழுத்து மூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
7. கேள்விகளின் **மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.**
8. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச்சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.
9. கேள்வி தொடர்பான முன் ஆயத்த கூட்டம் ( Prebid Meeting) **10.08.2017 மு.ப 10.00 மணிக்கு அரசஅதிபர் மாநாட்டு மண்டபத்தில்** நடைபெறும்

| கேள்வி இல | விவரம் | அண்ணளவான எண்ணிக்கை | மீளளிக்கப்படாத தொகை (ரூபா) |
|---|---|---|---|
| JF/DPS/Pro./Fisheries/VI/11/2017 | படகுக்கான வெளி இணைப்பு இயந்திரம் | | 1000/= |
| | 8 HP (குதிரை வலு) இயந்திரங்கள் | 44 | |
| | 9.9 HP (குதிரை வலு) இயந்திரங்கள் | 113 | |
| | 15 HP (குதிரை வலு) இயந்திரங்கள் | 199 | |
| | 25 HP (குதிரை வலு) இயந்திரங்கள் | 60 | |
| | 40 HP (குதிரை வலு) இயந்திரங்கள் | 09 | |

**நா.வேதநாயகன்**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்**
**யாழ்ப்பாண மாவட்டம்**






## அழைப்பாணைகள் எனக்குப் புதிதல்ல

### மகிந்தானந்தவுக்கு ரவி பதில்

கொழும்பு, ஜூலை 28
பிணைமுறி மோசடி விசாரணை ஆணைக்குழு தனக்கு அழைப்பாணை அனுப்பியிருப்பது புதிய விடயமல்ல எனவும், தனக்கு அது மிகவும் பழகிப்போன விடயம் எனவும் அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நேற்று முன் தினம் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தபோதிலும் அமைச்சர் என்ற ரீதியில் தான் நாடாளுமன்றத்தில் இருக்கவேண்டியிருந்ததால் தன்னால் முன்னிலையாக முடியாதென அறிவித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் மகிந்த அணி உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே சில விமர்சனங்களை முன்வைத்தபோதே ரவி கருணாநாயக்க மேற்கண்டவாறு பதிலளித்தார்.

மகிந்தானந்த அளுத்கமகே என்னைப் பற்றிய அவதூறுகளை அள்ளி வீசுவதையே தனது தலையாயக் கடமையாகக் கொண்டிருக்கிறார் எனவும், அவ்வாறு செய்துகொண்டிருப்பவர் அவர் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுகள் பற்றி வாயைத் திறக்காதது விசித்திரமாக இருப்பதாகவும் ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்தார். (கு)

# சிங்களவரை கடத்தினால் பயங்கரவாதம் அதுவே தமிழர் என்றால் அரச நிர்வாகம்

## இது என்ன நியாயம் எனக் கேட்கிறார் அமைச்சர் மனோ

கொழும்பு, ஜூலை 28
கடத்தல், காணாமல்போதல் போன்ற சம்பவங்கள் தென்பகுதியில் நடக்கும்போது சிங்களவர் ஒருவர் கடத்தப்படும்போது அதனை அரச பயங்கரவாதம் என்று குற்றம் சாட்டுகின்றீர்கள். அதுவே வடக்கில் நடக்கும்போது தமிழர் ஒருவர் கடத்தப்படும்போது அதை மட்டும் அரச நிர்வாகம் என்று கூறுகிறீர்கள். இது என்ன நியாயம்?

இவ்வாறு கேள்வி எழுப்பினார் தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சரும் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோ கணேசன்.

பிரபல தனியார் தொலைக்காட்சியில் நேற்றுமுன்தினம் முதல் நள்ளிரவு வரை நடைபெற்ற அரசியல் விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, ராவய பத்திரிகை ஆசிரியர் ஜனரஞ்சன ஆகியோரும் இந்த விவாத நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்தனர்.

அமைச்சர் மனோ கணேசன் மேலும் கூறியதாவது:

சில நாள்களுக்கு முன்னர் கொழும்பில் வெள்ளை வானில் கடத்தப்படும் ஆபத்தைச் சந்தித்தார் எனக் கூறப்படும் ரயான் ஜயலத் என்ற மருத்துவக் கல்லூரி மாணவர் கூறியிருந்தார்.

அவர் ஒரு தமிழராக இருந்திருந்தால் அந்தச் சம்பவம் பற்றி யாரும் பேசியிருக்கமாட்டீர்கள். ஊடகங்களும் கைவிட்டிருக்கும். அவரை ஒரு புலி என எல்லோரும் கூறிக் கதையை முடித்திருப்பீர்கள்.

இதை நான் மிகப்பொறுப்புடனும், கவலையுடனும் கூறுகிறேன். இப்படிச் செய்யாதீர்கள். சிங்களவரோ, தமிழரோ அனைவரையும் இந்நாட்டுக் குடிமக்கள் என்று பாருங்கள். இந்தக் காணாமற்போகச் செய்தல் என்ற மகாபாவத்தை இந்த நாட்டில் இருந்து துடைத்து எறிய முன் வாருங்கள்

இந்த விடயத்தில் இரட்டை நிலைப்பாடுகள் இருக்க முடியாது. இங்கு ஒரு சட்டம், அங்கு ஒரு சட்டம் இருக்க முடியாது. காணாமல் ஆக்கல் என்ற குற்றத்தை நாம் எல்லோரும் ஒழிக்கவேண்டும். அதன் ஒரு அங்கமாகவே இந்தக் காணமல்போனோர் தொடர்பான அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அவலம் வடக்கில் மட்டுமல்ல, தெற்கிலும் 1971, 1989ஆம் ஆண்டுகளில் இடம்பெற்றது.

1971இல் பத்தாயிரம்பேர் காணாமற்போயினர் எனச் சொல்லப்பட்டது. 1989 இல் மனோரி முத்தெட்டுகம ஆணைக்குழுவின்படி



26,401பேர் காணாமற்போயுள்ளனர் எனச் சொல்லப்பட்டுள்ளது. முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அன்று ஒரு மனித உரிமைப் போராளியாக இருந்து 60,000பேர் காணாமற்போயுள்ளனர் எனக் கூறியிருந்தார். இவர்கள் தெற்கில் காணாமல்போன சிங்களவர்கள்.

சமகாலத்தில் வடக்கு, கிழக்கிலும், கொழும்பிலும் தமிழர்கள் காணாமற்போனார்கள். தருஸ்மன் அறிக்கையின்படி 40,000 பேர் எனக் கூறப்பட்டுள்ளது. பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்க அறிக்கையின்படி 16,000 பேர் என எண்ணுகிறேன். பரணமகம ஆணைக்குழு 20,000 பேர் என்று கூறுகிறது. மன்னார் ஆயர் 147,000பேர் போரில் காணாமல் போயுள்ளனர் எனச் சொல்லியுள்ளார் - என்றார்.

இந்தக் கட்டத்தில் குறுக்கிட்ட நிகழ்ச்சித் தொகுப்பாளர், மன்னார் ஆயர் கூறிய எண்ணிக்கையை விடுவோம். அவருக்கு அதை சொல்லத் தகைமை இல்லை எனக் கூறினார்.

அப்போது, அதைக் கூற அவருக்கு உரிமை உள்ளது. ஏனைய எல்லோரும் கூறும்போது தான் அறிந்ததை அறிவிக்க ஆயருக்கும் முடியும் என அமைச்சர் மனோ கணேசன் பதில் கூறினார்.

எத்தனை பேர் காணாமற்போயுள்ளனர் என்ற விவரங்களை நாம் இந்த காணாமற்போனோர் அலுவலகம் மூலம் திரட்ட முடியும். இது மிகவும் முன்னேற்றகரமான ஒரு படி எனவே அதை உருவாக்குவோம். இன்று கொழும்பில் இராணுவத்தினர் பெற்றோல் விநியோக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இராணுவம் என்பது ஒரு தங்கக் கத்தி எனப் பெருமை பேசலாம். ஆனால், கத்தி தங்கமாக இருந்தாலும் குத்தினால் இரத்தம் வரும். இன்று சேவைகளில் ஈடுபடும் இராணுவத்தினர் நாளை ஆள்களைக் கடத்தலாம். இது நேற்று நடந்தது. இன்றும் நடக்கிறது. நாளையும் நடக்கலாம். எனவே காணாமற்போனோர் அலுவலகம் அமைப்பது தமிழர்களுக்கு மட்டுமல்ல முழு நாட்டுக்குமே நல்லது - என்றார் மனோ கணேசன். (கு-ய)

தெல்லிப்பழை - அளவெட்டி - கணேஸ்வரம்

குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலயம்

ஏவிளம்பி வருஷ மஹோற்சவம் - 2017



கொடியேற்றம் 29.07.2017

தேர் 06.08.2017

விநாயகர் அடியார்களே!

சகல ஜீவான்மார்களுக்கும் வேண்டுவதை எல்லாம் ஈந்து வாழ்வாங்கு வாழத் திருவருள் செய்து வீற்றிருக்கும் கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடி அருள்மிகு விநாயகப் பெருமானின் மஹோற்சவம் ஏவிளம்பி வருஷம் ஆடி மாதம் 13 ஆம் நாள் (29.07.2017) சனிக்கிழமை சித்திரை நட்சத்திரமும் ஷஷ்டித்திதியும் கூடிய நன்நாளில் முற்பகல் 11 மணிக்கு துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெற இறையருள் பாலித்துள்ளது. எனவே இவ்விழாக்காலங்களில் அடியார்கள் யாவரும் ஆசார சீலர்களாக ஆலயத்துக்கு வருகை தந்து எம்பெருமானின் விழாப்பொலிவு கண்டு பேரானந்தப் பெருவாழ்வு பெற்று வாழ்வீர்களாக.

விழாக்கால நியமங்கள்

- ஆடி மாதம் 12 ஆம் நாள் (28.07.2017) வெள்ளிக்கிழமை - மாலை 6.00 மணிமுதல் மஹோற்சவ பூர்வாங்கக் கிரியைகள்
- ஆடி மாதம் 13 ஆம் நாள் (29.07.2017) - கொடியேற்றம் - காலை 9.30 மணிக்கு வசந்த மண்டபபூஜை, முற்பகல் 11 மணிக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்)
- ஆடி மாதம் 20 ஆம் நாள் (05.08.2017) சனிக்கிழமை - இரவு 8.00 மணிக்கு சப்பற உற்சவம்.
- ஆடி மாதம் 21 ஆம் நாள் (06.08.2017) ஞாயிற்றுக்கிழமை - தேர்த்திருவிழா - காலை 9.30 மணிக்கு வசந்த மண்டப பூஜை, முற்பகல் 10.30 மணிக்கு இரதாரோகணம்
- ஆடி மாதம் 22 ஆம் நாள் (07.08.2017) திங்கட்கிழமை - தீர்த்தோற்சவம். - காலை 9.00 மணிக்கு வசந்தமண்டப பூஜை, முற்பகல் 10 மணிக்கு - தீர்த்தவாரிதி மாலை - 5.00 மணிக்கு வசந்தமண்டபபூஜை திருவூஞ்சல். இரவு 7.00 மணிக்கு கொடியிறக்கம், சண்டேஸ்வர உற்சவம் ஆசார்யோற்சவம்.
- ஆடி மாதம் 23 ஆம் நாள் (08.08.2017) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம்
- ஆடி மாதம் 26ஆம் நாள் (11.08.2017) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு வைரவர் பொங்கல்

உற்சவ காலங்களில் தினமும் மதியம் மாகேசுவர பூஜை (அன்னதானம் ) நடைபெறும்.

ஆடி மாதம் 19ஆம் நாள் 04.08.2017 வெள்ளிக்கிழமை வரலக்ஷ்மி விரதம் மாலை 3.00 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி விஷேட பூஜை நடைபெற்று வரலக்ஷ்மி நோன்பு நூல் வழங்கப்படும்.

கணேஸ்வரம், அளவெட்டி.

"வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"

விநாயகர் அருட்பணியில்
ஆலய நிர்வாக சபையினர்.

# கடும் வறட்சியால் பரிதவிக்கின்றனர் 11 லட்சம் மக்கள்

## உதவிகளைத் துரிதப்படுத்துமாறு மைத்திரிபாலவிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 28
நாட்டின் 11 மாவட்டங்களிலுள்ள 118 பிரதேசசெயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 11 இலட்சம் மக்கள் வறட்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், அதனால் அரசு அவசர நிலையைப் பிரகடனப்படுத்தி இவர்களுக்கான உதவிகளைத் துரிதப்படுத்தவேண்டும் எனவும் ஐக்கிய இலங்கை விவசாயிகள் சம்மேளனம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரத்ன மேலும் கூறியுள்ளதாவது:

அம்பாறை, திருகோணமலை, மஹாஓயா, பொலநறுவை ஆகிய மாவட்டங்களில் குடி தண்ணீருக்கே பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. விவசாயக் காணிகளுக்கு சுழற்சிமுறையில் நீர் விநியோகம் செய்யப்படாததால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் தொடர் போராட்டத்தால் மொரகஹாகந்த நீர்த்தேக்கத்திலிருந்து இப்போது நீர் வழங்கப்பட்டு வந்தபோதிலும் அது காலங்கடந்த ஏற்பாடானதால் நீர் வெறுமனே விரயமாகிக்கொண்டிருக்கிறது.

> “விவசாயிகளின் தொடர் போராட்டத்தால் மொரகஹாகந்த நீர்த்தேக்கத்திலிருந்து இப்போது நீர் வழங்கப்பட்டு வந்தபோதிலும் அது காலங்கடந்த ஏற்பாடான தால் நீர் வெறுமனே விரயமாகிக்கொண்டிருக்கிறது.”

2015/2016ஆம் ஆண்டுகளில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீடுகள் சரியாக வழங்கப்படவில்லை. ஏக்கரொன்றுக்கு 8,650 ரூபா மட்டுமே இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய 10 ஆயிரம் ரூபா விவசாயக் காப்புறுதிக்கான தவணைப் பணமாகக் கழிக்கப்பட்டுள்ளது. இது "மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதை போலாகும்" என்று அவர் விசனம் தெரிவித்துள்ளார். (த)

## 6 பிரேரணைகள் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்

கொழும்பு, ஜூலை 28
மகிந்த அணியின் கூச்சல், குழப்பத்துக்கு மத்தியில் நிதி அமைச்சின் கீழான 6 பிரேரணைகளும், நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டவரைவும் நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டன.

நாடாளுமன்றம் நேற்று முன் தினம் பிற்பகல் ஒரு மணிக்குச் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. இதன்போது, எரிபொருள் விநியோகத்தை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தி அரசால் வெளியிடப்பட்ட வர்த்தமானி குறித்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க விளக்கமளித்த பின்னர், சபையில் கடும் அமளிதுமளி ஏற்பட்டது. அதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்குச் சபாநாயகர் கரு ஜயசூரிய கடுமையாக முயற்சித்தார். எனினும், அது கைகூடவில்லை. தினப்பணிகளுக்குச் செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சபாநாயகர் விடுத்த கோரிக்கையை மகிந்த அணி ஏற்றுக்கொள்ளவில்லை. இதையடுத்து சபை முதல்வரால் சட்டவரைவொன்றும், நிதி அமைச்சின் கீழான 6 பிரேரணைகளும் சமர்ப்பிக்கப்பட்டன. பின்னர் அவை விவாதமின்றி நிறைவேற்றப்பட்டன.

சிறப்பு வியாபாரப் பண்ட அறிவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளைகளை அங்கீகரிப்பதற்கான 5 பிரேரணைகளும், சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான தீர்மானத்தை அங்கீகரிப்பதற்கான பிரேரணையொன்றும், நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டவரைவுமே இவ்வாறு விவாதமின்றி நிறைவேற்றப்பட்டன. நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டவரைவு திருத்தங்களுடன் சபையில் நிறைவேற்றப்பட்டது. (த)

## தேர்தல்களை ஒத்திவைக்க மகிந்த அணி கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 28
புதிய தேர்தல் முறையின்கீழ் ஒன்பது மாகாண சபைத் தேர்தல்களையும் ஒரே தினத்தில் நடத்தப்போவதாகக் காரணங்காட்டிப் பதவிக்காலம் முடிவடையவுள்ள கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தலை ஒத்திவைக்க அரசு தீர்மானித்துள்ளது எனத் தெரியவருகின்றது.

ஒன்பது மாகாண சபைகளுக்கான தேர்தல்களையும் புதிய முறைப்படி ஒரே தினத்தில் நடத்துவதே உசிதம் எனத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த பிரேரணையின் அடிப்படையிலேயே அமைச்சரவை இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

அமைச்சரவையின் இந்தத் தீர்மானத்துக்கு மகிந்த அணி கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

அரசு எந்தத் தேர்தலிலும் தோல்வியைத் தழுவுவது நிச்சயம் எனத் தெரிந்திருப்பதாலேயே இத்தகைய நொண்டிச் சாட்டுக்களைக் காரணங்காட்டி சகல தேர்தல்களையும் ஒத்திவைத்துக்கொண்டிருக்கின்றது எனவும், பதவிக்காலம் முடிவடையப்போகும் மூன்று மாகாண சபைகளின் தேர்தல்களையும் உரிய காலத்தில் நடத்தவேண்டும் எனவும் மகிந்த அணி வலியுறுத்தியுள்ளது. (த)



## இலங்கை அரசுக்கு நெருக்கடிவேளை உதவியுள்ளது சீனா

### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பாராட்டு

கொழும்பு, ஜூலை 28
தீவிரவாதத்தைத் தோற்கடிக்க உதவிய சீனாவுக்கு சிறிலங்கா அரசு பாராட்டுத் தெரிவித்துள்ளது.

கொழும்பு, காலிமுகத்திடல் விடுதியில் நேற்று முன் தினம் இரவு நடந்த, சீன இராணுவத்தின் 90 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றிய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் இலங்கைக்குச் சீனா உதவி வழங்கியது என்று அவர் குறிப்பிட்டார்.

ஒரே சீனா என்ற கொள்கையை இலங்கை தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்றும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சீனாவுக்கு மேற்கொண்டிருந்த பயணத்தின்போது இதனை வலியுறுத்தியிருந்தார் என்றும், ருவான் விஜேவர்த்தன மேலும் தெரிவித்தார்.

அண்மைக் காலமாகச் சீன இராணுவத்தின் ஆண்டு விழாவை கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் பெரியளவில் கொண்டாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

## என் மீதான குற்றச்சாட்டுக்கு ஓகஸ்ட் 2 இல் உரிய பதிலடி

### கூறுகின்றார் அமைச்சர் ரவி



கொழும்பு, ஜூலை 28
இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிணைமுறி மோசடி குறித்து விசாரணை மேற்கொண்டு வரும் அரச தலைவர் ஆணைக்குழுவில் எம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி உரிய பதிலை அளிப்பேன் என்று அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அயலுறவு அமைச்சில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த அரசையும், நாட்டை இல்லாமலாக்கிய வர்களையும் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆனால், நல்லாட்சி அரசில் அவ்வாறில்லை. நாங்கள் சிறப்பு ஆணைக்குழுக்கள் முன் முன்னிலையாகின்றோம்.

நேற்று (நேற்றுமுன்தினம்) அமைச்சரவைக் கூட்டம் இடம்பெறும் தினம் என்பதால் நான் ஆணைக்குழுவில் முன்னிலையாக முடியாது போனது. எந்த விடயத்தையும் மறைக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை. அதன் பிறகு அனைவருக்கும் தெளிவாகும் என்றார்.

மத்திய வங்கி மோசடியில் சிக்கியிருக்கும் பேர்பச்சுவல் டிரசரீஸ் தனியார் நிறுவன உரிமையாளர் அர்ஜூன் அலோசியஸ் ஒரு வாடகை வீடு வழங்கினார் எனவும், அதற்கான வாடகைப் பணத்தை அலோசியஸ் செலுத்தினார் எனவும் அரச தலைவர் ஆணைக்குழுவில் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## லொத்தர் முகவர்கள் மீண்டும் போராடுவதற்குத் தீர்மானம்

லொத்தர் சீட்டுக்கள் விற்பனையில் தங்களுக்கு வழங்கப்பட்டுவரும் தரகுப் பணத்தை 50 சதத்தால் அதிகரிப்பது உட்பட மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்திருக்கும் ஐக்கிய இலங்கை லொத்தர் முகவர்கள் சங்கம் தங்களது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வுகள் கிடைக்காவிட்டால் நாடளாவிய ரீதியில் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தேசிய லொத்தர் சபையும், அபிவிருத்தி லொத்தர் சபையும் அச்சிடும் சீட்டுக்கள் இரண்டை ஒரே சமயத்தில் விற்கவேண்டுமென்ற நிபந்தனையைத் தங்களால் ஏற்றுக்கொள்ள முடியாதெனவும், தங்களது பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படுமென அரச தலைவர் உறுதியளித்துள்ளபோதிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தொடர்ந்தும் அசிரத்தையாக இருப்பதாலேயே போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்திருப்பதாக சங்கத்தின் பேச்சாளரொருவர் தெரிவித்தார். (த)

## ஏறாவூரில் உணவு விடுதிகள், வெதுப்பகங்கள் சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு, ஜூலை 28
மட்டக்களப்பு ஏறாவூர் நகரில் உள்ள ஒரு சில உணவு விடுதிகள் மற்றும் வெதுப்பகங்கள் என்பன சுற்றிவளைக்கப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன என ஏறாவூர் நகர சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவின் மேற்பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் முத்துலிங்கம் புலேந்திரகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இந்தப் பரிசோதனையின்போது மனித நுகர்வுக்குப் பொருத்தமில்லாத உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

அவ்வாறான உணவுப் பண்டங்களை வைத்திருந்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

காலாவதியான உணவுகள், சுத்தமில்லாத பாத்திரங்களைப் பயன்படுத்தித் தயாரித்த உணவுகள், மனித நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பூஞ்சணம் பிடித்த பாண்கள் மற்றும் வெதுப்பகங்களில் தயாரித்த உணவுகள், இரசாயனத் திரவியங்கள் கலக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட உணவுப் பண்டங்கள் போன்றவற்றை பொதுச்சுகாதாரப் பிரிவினர் கைப்பற்றியிருந்தனர்.

இதன்போது உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டனர். ஒருவருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (த-ய-46)

# ட்ரம்ப் போன்று வேடம் தரித்து ஏ.ரி.எம். இயந்திரத்தில் திருட்டு

உரோம், ஜூலை 28
இத்தாலியில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் போன்று வேடமணிந்து ஏ.ரி.எம்மில் பணத்தைத் திருடிய சகோதரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
வடக்கு இத்தாலி பகுதியில் ஒரு ஏ.ரி.எம். இயந்திரத்தை உடைத்து சுமார் ஒரு லட்சம் யூரோ மதிப்புள்ள பணம் கொள்ளையடிக்கப்பட்டதை அடுத்து அந்த ஏ.ரி.எம்மில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமராவில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் போல வேடமணிந்த இருவர் இந்த கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டிருந்ததை பொலிஸார் கண்டுபிடித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இருவரை கைது செய்த பொலிஸார் அவர்களிடம் விசாரணை நடத்தியபோது அவர்களே குற்றவாளிகள் என்பது தெரியவந்தது. அவர்களிடமிருந்து கொள்ளையடிக்க பயன்படுத்திய பொருட்கள் மற்றும் ட்ரம்ப் போன்ற முகமூடி மற்றும் கொள்ளையடிக்கப்பட்ட பணம் ஆகியன பறிமுதல் செய்யப்பட்டன. விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (ம)








## அமெரிக்காவின் இராணுவத்தில் திருநங்கைகளுக்கு இடமில்லை

ட்ரம்ப் அடுத்த அதிரடி

வொஷிங்டன், ஜூலை 28
அமெரிக்க இராணுவத்தில் திருநங்கைகள் சேர அனுமதி கிடையாது என்று அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தனது அடுத்த அதிரடி அறிவிப்பை நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளார்.
அமெரிக்க இராணுவத்தில் திருநங்கைகளைச் சேர்க்கும் திட்டத்தை முன்னாள் அதிபர் பராக் ஒபாமா கொண்டு வந்தார்.
இந்தத் திட்டத்தை பலரும் ஆதரித்தனர். ஆனால், அதிபராக ட்ரம்ப், பொறுப்பேற்ற பின் அமெரிக்க இராணுவத்தில் திருநங்கைகள் இணைவதற்கு அடுத்த வருடம் ஜனவரி மாதம் வரை தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில் இனிவரும் காலங்களில் இராணுவத்தில் திருநங்கைகளுக்கு இடமில்லை என்று உறுதிப்பட அறிவித்தார் ட்ரம்ப்.
இது தொடர்பாக தனது கீச்சகப் பக்கத்தில், "என்னுடைய இராணுவ நிபுணர்களுடன் ஆலோசித்த பிறகு அமெரிக்க இராணுவத்தில் திருநங்கைகள் பணிபுரிய அனு[illegible]மதிப்பதில்லை என்று முடிவெடுத்துள்ளோம். இராணுவம் மிகப்பெரிய வெற்றிகளில் கவனம் செலுத்த வேண்டும்.
திருநங்கைகளால் இராணுவத்தில் ஏற்படும் அதிக அளவிலான மருத்துவச் செலவுகள் மற்றும் பிளவுகள் இனி இருக்காது" என்று குறிப்பிட்டுள்ளார்.
இந்த முடிவு வெளியாகிய அடுத்த சில மணித்தியாலங்களில் அமெரிக்காவின் முக்கிய இடங்களில் திருநங்கைகள் ஒன்று கூடி ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். (ம)

## ஜப்பானில் நிலஅதிர்வு

ஜப்பான் நாட்டின் ஒகினாவா தீவில் நேற்று நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.
பசிபில் பெருங்கடல் ஓரத்தில் உள்ள ஜப்பான் நாட்டுக்கு சொந்தமான ஒகினாவா தீவில் நேற்றுக் காலை ஏற்பட்ட இந்த அதிர்வு ரிச்டர் அளவுகோலில் 6.1 அலகுகளாகப் பதிவானது என்று தெரிவிக்கப்படுகிறது. பூமிக்கு அடியில் சுமார் 33 கிலோமீட்டர் ஆழத்தில் நில நடுக்கம் ஏற்பட்டது. சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்பட வில்லை.
எனினும் சிறிது பதற்றம் உணரப்பட்டது. என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன (ம)



## சிரிய கிளர்ச்சிக்குழு விவகாரத்தில்

# டொனால்ட் ட்ரம்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

வொஷிங்டன், ஜூலை 28
சிரிய கிளர்ச்சிக் குழுவுக்கு வழங்கிய இராணுவ உதவியை நிறுத்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அதிபர் டொனால்ட் ட்ரம்புக்கு எதிராக வெள்ளை மாளிகைக்கு முன்பாக நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.
சிரிய அதிபர் அல் அசாத் சியா பிரிவைச் சேர்ந்தவர். அவர் பதவி விலக வேண்டும் என்று தெரிவித்து சன்னி பிரிவைச் சேர்ந்த இஸ்லாமிய ஆயுதக் குழுக்கள் போரிட்டு வருகின்றன. அரசுக்கு ஆதரவாக ரஷ்யா உள்ளது. சிரிய கிளர்ச்சிக் குழுவுக்கு அமெரிக்கா பெரும் இராணுவ உதவிகளையும், நிதி உதவிகளையும் செய்து வந்தது. அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமாவே ஆயுதக் குழுவுக்கு உதவி செய்யும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
இந்தத் திட்டம் வீண்வேலை என்று தெரிவித்த ட்ரம்ப், தற்போது இந்தத் திட்டத்தை இல்லாமல் செய்துள்ளார். இது பல அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. ட்ரம்பின் இந்த முடிவு ரஷ்யாவுக்குச் சாதகமானது. ரஷ்யாவுக்காகவே ட்ரம்ப் இந்த முடிவெடுத்தார் என்று விமர்சிக்கப்படு[...] நிலையில் ட்ரம்புக்கு எதிராக நே[...]றுமுன்தினம் பெரும் ஆர்ப்பாட்ட[...]கள் இடம்பெற்றுள்ளன.
'ட்ரம்ப், ரஷ்யாவின் கைக்கூலி[...] 'ட்ரம்ப், ரஷ்யாவின் அடிமை[...] கிளர்ச்சிக் குழுவுக்கு வழங்கிய உ[...]விகளைத் தொடரவேண்டும் உ[...]ளிட்ட வாசகங்கள் அடங்கிய பாத[...]கைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்[...]வர்கள் ஏந்தியிருந்தனர். ட்ரம்பை[...] கேலி செய்யும் விதத்திலான உ[...]வப்பொம்மைகளையும் அவர்க[...] காட்சிப்படுத்தினர். (ம)

## ஆப்கானில் தாக்குதல் 26 சிப்பாய்கள் சாவு

ஆப்கானிஸ்தானில் தலிபன்கள் நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் 26 இராணுவச் சிப்பாய்கள் உயிரிழந்தனர்.
இதுகுறித்து ஆப்கானிஸ்தான் இராணுவம் வெளியிட்ட அறிக்கையில், 'ஆப்கானிஸ்தானிலுள்ள கத்தஹார் மாகாணத்தில் இன்று (நேற்றுமுன்தினம் புதன்கிழமை) இராணுவ முகாம் மீது தலிபன்கள் நடத்திய தாக்குதலில் 26 சிப்பாய்கள் உயிரிழந்தனர். 13 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலுக்கு தலிபன் அமைப்பு கடும் விலை கொடுக்கவேண்டிவரும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)



## குஜராத் வெள்ளப்பெருக்கில் உயிரிழப்பு 111ஆக உயர்வு

ஆமதாபாத், ஜூலை 28
இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 111ஆக அதிகரித்தது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 17பேர் உயிரிழந்துள்ள தகவலும் தற்போது வெளிவந்துள்ளது.
இந்தியாவின் வட மாநிலங்களில் பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. மராட்டியம், குஜராத், ராஜஸ்தான் மற்றும் அதனையொட்டி உள்ள மாநிலங்களில் கன மழை பெய்கிறது.
மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசா மாநிலங்களிலும் கனமழை பெய்து வருகிறது. தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். குஜராத்தில் பனாஸ் காந்தா, சாபார்காந்தா, ஆனந்த், பதான் மற்றும் வால்சாத் மாவட்டங்களில் பெரும்பாலான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இந்த இடரால் இதுவரை 111பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
காங்கரேஜ் தாலுகாவில் காரியா கிராமத்தில் பனாஸ் நதிக்கரையில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 17 பேரது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதனால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று சொல்லப்படுகிறது. வெள்ளக்காடாகிய பகுதிகளை இந்தியத் தலைமை அமைச்சர் மோடி தனது பிரத்தியேக வானூர்தியில் இருந்தவாறு நேற்றுமுன்தினம் பார்வையிட்டார். (ம)



# ஜெயாவை நினைத்து மோடி உருக்கம்

அப்துல்கலாமின் இரண்டாவது நினைவு தினமான நேற்று ராமேஸ்வரத்தில் அவருக்கு மிகப்பெரும் நினைவாலயம் திறந்து வைக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து உரையாற்றுகையில் தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மறைவை நினைவு கூர்ந்தார் மோடி.

“அப்துல்கலாம் பிறந்து வளர்ந்த மண்ணான ராமேஸ்வரத்துக்கு வந்ததையும், அப்துல்கலாமின் நினைவாலயத்தைத் திறந்து வைத்தமையையும் எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன் (மோடி இதைத் தமிழில் குறிப்பிட்டார்).

ராமேஸ்வரத்துக்கு மேலும் ஓர் பெருமையை இந்த நினைவாலயம் சேர்க்கும். இந்த விழா மேடையில் ஜெயலலிதா இருந்திருந்தால் நினைவாலயம் கட்டிய தொழிலாளர்களை பெரியளவில் பாராட்டியிருப்பார். அவர் இல்லாதமை வருத்தமளிக்கிறது” என மோடி மேலும் தெரிவித்தார். (ம)





அமெரிக்காவின் கலிபோர்னியாவில் சுமார் 6 அடி நீளமுடைய ராஜநாகம் ஒன்றை கறுப்புச் சந்தை முகவர்கள் கடத் துவதற்கு எடுத்த முயற்சியைப் பொலிஸார் முறியடித்துள்ளனர். ராஜ நாகத்தின் விசத்ததுக்கு கறுப்புச் சந்தையில் மிகவும் பெறுமதி உள்ளது. இதற்காகவே அது கடத்தப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம)

# அப்துல் கலாமின் நினைவாலயம் ராமேஸ்வரத்தில் நேற்றுத் திறப்பு

சென்னை, ஜூலை 28

இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் நினைவாக ராமேஸ்வரத்தில் அமைக்கப்பட்ட நினைவாலயத்தை நேற்றுத் திறந்து வைத்தார் இந்தியத் தலைமை அமைச்சர் மோடி.

சுமார் 40 கோடி செலவில் இந்த நினைவாலயம் கட்டப்பட்டுள்ளது. இதில். அக்னி ஏவுகணையின் மாதிரி வடிவம், செயற்கைகோள் மாதிரி, கலாமின் 700க்கும் மேற்பட்ட ஒளிப்படங்கள், அவர் தொடர்பான 91 ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன.

அப்துல் கலாமின் இரண்டாம் ஆண்டுநினைவுதினமானநேற்று இந்த நினைவாலயத்தைத் திறந்து வைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தியத் தலைமை அமைச்சர் மோடி நேற்றுக் காலை இந்த நினைவால யத்தைத் திறந்து வைத்தார். (ம)



P.P.T Express

மற்றுமோர் விரிவாக்கசேவை பகல் சேவை




24.07.2017 திங்கள் தொடக்கம் தனது பகல் சேவையை விஸ்தரித்துள்ளது.
இதன் ஊடாக காலை 07.00 மணிக்கு கொழும்பு நோக்கி தனது சேவையை தொடர்கின்றது.
அதேபோன்று கொழும்பு வெள்ளவத்தையிலிருந்து காலை 06.00 மணிக்குப் புறப்பட்டுக் கொட்டாஞ்சேனை ஊடாக யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிகள் சேவையை விஸ்தரித்துள்ளது.
அதன் வழமையான இரவு சேவைகள் வழமைபோல் நடைபெறுகின்றன.
மேலும் இலங்கையின் முதற்தர துரித பொதிகள் சேவை ஊடாக வெளிநாட்டு (அனைத்து நாடுகளுக்கும்) பொதிகளை உடனுக்கு உடன் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் துரித பொதிகள் சேவையைப் பெற்றுக்கொள்ளலாம்.




இலங்கையில் சுற்றுலா பயணத்திற்கு உரிய பஸ் சேவைகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.




யாழ்ப்பாணம் - 077 573 1318
பருத்தித்துறை - 077 573 6003
கொழும்பு - 077 575 5175/011 232 0336



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தடை நீக்கம் உதவக்கூடும்

விடுதலைப்புலிகள்இயக்கத்தின்மீதானதடையைநீடிப்பதற்கு முகாந்திரங்கள் எதுவும் இல்லை என்று கூறி ஐரோப் பிய நீதி ஆயம்தீர்ப்பளித்திருக்கிறது. ஆனால், புலிகள்இயக்கத்தின்மீதான தடை நீடிக்கும் என்று ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

புலிகள் இயக்கம் இப்போதும் அபாயகரமான ஒன்று என்று நிரூபிப்பதற்குத் தேவையான ஆதாரங்களைஐரோப்பிய ஒன்றியம் முன்வைக்கவில்லை என்பதே தடை நீக்கத்திற்கான காரணம். பத்திரிகைச் செய்திகள், துண்டறிக்கைகள் என்பவற்றின் அடிப்படையிலேயே ஒன்றியத்தின் தடை நீடிக்கப்பட்டு வருகின்றது என்பதையும் நீதி ஆயம் சுட்டிக்காட்டியது. அதனாலேயே அந்தத் தடையை நிராகரித்தும்விட்டது.

2009ஆம் ஆண்டில் தமது ஆயுதங்களை அமைதியாக்குவதாகவிடுதலைப்புலிகள்இயக்கம்அறிவித்ததன்பின்னர்அந்த இயக்கத்தால் எந்தவிதமான வன்முறைத் தாக்குதல்களும் இலங்கையிலோ இலங்கைக்கு வெளியிலோ நடத்தப்படவில்லை. அதிலும் குறிப்பாகப் புலிகள் இயக்கத்தில் இருந்த 12 ஆயிரம் பேரை மறுவாழ்வுக்குப் பின்னர் சமூகத்துடன் இணைத்துள்ளதாகக் கொழும்பு அறிவித்துள்ள நிலையில் அவர்களால் எந்தவித அச்சுறுத்தல்களும் ஏற்படவில்லை.

சிற்சில சம்பவங்கள் இடம்பெற்றனவாயினும் அவற்றின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கம் மீளுருவாக்கம் பெற்றது என்றோ வன்முறை வழியில் அந்த இயக்கம் நாட்டம் கொண்டிருக்கின்றது என்றோ நிரூபிக்கப்பட்டதில்லை.

எனவே விடுதலைப் புலிகள் இயக்கம் இனியும் அபாயகரமான இயக்கமாக இருக்கின்றது என்று சொல்வதில் அர்த்தம் இல்லை. ஆனால், இந்த நியாயங்களை எல்லாம் புறந்தள்ளி விடுதலைப் புலிகள் மீதான தடை தொடரும் என்று ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது. நீதி ஆயத்தின் தீர்ப்பு, தற்போது நடைமுறையில் உள்ளதடைக்கு முந்திய பருவகாலத் தடை மீதான பார்வை என்றுகூறி தீர்ப்பை நடைமுறைப்படுத்த ஒன்றியம் மறுத்துவிட்டது.

தனது இந்த முடிவை ஐரோப்பிய ஒன்றியம் மீளாய்வு செய்ய வேண்டியது அவசியம். புலிகள் மீதான தடையை விலக்கி அந்த இயக்கத்தை, அதன் உறுப்பினர்களை மக்கள் நீரோட்டத்தில் கலக்கச் செய்வது ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் இன்றியமையாதது. பொருளாதார மற்றும் அரசியல் நிலை சார்ந்து அது முக்கியமானதும்கூட.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடை நீடிப்பதன் காரணமாக அந்த இயக்கத்திற்குச் சொந்தமான நிதி மற்றும் சொத்துக்கள் ஐரோப்பிய நாடுகளில் முடக்கப்பட்டுள்ளன. இது மிகப் பெரும் சொத்து. வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவவும் பொருளாதார ரீதியில் இந்தப் பகுதியை வளப்படுத்தவும் இந்தச் சொத்துக்களையும் நிதியையும் பயன்படுத்த முடியாத ஒரு நிலையே இருக்கின்றது.

புலிகள் இயக்கம் தனது சொந்த நிதி மூலங்கள் ஊடாகவே கொழும்பு அரசுக்கு எதிரான போரை நடத்தி வந்தது. கிட்டத்தட்ட ஒரு சிறிய அரசையும் மரபு சார் படையணிகளையும் கொண்டு நடத்துவதற்குரிய நிதி வளத்தை அது கொண்டிருந்தது. அதில் கணிசமான வளம், ஏன் பெரும்பாலான என்றே சொல்லலாம், புலம்பெயர்நாடுகளிலேயே உள்ளன. எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பயன்படக்கூடிய மிகப்பெரும் நிதி வளம்ஐரோப்பாவிலும்அமெரிக்காவிலும் இருக்கின்றன.

இப்போதுஇவைமுடக்கப்பட்டுஎந்தப்பயனும்அற்றவையாக உள்ளன. புலிகள் மீதான தடையை நீக்குவதன் மூலம் இந்த நிதியைப் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குப் பயனுள்ளதாக்க முடியும். அதற்கான கட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டு சிறந்த முறையில் அந்த நிதி வடக்கு கிழக்கின் மேம்பாட்டுக்குப்பயன்படுவதற்கானஏற்பாடுகள்செய்யப்படவேண்டும்.

அச்சுறுத்தும் ஓர் அமைப்பாகப் புலிகள் இப்போது இல்லாத போதும் அதன் மீதான தடையை நீடிப்பது அதன் வளங்கள் மூலம் கிடைக்கக்கூடிய நலன்களையும் தடுத்துவிடும். குறைந்தபட்சம் புலிகள்இயக்க முன்னாள்உறுப்பினர்களின் வாழ்வாதாரத்திற்காவது அந்தநிதி உதவக்கூடியவாய்ப்பையும் தடுத்துவிடும்.

ஏற்கனவே புலிகளின் நிதி மற்றும் வளங்களைத் தம் வசம் வைத்திருக்கும் தனி நபர்கள் பலர், அவற்றைச்சுயநலனுடன் பயன்படுத்தி வருகிறார்கள் என்கிற குற்றச்சாட்டும் இருக்கின்ற நிலையில், புலிகளின் நேரடியான வளங்களையும் முடக்கி வைப்பது பயனுள்ளது அல்ல. எனவே ஐரோப்பிய ஒன்றியம்தனது முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.



# நீதிபதி மீதான தாக்குதல் முயற்சியின் பின்னணி குறித்த சந்தேகங்கள்

ந.லோகதயாளன்

கடந்த 22ஆம்திகதிநல்லூரில்வைத்து நீதிபதி இளஞ்செழியனை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலால், யாழ். குடாநாடு மட்டுமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளும் அதிர்ச்சியில் உறைந்தன. குறித்த தினத்தன்று மாலை 5 மணியளவில் நீதிமன்றில்கடமையைமுடித்துக்கொண்டுபுறப்பட்ட நீதிபதிக்குப் பாதுகாப்புக்காக ஒரு பொலிஸ் உத்தியோத்தர்நீதிபதியின் காருக்குள்ளும், வீதி ஒழுங்குப் பாதுகாப்புக்காகமற்றுமோர் பொலிஸ்உத்தியோகத்தர் மோட்டார் சைக்கிளில்நீதிபதி பயணித்த வாகனத்தின் முன்னாலும் பயணித்துள்ளனர். நல்லூர்கோவில்வீதியும்பருத்தித்துறை வீதியும் இணையும் சந்தியில் நீதிபதியின் வாகனம் பயணிக்கும் போதே குறித்ததாக்குதல்சம்பவம் இடம்பெற்றுள்ளது.



இந்தச் சந்தியை நீதிபதியின் வாகனம்அண்மித்தவேளையில் அப்பகுதியில் சிலர் மதுபோதையில்கலகம்விளைவித்துவீதிப்போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்திய வண்ணம் இருந்துள்ளனர். இதனை அவதானித்தநீதிபதியின் பாதுகாப்பு பொலிஸ் உத்தியோகத்தர் தான்பயணித்த மோட்டார் சைக்கிளை வீதியோரம் நிறுத்தி விட்டு போக்குவரத்தை ஒழுங்குபடுத்த முனைந் துள்ளார். இதன்போதே கலகத்தை ஏற்படுத்தியதாக கூறப்படுபவரில்ஒருவர், குறித்தபொலிஸ்உத்தியோகத்தருக்கு அருகில் சென்று அவரைக் கட்டிப் பிடிக்க முனைந்துள்ளார். அத்தோடுஅந்தப்பொலிஸ்உத்தியோகத்தரது கைத் துப்பாக்கியையும் அவதானித்துள்ளார்.

### பரபரப்பை ஏற்படுத்திய தாக்குதல்

உத்தியோகத்தர் எதிர்பாராத சமயம் அந்த நபர் பொலிஸ் உத்தியோகத்தரது இடுப்பில் இருந்த துப்பாக்கியைத் திடீரென உருவியுள்ளார். இதனால் நிலைதடுமாறியபொலிஸ்உத்தியோகத்தர் அதனை மீட்பதற்காக போராடியுள்ளார். காருக்குள் அமர்ந்திருந்தநீதிபதி இதனைக்கண்டதும்உடனடியாகத்தமது வாகனத்தை நிறுத்துமாறு பணித்துள்ளார். சாரதி வாகனத்தை நிறுத்தியதும் நீதிபதி, வாகனத்தில் இருந்து இறங்கி சம்பவ இடத்திற்கு செல்ல அவரின் அருகே இரண்டாவது பாதுகாப்பு பொலிஸ் உத்தியோகத்தரும் சென்றுள்ளார்.

தமது துப்பாக்கியைக் கைப்பற்றிய அந்த நபரிடமிருந்து துப்பாக்கியை மீட்க பொலிஸ் உத்தியோகத்தர் முயன்றவேளை இழுபறிநிலையில்அந்தப்பொலிஸ் உத்தியோகத்தர் மீது அந்த நபர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

இந்தநிலையில்குறித்தஅந்தநபர், நீதிபதிமீதுஇலக்கு வைப்பதனை உணர்ந்த இரண்டாவது பொலிஸ் உத்தியோகத்தர்தனதுகைத்துப்பாக்கியைஎடுத்துஅந்த நபர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவாறு நீதிபதியை துப்பாக்கிச் சூட்டில் இருந்து பாதுகாப்பதற்காக அவரைக் காருக்குள் தள்ளியுள்ளார். நீதிபதியை காருக்குள் ஏற்றும் முயற்சியின்போது துப்பாக்கிதாரியின் தாக்குதலில் இரண்டாவது பொலிஸ் உத்தியோகத்தரும் தோள்ப் பட்டையில் காயமடைகின்றார். இந்தநிலையில்தாக்குதலைமேற்கொண்டவரின் கைத்துப்பாக்கியிருந்த ரவைகள் தீர்ந்த நிலையில் அவர் அங்கிருந்து தப்பிக்கும் முகமாக கெந்தியபடியேசம்பவ இடத்தைவிட்டுஅகன்றுசெல்கின்றார். அவ்வாறு அகன்று சென்றவர், தான் அங்கிருந்து விரைவாகத் தப்பித்துச் செல்லும் நோக்கில், வீதியில் எதிரே வந்தவரை மிரட்டி அவரது மோட்டார் சைக்கிளைப்பறித்துக்கொள்கிறார். தப்பிச்செல்லும் சமயம் கைத்துப்பாக்கியைத் தவறவிட்டு விடுகிறார். இந்த நிலையில் சம்பவத்தில் படுகாயமடைந்த இரு பொலிசாரையும் தனது வாகனத்தைச் செலுத்தி வந்த சாரதியின் உதவியுடன் மீட்டெடுத்த நீதிபதி, படுகாயமடைந்தவரைதனதுமடியில்படுக்கவைத்த நிலையில் மருத்துவமனைக்குஎடுத்துச்செல்கின்றார். செல்லும் வழியிலேயே நீதிபதியே பொலிசாருக்கு சம்பவம் குறித்த தகவலை வழங்குகின்றார். அதன் பின்னரே சம்பவஇடத்தைப்பொலிசார் முற்றுகையிடுகின்றனர். அவ்வாறுஉள்நுழைந்தபொலிசாரிடம்தாக்குதல்தாரி விட்டுச் சென்ற ஓர் கைத்துப்பாக்கியை பொதுமகன் ஒருவரே மீட்டுகையளிக்கின்றார். அங்கே சம்பவ இடத்தில் 10 வெற்றுத் தோட்டாக்கள் வீதியில் சிதறிக் கிடந்துள்ளன.

### பொலிஸார் சம்பவம் குறித்து அக்கறை காட்டத் தவறினரா?

சம்பவ இடத்துக்குச் சென்ற தடயவியல் பொலிசார் குறித்த பிரதேசத்தைப் போக்குவரத்துக்குத் தடை செய்து அத்தனை தடயப் பொருள்களுக்கும் இலக்கமிட்டு அறிக்கையிட்டதன் பின்னர், இரவு சுமார் 8மணியளவில்அவை அனைத் தும் அங்கிருந்து பொலிஸாரால் அகற்றப்பட்டன.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இரு பொலிசாரில் [illegible] நீதிபதியின்மெய்ப்பாது[illegible]ரும் துப்பாக் கியை பறிகொடுத்த பொலிஸ் உத்தியோகத்தருமான ஹேமச்சந்திர (வயது 51), என்பவரின் வலது பக்க வயிற்றுப் பக்கத்தில் பாய்ந்திருந்த தோட்டா, இடது பக்கத்தால் வெளியேறியிருந்தது. உடனடியாக அவருக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொண்ட மருத்துவர்கள் அவரைஉயிர் ஆபத்திலிருந்துகாப்பாற்றமுழுவீச்சில் செயற்பட்டனர்.

இடம்பெற்றசம்பவம்குறித்துஊடகங்களுக்குகருத்து தெரிவித்தநீதி, குறித்ததாக்குதல்தம்மை இலக்காகக் கொண்டதெனத் தெரிவித்திருந்தார். ஆனாலும் பொலிசாரோ குறித்த சம்பவமானது, மதுபோதையில் வந்த ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு எதேச்சையான சம்பவம், அது திட்டமிடப்பட்ட தொரு தாக்குதல் சம்பவம் அல்ல எனவும் தெரிவித்திருந்தனர்.

### பொலிசாரின் தடுமாற்றத்துக்கு காரணமென்ன?

அத்தோடுசம்பவம் இடம்பெற்ற இடத்தில் இருந்ததடயப் பொருட்கள் அனைத்தையும் மீட்டெடுத்து அங்கே 5 பொலிசாரை மட்டும் காவலுக்கு நிறுத்தி வைத்தனர். இதனையடுத்துசம்பவ இடத்துக்குநீதிவான்பார்வையிடவருகின்றார்என்றதகவல்பொலிசாருக்குகிடைக்கின்றது. உடனடியாக மீண்டும் வேகமாகச் செயல்பட்டபொலிசார், நல்லூரடிக்குஓடிவருகின்றனர். தடயவியல்பொலிசாரும்மீண்டும்அந்த இடத்திற்குவந்து மீண்டும் அதேமாதிரியான புறத் தோற்றச்சூழல் உருவாக்கப்படுகின்றது. அதாவது குற்றம் இடம்பெற்ற பிரதேசத்துக்கான அறிவித்தல் பட்டி மீண்டும் கட்டப்பட்டு, மீட்கப்பட்டதடயப்பொருள்கள் இருந்துஎடுக்கப்பட்ட இடங்கள் மீண்டும் வெண்கட்டியால் அடையாளமிடப்பட்டுஅதேபோன்றுபொருள்களும்அடுக்கப்பட்டன. இந்த நிலையில் கைப்பற்றப்பட்ட கைத்துப்பாக்கியின் ரவைக்கூட்டைக் (மகசீன்) காணவில்லை என்ற செய்தியும்வேகமாகபரவுகின்றது. இதனால்மீண்டும் மாதிரிஉருவத்தைத்தயாரிக்க வந்திருந்ததடயவியல் பொலிசார்செய்தியாளர்கள்முன்னிலையில்தேடுதலில் ஈடுபட்டிருந்தனர். அதன்போது ஓர் சந்தர்ப்பத்தில்தாக்குதலுக்குப்பயன்படுத்தப்பட்டதாகக்கூறப்படும் கைத்துப்பாக்கியின் ரவைக்கூடு வீதியோரம் இருந்தகழிவுவாய்க்காலுக்குள் இருந்துமீட்கப்பட்டது. அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் நள்ளிரவைத் தாண்டும் நேரம் உயிரிழந்தார். அதில் ஓர் அங்கமாக மறுநாள் காலையில் அரியாலைப்பகுதியில் இருந்து தாக்குதல்தாரி தப்பியோடிய மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டது. குறித்த தாக்குதலைத் தாமே மேற்கொண்டதாகத் தெரிவித்துப் பொலிஸாரிடம் சரணடைந்த நபர், புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரிய வந்துள்ளது.

இதேநேரம் சம்பவத்தில் இலக்கு வைக்கப்பட்ட நீதிபதியும் தீவகத்தை தமது பிறப்பிறமாகக் கொண்டவர். அதேபோன்று தற்போது குடாநாட்டில் இடம்பெறும் முக்கிய வழக்கான வித்தியா கொலைவழக்கும் புங்குடுதீவுடன் தொடர்புபட்ட வழக்கு என்பதனால் இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்த சந்தேகங்கள் மேலும் வலுப்பெறுவதாகவே அமைகின்றன.



மு.ஈழத்தமிழ்மணி

# கூட்டாட்சி அரசு பதவிக்காலத்தை பூர்த்திசெய்ய வாய்ப்புள்ளதா?

முன்னாள் அரசதலைவர் மகிந்தராஜபக்சவின் குடும்ப ஆட்சி ஒடுக்கப்பட வேண்டும்; சர்வாதிகார நிர்வாகம் அகற்றப்படல் வேண்டும்; ஆட்சிமாற்றம் வேண்டும்; மாற்று அரசு அமையவேண்டும் என்ற எடுகோள்களை மனதில்கொண்டே மூவின மக்களும் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி இடம்பெற்ற அரசதலைவர்தேர்தலில், பொதுக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான மைத்திரிபால சிறிசேனவை வெற்றியீட்ட வைத்தனர்.

ஐக்கியதேசியக்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க, ஐக்கியதேசியக் கட்சியின் வேட்பாளராக அந்த அரசதலைவர் தேர்தலில் நிறுத்தப்பட்டிருக்கவில்லை. ரணில் அந்தத் தேர்தலில் போட்டியிட்டிருந்தாலும் அவர் வெற்றிபெறும் வாய்ப்பு இருந்திருக்காது. சிறுபான்மையின மக்கள் ரணிலுக்கு ஆதரவாக வாக்களிப்பரெனக் கருதப்பட்டாலும், விடுதலைப் புலிகளுடனான போரை வெற்றிகொண்ட மகிந்தவுக்கு சிங்கள மக்களது ஆதரவு வாக்குகள் பெரும்பான்மையாக இருந்ததை அரசதலைவர் தேர்தல் முடிவு உணர்த்தியிருந்தது.

ஐக்கியதேசியக்கட்சியின் ஆதரவு வாக்குகளும், வடக்குகிழக்கு மாகாணங்களில் உள்ள 70 வீதமான தமிழ் மக்களுடைய வாக்குகளும், முஸ்லிம் மக்களுடைய வாக்குகளும் இன்றைய அரச தலைவருக்கான வெற்றி வாய்ப்புக்குப் பேருதவியாக அமைந்தன.

### சோதனைகள் பலவற்றுக்கு முகம் கொடுத்து வரும் கூட்டாட்சி அரசு

நல்லாட்சி என்ற பெயரில் உருவாகிய புதிய கூட்டாட்சிஅரசு, இரண்டரை ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில், பலசோதனைகளுக்குமுகம் கொடுத்துவருகின்றது. தற்போதைய கூட்டாட்சி அரசில்பதவிப்போட்டிகள், முரண்பாடுகள், தலைதூக்கியிருப்பதனால் அரசுக்கு நிம்மதியற்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. போராட்டங்கள், இயற்கை அழிவுகள், வறட்சி, டெங்குநோய்த்தாக்கம், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் என்பவை உட்பட வேறும்பல்வேறுபிரச்சினைகளால் இன்றைய கூட்டாட்சிஅரசுத்தரப்பினர்கள்நிம்மதியிழந்து போக நேர்ந்துள்ளது.

இன்றைய கூட்டாட்சி அரசு இரண்டரை வருடங்களாகியும் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களை நடத்த முடியாமல் காலத்தைக்கடத்திவருவதுகடும் விமர்சனங்களுக்கு உள்ளாகி வருகின்றது.

அது மட்டுமல்லாமல் இந்த வருட ஆரம்பத்திலிருந்து முன்னாள் அரச தலைவரான மகிந்தராஜபக்ச, தற்போதைய கூட்டாட்சி அரசை இந்த வருட முடிவுக்குள் கவிழ்ப்பேன் என விடுத்து வரும் சவால் அல்லது எச்சரிக்கை சாதாரணமானதொரு விடயமல்ல. அதுவும் ஒரு அச்சுறுத்தலாகவே கூட்டாட்சி அரசுக்கு இருக்கின்றது. இந்த வருடத்தின் ஆரம்பத்திலிருந்துஎதிர்த்தரப்பினரிடமிருந்துவெளிவரும் ஆட்சிக் கவிழ்ப்பு அச்சுறுத்தல் ஒருபுறமிருக்க அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இணைந்த கூட்டாட்சி அரசு, கடந்த வருட இறுதிப் பகுதியில் இராணுவப்புரட்சியொன்றுக்கு இந்த நாட்டில் இடமில்லை என்ற செய்தியை வெளியிட்டிருந்தும்அரசின் தடுமாற்றநிலையை நாட்டுமக்கள் ஓரளவாவது கணிப்பிட வைத்திருந்தது.

கூட்டாட்சி அரசு ஆட்சிக்கு வந்த பின்னர், அரச சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்கும் கொள்கையைப் பின்பற்றிவருகின்றது. கொழும்புத் துறைமுகத்தின் ஒரு பகுதியை சீனாவுக்கும் பலாலிவானூர்தி நிலையம் மற்றும் திருகோணமலை துறைமுகத்தை இந்தியாவுக்கும் குத்தகைக்கு வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக எதிரணியினர் வெளியிட்டுவரும் சந்தேகங்கள் பெரும் குற்றச்சாட்டுக்களாக மகிந்த தரப்பினரால் முன்வைக்கப்பட்டுள்ளன.

**மூன்று மாதகாலமாக கூட்டாட்சி அரசுக்கு ஏற்பட்டுள்ள அரசியல் தளம்பல்கள் எதிரணிக்கு வாய்ப்பாக அமைந்து வருகிறது. தற்போதைய அரசானது மக்களுக்கு அளித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றாத அதே நேரம், நாட்டைப் பொருளாதார ரீதியில் அதலபாதாளத்துக்குள் தள்ளியிருக்கின்றது.**

### அரசியல் பனிப்போரில் சிக்கித் தவிக்கின்றனர் மைத்திரி மற்றும் ரணில்

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி இடையேயான கூட்டு ஆட்சி தொடர்பான ஒப்பந்தத்தை 2020 ஆம் ஆண்டு வரை நீடிப்பதா? இல்லையா? என்ற கேள்வியோடு நல்லாட்சி தொடர்ந்து கொண்டிருந்தாலும், ஆட்சி [illegible]க்கப்படுமா? அல்லது நீடிக்குமா? என்பதே தற்போது இலங்கை அரசியலில் எழுந்துள்ள கேள்விகளாகும். அரசதலைவர், தலைமை அமைச்சர் ஆகியோரிடையே தற்போது கடுமையான அரசியல் பனிப்போர் நிலவி வருகின்றது. இதன் காரணமாக நிதி அமைச்சர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் இருவரும் அவரவர்களது பதவிகளிலிருந்து மாற்றப்பட்டிருந்தனர்.

**புதிய அரசமைப்பு என்பதைவிட தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பில் திருத்தங்களைச் செய்வது குறித்த அரச பீட** னைசெய்வதாகவும், பௌத்த மதத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது என்ற விடயத்திலும் இரண்டு தேசியக்கட்சிகளும் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கவில்லையெனவும் கூறப்படுகிறது. இருப்பினும் அரசதலைவருக்கும் தலைமை அமைச்சருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள அரசியல் பனிப்போர், நெருக்கடிகளை கொண்டுவரக்கூடிய நிலைமையையும் எதிர்பார்க்க இயலும்.

கடந்த மூன்று மாதகாலமாக கூட்டாட்சி அரசுக்குஏற்பட்டுள்ள அரசியல் தளம்பல்கள் எதிரணிக்கு வாய்ப்பாக அமைந்து வருகின்றன. தற்போதைய அரசானது மக்களுக்கு அளித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றாதஅதேநேரம், நாட்டைப்பொருளாதாரரீதியில்அதலபாதாளத்துக்குள் தள்ளியிருக்கின்றது.

இருமுக்கியகட்சிகளுக்கும் இடையேயான இணக்கப்பாடுமுடிவடையும் நிலையில், சுதந்திரக்கட்சியின்தலைமைலான அரசுமட்டுமே இருக்க வேண்டுமென சுதந்திரக் கட்சியினர் வற்புறுத்துகின்றனர்.

### உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் இழுபறிப்படுகிறது

அதேவேளை கிழக்கு மாகாண சபை உட்பட நாட்டில் மூன்று மாகாணசபைகளுக்கானதேர்தல்களை நடத்துவதையும் அரசு ஒத்திவைக்குமெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. நாட்டில் இந்த வருட முடிவுக்குள் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறுமா என்ற சந்தேகமும் தென்னிலங்கையில் எழுந்துள்ளது.

ஜே.வி.பியும் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கியிருக்கின்றது. ஆனாலும் மைத்திரிபால சிறிசேன தரப்பினர் தாம் எந்தச் சவால்களுக்கும் முகம் கொடுக்கத் தயாராகவேயிருப்பதாகக் கூறிவருகின்றனர். ரணிலும் கூட அவ்விதமே கூறிவருகிறார்.

இத்தகைய பின்னணியில் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு இந்த அரசைத் தொடர்வதா? அல்லது வீட்டுக்கு அனுப்புவதா? என்பதை இந்த அரசில் உள்ளவர்கள் தீர்மானிக்க வேண்டும் என ஒருங்கிணைந்த எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

சிறுபான்மையின மக்களின் கோரிக்கைகள் எவையும் இந்த அரசால் நிறைவேற்றப்படவில்லை. நல்லாட்சி, தேசிய அரசு என்ற வடிவில் உருவாக்கப்பட்டிருந்தாலும், இந்த அரசுக்குச்சவால்கள், கண்டனங்கள், அதிருப்திகள் மற்றும் நாளாந்த விமர்சனங்கள் யாவும் அதிகரித்த வண்ணமே உள்ளன. நல்லாட்சி அரசு தனது பதவிக்கால முடிவு வரை தப்பிப்பிழைக்குமா? அல்லது வருட முடிவுக்குள் வீழ்ச்சி கண்டுவிடுமா? என்ற **கேள்விக்குக் காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.**



## ஆசிரியருக்கான கடிதம்

### அரசு மக்களை ஏமாற்றுவது எந்த வகையிலும் நியாயமானதல்ல

மருத்துவர்களின் பணிப்புறக்கணிப்பு, பெற்றோலியக்கூட்டுத்தாபன ஊழியர்களின் வேலை நிறுத்தம், மின்வெட்டு, அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலையுயர்வு, பஸ் கட்டணங்களின் அதிகரிப்பு என்ற இவை யாவும் ஒன்று சேர்ந்து அரசின் மீது மக்களின் வெறுப்பை அதிகரிக்கச் செய்து வருகின்றன.

நல்லாட்சி என்று கூறிக் கொண்டு மக்களை நட்டாற்றில் தவிக்க விடுகின்ற செயல் ஏற்கக் கூடியதல்ல. மருத்துவர்கள் அடிக்கடி பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவதால் மருத்துவமனைகளுக்குச் செல்கின்ற நோயாளர்கள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். உரிய சிகிச்சை பெற முடியாது பாதிக்கப்படுகின்றனர். மருத்துவர்கள் அரசுக்குச் சவால்விடும்போது, தம்மை நம்பி சிகிச்சைக்காக வருகின்ற நோயாளர்களையும் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தனியார் மருத்துவமனைகளை நாடிச் சிகிச்சைபெற முடியாத ஏராளமானவர்கள் அரச மருத்துவமனைகளுக்கே செல்கின்றனர். இவர்கள் பாதிப்புறும் வகையில் அரச மருத்துவர்கள் செயற்படுவது எந்த வகையிலும் நியாயமானதல்ல.

பெற்றோலியத் துறை ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக எரிபொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவியதால் ஏற்பட்ட பாதிப்புக்கள் அதிகம். இதில் அன்றாடம் எரிபொருள்களை வாங்கிப் பயன்படுத்தியோரது நிலைதான் மோசமாகக் காணப்பட்டது.

தற்போது மின்வெட்டு நடைமுறைக்கு வந்துள்ளது. இதனால் இரவு வேளையில் மாணவர்கள் உட்படப் பலரும் பாதிக்கப்படுகின்றனர். அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலையேற்றம் மற்றும் பஸ்கட்டண உயர்வு ஆகியனவும் சாதாரண மக்களை வெகுவாகப் பாதித்து வருகின்றன.

அரசு இந்நெருக்கடிகளுக்கும் மாற்றுத் தீர்வைக் காண வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளது. ஆனால் இதை விடுத்து எப்போதும் ஏதோ காரணத்தைச் [illegible]

[illegible]பாலன்,
திருநெல்வேலி.

# மூலதன செலவினங்கள் தொடர்பில் கணக்காய்வு நடவடிக்கை இடம்பெறும்

## திணைக்களம் அறிவிப்பு



கடந்த வருடத்தில் பிராந்திய ரீதியாக முன்னெடுக்கப்பட்ட 200 இற்கும் அதிகமான மூலதனச் செலவினங்கள் தொடர்பில் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படும் என கணக்காய்வாளர் நாயகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி கடந்த வருடத்தில் அண்ணளவாக 622 பில்லியன் ரூபா பெறுமதியான மூலதனச் செலவினங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதென கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

"50 வீதமான கணக்காய்வு நடவடிக்கைகள் நிறைவுசெய்ய ப்பட்டுள்ளன. இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ள கண்க்காய்வுகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட செலவினங்கள் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தியுள்ளோம். அவை குறித்து விசாரணைகளைச் செய்வதற்கும் தீர்மானங்களை மேற்கொண்டுள்ளோம். இத்தகைய மூலதன செலவினங்களில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. முன்னெடுக்கப்பட்டுள்ள சகல மூலதன செலவினங்கள் தொடர்பாகவும் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இறுதி அறிக்கையை விரைவில் பெற்றுக் கொள்ள எதிர்ப்பார்த்துள்ளோம்." - என்றார்.

> "மாத்தளை, பொலன்னறுவை, பதுளை, எம்பிலிப்பிட்டி, கேகாலை, இரத்தினபுரி மாவட்டங்களில் மேற்கொள்ளப் பட்டுள்ள மூலதனச் செலவினங் களில் அதிகளவிலான முறை கேடுகள் பதிவாகியுள்ளன."

இந்தக் கணக்காய்வு விசாரணைகளுக்காக எட்டு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

# 'நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்' சார்ந்து இணையத்தளம் ஆரம்பமானது

## தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத்திணைக்கள ஏற்பாட்டில்




'இலங்கையில் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் குறிகாட்டிகளின் அந்தஸ்து 2017' எனும் தலைப்பிலான வெளியீடொன்றையும், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் பற்றிய தனது வகைப்படுத்தப்பட்ட தகவல்களையும், குறிப்பாக மக்களிடையே வெளித்தருவதற்கான இணையத்தள மூலமொன்றையும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத்திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளானது (SDG) 169 இலக்குகளையும், 244 குறிகாட்டிகளையும் கொண்ட பதினேழு குறிக்கோள்களின் தொகுப்பாக விளங்குகிறது.

இந்த வெளியீட்டின் முதற் பிரதியை பிரதி சபாநாயகரும் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் பற்றிய நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவருமான திலங்க சுமதிபாலாவிடம் தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.ஜே.சதரசிங்க கடந்த புதன்கிழமை கையளித்தார்.

இந்த இணையத்தளமானது நிலைபேறான அபிவிருத்தியை நோக்கிய நிகழ்ச்சித் திட்டங்களை அளவீடு செய்து குறிக்கோள்களை அடைவதற்கும், அனைத்து அக்கறைதாரர்களின் பொறுப்புக் கூறலை உறுதி செய்வதற்கும் ஒத்துழைப்புகளை வழங்கும் ஆரம்பத் தளமாகத் தொழிற்படவுள்ளது.

மேலும் 2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் அங்கத்துவ நாடுகள் புதிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் அங்கமாக வறுமையை ஒழித்தல், பூமியைப் பாதுகாத்தல் மற்றும் அனைவருக்குமான சுபீட்சத்தை உறுதி செய்தல் என்பன தொடர்பிலான குறிக்கோள் தொகுதியொன்றை நிறைவேற்றியது.

இது 'எமது உலகை மாற்றியமைத்தல் நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரல்' என உத்தியோகபூர்வமாக அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455

27/7/2017

www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | | இன்று | நேற்று |
|---|---|---|---|---|
| ASPI | | -0.19 | 6,668.86 | 6,669.05 |
| S&P SL20 | | 0.28 | 3,830.84 | 3,830.56 |
| வியாபாரப்புரள்வு | | | 780,910,720 | 318,965,472 |
| உள்நாடு- | கொள்வனவு | | 546,456,000 | 233,294,256 |
| | விற்பனை | | 750,002,880 | 272,145,760 |
| வெளிநாடு- | கொள்வனவு | | 234,454,720 | 85,671,224 |
| | விற்பனை | | 30,907,832 | 46,819,720 |




| கம்பனி- அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதி விலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| சிலோன் டொபாக்கோ | CFT.N | 5.70 | 85,627,340 | 428,176,493 |
| எ பி பைனான்ஸ் | LFIN.N | 135.00 | 624,472 | 84,280,541 |
| லங்கா ஐ ஓ சி | LIOC.N | 34.50 | 2,029,019 | 69,921,696 |
| சம்பத் வங்கி | SAMP.N | 280.00 | 144,501 | 40,460,230 |
| மெல்ஸ்ரோஸ்கோப் | MELS.N | 67.00 | 181,278 | 12,142,603 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி | COMB.N | 138.00 | 85,997 | 11,881,081 |
| டோக்கியோ சிமேன் | TKYO.N | 76.70 | 144,070 | 10,333,879 |
| செலஸ் கப்பிற்றல் ஹோல்டிங்ஸ் | CFVF.N | 34.50 | 207,643 | 7,170,925 |
| யூனியன் வங்கி | UBC.N | 14.80 | 457,321 | 6,772,667 |
| ரேணுக அக்கிரி பு | RAL.N | 3.10 | 1,475,270 | 4,539,006 |

- பங்குலாபம் -
ஜோன் கீல்ஸ் ஹோட்டல் - 0.40 சதம்
சேவ்ரோன் லூப்பிரிக்கன் - ரூபா 2.00
கேன்வீனியன் புட் - ரூபா 4.00

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| பரிமாற்றத்தில் | 225 |
| விலை உழைப்பு | 10.7 |
| புத்தகப்பெறுமதி | 1.4 |
| பங்குலாப விளை | 2.6 |




அனலையம்பதி - நயினாகுளம் கூழாவடியுறை அருள்மிகு
பூர்ணாதேவி புஸ்கலாதேவி சமேத ஹரிஹர புத்திரர் (ஐயனார்) தேவஸ்தான
வருடாந்த மஹோற்சவ பெருந்திருவிழா சிறப்பிதழ் - 2017

கொடியேற்றம்
29.07.2017
சனிக்கிழமை

அத்த குந்துரு மைந்தர்க்கு அரிகர
புத்தி ரன் எனும் நாமம் புனைந்து பின்
ஒத்த பான்மை உருத்திரர் தம்மொடும்
வைத்து மிக்க வரம் பல நல்கியே

தேர்த்திருவிழா
06.08.2017
ஞாயிற்றுக்கிழமை

விழாக்கால நிகழ்வுகள்

28.07.2017 - வெள்ளி மாலை பூர்வாங்க கிரியைகள் ஆரம்பம்
29.07.2017 - சனி முதலாம் திருவிழா முற்பகல் 11.30 மணியளவில் துவஜாரோகணம் (கொடியேற்றம்), மாலை யாக பூஜை சுவாமி வீதி வலம் வருதல்.
30.07.2017 - ஞாயிறு 2ஆம் திருவிழா - மாலை பூச்சொரியும் உற்சவம்
31.07.2017 - திங்கள் 3ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம், மாலை வேத பாராயணத் திருவிழா.
01.08.2017 - செவ்வாய் 4ஆம் திருவிழா பகல் விஷேட திரவிய அபிஷேகம், விஷேட திரவிய ஹோமம், பக்தி முத்தி பாவனோற்சவம்
02.08.2017 - புதன் 5ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம், மாலை வசந்த உற்சவம், முத்துச் சப்பரம்.
03.08.2017 - வியாழன் 6ஆம் திருவிழா பகல், இரவு கைலாசவாகனத் திருவிழா
04.08.2017 - வெள்ளி 7ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம்,மாலை வேட்டைத் திருவிழா
05.08.2017 - சனி 8ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம், சந்தன அலங்காரம், மாலை சப்பைரத உற்சவம் (சப்பரத் திருவிழா)
06.07.2017 - ஞாயிறு 9ஆம் திருவிழா பகல் தேர்த்திருவிழா முற்பகல் 10 மணிக்கு இரத ஆரோகணம், வீதியுலா, பச்சை சாத்துதல், மஹா அபிஷேகம், (108 சங்காபிஷேகம்) பஞ்சமுக அர்ச்சனை.
07.08.2017 - திங்கள் 10ஆம் திருவிழா தீர்த்தத்திருவிழா முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், யாக கும்ப அபிஷேகமும் நடைபெறும். மாலை துவஜா அவரோகணம்.(கொடியிறக்கம்) சண்டேஸ்வரர் உற்சவம், ஆச்சாரியார் உற்சவம் நடைபெறும்.
08.08.2017 - செவ்வாய் 11ஆம் திருவிழா பகல் 1008 சங்காபிஷேகம், மாலை திருக்கல்யாண உற்சவம்.
09.08.2017 - புதன் மாலை வைரவர் பொங்கல்.

11 தினங்களும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். நிதியுதவி வழங்க விரும்பும் அடியார்கள் பரிபாலன சபையினருடன் தொடர்பு கொள்ளவும்.

அனலைதீவு - 05

"அனைவரும் வருக ஐயன் அருள் பெறுக"
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

பரிபாலனசபையினர்,
ஐயனார் ஆலயம்



# 'அலங்காரக் கந்தனுக்கு மணிமுடி அலங்காரம்'

## அருளின் தத்துவ விளக்கம் காண வாரீர்

சி.சக்திகீரீவன்

இறைவனின் படைப்பியல்பில் ஆறறிவு படைத்த மனிதர்களை ஆற்றுப்படுத்தும் செயல்நெறியை அதீதமாகச் செய்திருப்பதில் ஆலயங்கள் முதன்மை பெறுகின்றன. 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற மூத்தோரின் கருத்தூன்றலுக்கு அமைய எங்கும் அமைந்திருந்து, ஆன்மீக மேன்மை பொதிந்து அருள்மொழிவைச் செய்திருக்கின்றன. அவற்றுள் தமிழர்களின் காவல் தெய்வமாக விளங்கும் தமிழ் கிழவன் முருகப்பெருமானின் ஆலயங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. குறிப்பாக கதிர்காமக் கந்தன் , மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்,நல்லூர்க்கந்தசுவாமி கோயில், செல்வச்சந்நிதி முருகன் கோயில், உகந்தை முருகன் கோயில் என்பன வரலாற்றுச்சிறப்பினை கொண்டுள்ளன. இவற்றுள் சில தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்த யோகிகளுடனும், ஞானிகளுடனும்,அக்கால மன்னர்களுடனும்மிகுந்ததொடர்புடையவவையாகக் காணப்படுகின்றன.

சிவனொளிபாதமலைக்கும்,கதிர்காமத்துக்கும் இமயமலையில் அமர்ந்து தவம் செய்த ஞானிகள் யாழ்ப்பாணமூடாகப் பயணம் செய்து தலயாத்திரைகள் மேற்கொண்டதான தகவல்கள் அறியக் கிடக்கின்றது.

அந்தவகையிலே இலங்கைத்திருநாட்டின் புகழ்பெற்ற முருகன் ஆலயங்களில் ஏவிளம்பி வருடப் பெருந்திருவிழாக்கள் ஆரம்பமாகி இடம்பெற்றுவருகின்றன. வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க்கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாக்களும் இன்றையதினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றன.

பெருந்திருவிழா என்றதுமே ஆலயச் சூழலும்,அயல் பிரதேசங்களும் இந்திரபுரிபோல் காட்சியளிக்கத் தொடங்கிவிடும். அலங்காரக் கந்தன் மணிமுடி அலங்காரம் பெறுவான். திருவிழாக்கள் அத்தனையும் திவ்யமான தாகவும்,போகமோட்சத்தைத் தரவல்லதாகவும் அமைந்திருக்கும்.திருவிழாக்கள் பொதுவாகவே எல்லாப் பூதங்களுக்கும், உலகங்களுக்கும் இன்பத்தைக் கொடுக்கும் விதமாகவும் எப்பொழுதும் வெற்றியையும், சித்தியையும், அமைதியையும் தந்து ராட்சதர்களை அழித்து மனிதர்களைக் காத்திருக்கும் அருள்நெறிகளாகவும் முன்னிலை பெறுகின்றன.

ஆகையால் மக்கள் தமது வீடுகளைப் புனிதம் செய்துகொண்டு இந்தக் காலப்பகுதியில் விரத அனுட்டானங்களை மேற்கொள்கின்றனர்.

ஆலய பூஜை வழிபாடுகள் நித்தியம், நைமித்தியம் என இருவகைப்படும். ஆலயங்களில் நித்திய பூஜைகளில் நிகழும் குறைகளை இந்த மகோற்சவம் என்கின்ற நைமித்திய பூஜை வழிபாடுகள் நிவர்த்தி செய்வதாக ஆகமங்கள் கூறுகின்றன.

### நித்திய பூஜை

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் ஆறுகாலப்பூஜைகளும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன. அதிகாலை வேளையில் திருப்பள்ளி எழுச்சி பாடி சுவாமியைத் துயில் எழுப்புவதும், அர்த்தசாமப்பூஜையில் சுவாமியைப் பள்ளியறையில் துயில் கொள்ளச் செய்வதும் அற்புதமானது. அடியவர்கள் உள்ளங்களில் பக்திப்பிரவாகத்தை ஏற்படுத்துகின்றன. அனுதினமும் பஞ்சகௌய பூஜை, நித்தியபலி, அக்னிகார்யம், கும்பபூஜை, நிவேதனம், அபிசேகம், நித்திய உற்சவம் என்பன சிறப்பாக இடம்பெறுகின்றன. சிவாச்சார்ய பெரியோர் பூஜா காரியங்களை மிகச் சிறப்புடன் செய்கின்றனர். சுவாமிக்கு ரிய பிரசாதங்க ளைத் தங்கள் சிரசின் மேல் உயர்த்தியவாறு வீதி வலம் வந்து நிவேதிக்கும் காட்சி அடியவர் உள்ளங்களை முருகக் கடவுளின் திருவருளின் பால் இணைந்தி ருக்கச் செய்கின்றன. மாதப் பிறப்பில் சங்கிராந்தி தீர்த்தமும், மாதந்தோறும் கார்த்திகை உற்சவமும் மிகச் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.இங்கு சரீரத் தொண்டாற்றும் தொண்டர்கள் சிவபூதங்கள் போலச் செயற்பட்டு சிவப்பொலிவை மிளிரச் செய்கின்றனர். மேலும் வேதபாராயணம், ஸ்ரீ ருத்ரம், சமகம்,திரிசதி பதமந்திரம் போன்றவை பொருத்தமான வேளைகளில் பாராயணம் செய்யப்படுகிறது. திரு முறைப்பாரா யணம்,கந்தபுராணபடனம்,திருச்செந்தூர் புராணபட னம் போன்றவை சிறப்புற இடம்பெற்று வருகின்றன.

> நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தில் கந்தன் திருப் பாதங்களைப் பணிந்து போற்றுவோம். அடியவர்களாக அனைவரும் பக்தி சிரத்தையுடன் ஆசார சீலர்களாகப் பங்கு கொண்டு முருகப் பெருமானின் திருவருளை இறைஞ்சுவோம்.

### சண்முகார்ச்சனை

வெள்ளி, சனி, உற்சவ காலங்கள் தவிர்ந்த நாள்களில் சண்முகப்பெருமானுக்கு விசேட திரவிய அபிசேகமும்,ஸ்நபன கும்ப அபிசேகமும் சிறப்பாக இடம்பெறுகின்றன. ஆதார சக்தியில் இருந்து ஆசனங்கள் பூசிக்கப்பெற்று ஆகமக் கிரமமான ஆவாகனக் கிரியை இடம்பெறும்.அதனைத் தொடர்ந்து அனைத்து உபசாரங்களும் இடம்பெற்று பின் ஆறு சிவாச்சார்யர்கள் ஆறுமுக பாவங்களோடு நின்று சண்முக அர்ச்சனை செய்து ஆறு முகங்களுக்கு தீபாராதனை செய்யும் காட்சி வழிபடுவோருக்கு குகலோகத்தை காண்பியம் செய்யும். தவிர வெள்ளிக்கிழமைகள் தோறும் பழனி ஆண்டவருக்கு விசேட திரவிய அபிசேகம் இடம்பெறுவதும் சிறப்பம்சமாகும்.

### ஒரு ரூபா

ஆலயத்துக்கு வருகைதரும் பக்தர்கள் ஆறுமுகப் பெருமானுக்கு அர்ச்சனை செய்வதற்கு ஒரு ரூபாவையே காணிக்கை செய்கின்றனர்.ஏழைகள் மனம் கோணாது இறைதரிசனம் கண்டு பலன்பெறவேண்டும் என்பதே ஆலயத்தை நிர்வாகிக்கும் ஸ்ரீமான் இரகுநாதமாப்பாண முதலியார் குமாரதாச மாப்பாண முதலியாரின் விருப்பாகும்.இறைகாரியங்களில் மக்கள் இணைவதற்கும்,ஏனையவர்களுக்கு இடையூறு இல்லாது வழிபடுவதற்கும் பொருத்தமான உத்திகள் நிர்வாகத்தினரால் கையாளப்படுவது மிக அலாதியானதே. அடியவர்கள் சைவ ஆசார சீலர்களாகவே ஆலயத்துக்கு வருகை தரவேண்டும் என்பது இறுக்கமான கட்டளையாகியும் விடுகிறது.

### அலங்கார வஸ்திரங்கள் அற்ற ஆலயப் பிரவேசம்

ஆண்கள் அங்கவஸ்திரத்துடன் (சேட்டுடன் அல்லது சால்வை போர்த்தியபடி) ஆலய உட்பிரவாகத்துக்கு செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. பெண்கள் கலாச்சார பிறழ்நிலையற்ற நாகரீகமான உடை அணிந்தே ஆயலம் செல்ல வேண்டும்.எத்தகு உயர் பதவிநிலை உடையவரானாலும் இதுவே நடைமுறையாகவும்,ஆன்மீக நெறிமுறை பண்பியல்பாகவும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

### பெருந்திருவிழா

பெருந்திருவிழாக்கள் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய பஞ்சகிருத்தியங்களைக் குறிப்பதாக அமைகின்றது. மகோற்சவ காலத்தின்போது இறைவன் விம்பம் (மூர்த்தி),தம்பம் (கொடிமரம்), கும்பம், அக்கினி, சிவாச்சார்யர்கள் மற்றும் அடியவர்களில் எழுந்தருளி இவ்வுலகைக் காத்து இரட்சிக்கிறான். இந்தக் காரண காரியங்கள் கொண்டே உற்சவங்கள் மிக உயர்ந்த மேன்மைத்துவம் உடைய பேறாகப் போற்றப்படுகின்றன.



### கொடியேற்றத் திருவிழாவின் மகத்துவம்

நல்லூர் கந்தசுவாமி ஆலய கொடியேற்றத் திருவிழாவின் முன்பான தினத்தில் செங்குந்தா மரபைச் சேர்ந்தவர்கள் கொடிச்சீலையை மேள வாத்திய இசை முழங்க தேரில் எழுந்தருளச் செய்கின்றனர். தமது இருப்பிடத்தில் இருந்து ஆலயத்திற்குக் கொண்டு வந்து சேர்க்கின்றனர்.இந்த மரபு என்பது பண்டைய காலம் தொட்டு இடம்பெற்று வருகிறது.

கொடிப்படத்தில் மயில் வாகனம் வரையப்பட்டிருக்கும்.அதனோடிணைந்து பத்மபீடமும் அதன்மேலாக சக்தி ஆயுதமும் அதற்கும் மேலாக கொடி, சாமரம் இருபக்கமும் அஸ்ட மங்கலம் என்பனவும் வரையப்பட்டிருக்கும்.

பதி,பசு,பாச வடிவமாக கொடி மரம் காட்சிதரும்.அதாவது கொடிமரம் இறைவன் என்றும்,கொடிச்சீலை ஆன்மா என்றும்,தர்ப்பைக் கயிறு பாசம் என்றும் இதனோடு பிணைந்த கயிறு திருவருட் சக்தி என்றும் கொள்ளப்படுகிறது.

மல்லாந்து படுத்திருக்கும் ஞானியின் தோற்றத்துக்கு நேரொப்பானதாக ஆலயம் அமைவுபெற்று விளங்குகிறது. சிரசு - கர்ப்பக்கிரகம்(மூலஸ்தனம்),கண்டம் (அந்தராளம்)- கர்ப்பக்கிரகத்தையும் மகா மண்டபத்தையும் இணைக்கும் பகுதி, மார்பு - மகா மண்டபம்,தொப்புள்(மயூரம்) - மூலாதாரம், கொடிமரம் -பீடம், பாதம்- கோபுரம் என அமைகிறது.

ஆக,நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தில் கந்தன் திருப்பாதங்களை பணிந்து போற்றுவோம். அருள் பொழியும் மூலாதார மூர்த்தியாக கந்தப் பெருமானை மனம் குளிரக் கண்டு மகிழ்வோம். அடியவர்களாக அனைவரும் பக்தி சிரத்தையுடன் ஆசார சீலர்களாகப் பங்கு கொண்டு முருகப் பெருமானின் திருவருளை இறைஞ்சுவோம்.

*"ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே*
*ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே*
*கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே*
*குன்று உருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே*
*மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே*
*வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே*
*ஆறுமுகம் ஆன பொருள் நீ அருள வேண்டும்*
*ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமானே*

# பத்தி எழுத்து

## தோற்றுப் போனது இனவாதம்

யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனின் மெய்ப்பாது காவலர் ஹேமச்சந்திர துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த சம்பவம் ஒட்டுமொத்த நாட்டிலும் பெரும் அதிர்வலையைத் தோற்றுவித்திருந்தது. இது நீதிபதியை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமாகப் பார்க்கப்பட்டு வந்த நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை நீதிபதி மா.இளஞ்செழியன் உயிரிழந்த பொலிஸ் அதிகாரியின் மனைவியின் காலில் வீழ்ந்து கதறி அழுதமை, இந்த விடயத்தை வேறு கோணத்திலும் பலரையும் சிந்திக்க வைத்தது.

காலில் வீழ்ந்து கதறியழும் காணொலியைச் சமூக வலைத் தளங்களில் பலகோடிப் பேர் பார்வையிட்டனர். இந்தக் காணொலிக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து சிங்கள ஊடகங்களும் செய்தியை வெளியிட்டிருந்தன. இந்தச் சம்பவம் தொடர்பில் சமூகவலைத் தளங்களில் சிங்கள இளையோர் தமது கருத்துக்களைப் பதிவு செய்தனர்.

அந்தக் கருத்துக்கள், இனவாதத்தை வைத்து அரசியல் நடத்துபவர்களுக்கு பெரும் ஏமாற்றமாகவே அமைந்தன. நீதிபதி இளஞ்செழியனின் செயற்பாட்டை மெச்சுவதற்கு வார்த்தைகள் இல்லை என்று கூட அவர்கள் பதிவிட்டனர். அந்தச் சம்பவத்தில் மனிதமே உயிர்ப்புடன் இருந்ததாகவும், இனம், மதம், மொழி எல்லாம் அங்கே தோற்றுப் போய்விட்டதாகவும் சமூக வலைத் தளத்தில் கருத்துக்கள் பதிவிடப்பட்டன. சிங்கள அரசியல்வாதிகள், நீதிபதி மா.இளஞ்செழியனிடம் மனிதம் தொடர்பில் கற்க வேண்டும் என்றுகூட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அமெரிக்கத் தூதுவர் அதுல்கெசாப் கூட, நீதிபதி மா.இளஞ்செழியனின் செய்கையால் நெகிழ்ந்து போனேன் என்று தனது கீச்சகத்தில் குறிப்பிட்டிருந்தார்.

நீதிபதி மா.இளஞ்செழியனின் இந்தச் செய்கை, தமிழ் - சிங்கள இனங்கள் என்ற பிரிவுகளைத் தாண்டி, இனவாதத்தை மனித நேயத்தால் தோற்கடித்து விட்டது.

இதனைவிட, சிங்கள அரசியல்வாதிகளால் கடும்போக்காளராகச் சித்தரிக்கப்படும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூட, உயிரிழந்த பொலிஸ் அதிகாரிக்காக அனுதாப அறிக்கை வெளியிட்டிருந்தார். அத்துடன் அவர் நின்றுவிடவில்லை. உயிரிழந்த பொலிஸ் அதிகாரியின் வீட்டுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தியிருக்கின்றார்.

தமிழ் இனவாதியாக சிங்கள மக்களுக்கு இது நாள் வரையில் விக்னேஸ்வரனின் விம்பத்தைக் காட்டி வைத்திருந்த, சிங்கள அரசியல்வாதிகளுக்கு இவை எல்லாம் பேரிடியாகத்தான் இருக்கும். ஏனெனில் சிங்கள மக்கள் நேரடியாக யாதார்த்தத்தை உணர்ந்து கொண்டிருப்பார்கள். இவை எல்லாவற்றுக்கும் மேலாக, உயிரிழந்த ஹேமசந்திரவுக்கு யாழ்ப்பாண நகரில் கறுப்புக் கொடி கட்டி, கண்ணீர் அஞ்சலி பதாகைகள் வைக்கப்பட்டிருந்தன. கிளிநொச்சியிலும் அவ்வாறு செய்யப்பட்டிருந்தது. முற்றுமுழுதாக தமிழ் மக்கள் சுயமாகவே இவற்றை எல்லாம் செய்து, அஞ்சலி செலுத்தியிருந்தார்கள். இவ்வாறான செயற்பாடு போரின் பின்னர் இதுவே முதல்முறை.

தமிழ் மக்களிடமிருந்து இதுவும் சிங்கள மக்களுக்கான குறிப்பாக சிங்கள அரசியல்வாதிகளுக்கான செய்தியாக உள்ளது. நாம் சிங்கள மக்களை விரோதியாகப் பார்க்கவில்லை. நாம் இனவாதிகளும் இல்லை. இந்தச் செய்தியை சிங்கள மக்களும் உணர்ந்து கொண்டிருப்பார்கள்.

## வரலாற்றில் இன்றைய தினம் 28.07.2017



*2010-ஏயார்புளு 202 வானூர்தி பாகிஸ்தான் இஸ்லாமபாத் நகரின் மார்கல்லா குன்றுப் பகுதியில் விபத்துக்குள்ளாகியதில் 152 பேர் உயிரிழந்தனர்.*

1540-இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றியின் கட்டளைக்கமைய தேசத் துரோக குற்றச்சாட்டில் தோமஸ் குரோம்வெல் சாவுத் தண்டனைக்கு உள்ளானார். இதே நாளில் கதரீன் ஹவார்ட்டை ஐந்தாவது மனைவியாக ஹென்றி மணம்புரிந்தார்.

1812 -ஸ்பெய்னிடமிருந்து பெரு சுதந்திரம் பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

1914-சேர்பியா மீது ஒஸ்திரியா, ஹங்கேரி ஆகியன போர் அறிவிப்புச் செய்தன.

1935-பறக்கும் கோட்டை என வர்ணிக்கப்படும் போயிங் பி17 தனது முதலாவது பறப்பை மேற்கொண்டது.

1936-ஹவாய் கிளிப்பர் வானூர்தி மணிலா மற்றும் குவாம் இடையே மாயமானது.

1957-ஜப்பானின் இஸஹயாவில் மண்சரிவில் 992 பேர் உயிரிழந்தனர்.

1965-வியட்னம் போரில் ஆதிக்கத்தை நிலைநாட்ட அமெரிக்க அரசதலைவர் லின்டன் பி.ஜோன்சன் தென்வியட்னாமில் அமெரிக்கப் படைகளின் எண்ணிக்கையை 70 ஆயிரத்தில் இருந்து ஒரு லட்சத்து 25 ஆயிரமாக அதிகரிக்கக் கட்டளை பிறப்பித்தார்.

1995-வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணுமாறு ஜப்பான் அரசு கோரிக்கை.

2010-ஏயார்புளு 202 வானூர்தி பாகிஸ்தான் இஸ்லாமபாத் நகரின் மார்கல்லா குன்றுப் பகுதியில் விபத்துக்குள்ளா கியதில் 152 பேர் உயிரிழந்தனர்.

2016-காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு நீதி வேண்டும் என மூதூரில் உறவுகள் கவனவீர்ப்பு போராட்டம்.

## ஆடி மாத பலன் 2017

### கும்பம்

அவிட்டம் 3, 4 பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள்

எந்தக் காரியத்தையும் தீர ஆலோசித்து அதில் ஈடுபடும் குணமுடைய கும்ப ராசியினரே! இந்தக் காலகட்டத்தில் தனலாபாதிபதியான குரு குடும்ப ராசியைப் பார்க்கிறார். எல்லாக் காரியங்களும் முன்னேற்றமாக நடக்கும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். சுக்கிரன் சஞ்சாரம் புதிய தொடர்புகளை ஏற்படுத்தும். திறமை வெளிப்படும். பல வகையிலும் முன்னேற்றம் உண்டாகும். செவ்வாயின் சஞ்சாரத்தால் சொத்துத் தொடர்பான விடயங்களில் இழுபறியான நிலை காணப்படும். இடமாற்றம் உண்டாகும். சுப செலவுகள் ஏற்படும்.

தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் தாமதப்போக்கு காணப்படும். செலவும் அதிகரிக்கும் தேவையான பணவசதி கிடைக்கும். விரிவாக்கம் தொடர்பான முயற்சிகள் இழுபறியான நிலையில் இருந்து பின்னர் முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பயணம் செல்ல வேண்டி இருக்கும் சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு, இடமாற்றம் தாமதப்படலாம். எந்த ஒரு விடயத்திலும் ஈடுபடும் முன்பு தடக்கம் ஏற்பட்டு பின்னர் தெளிவு உண்டாகும்.

குடும்பத்தில் தீடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். கணவன் மனைவிக்கிடையே எதையும் பேசித் தெளிவுபடுத்திக் கொள்வது நன்மை தரும். குழந்தைகளுக்கான பொருள்களை வாங்குவீர்கள்.

**பெண்களுக்கு:** இழுபறியாக இருந்த காரியங்கள் முடிவுக்கு வரும். புதிய தொடர்புகளால் இலாபம் கிடைக்கப் பெறுவீர்கள். இடமாற்றம் ஏற்படலாம்.

**கலைத்துறையினருக்கு:** பொறுப்புக்கள் அதிகரிக்கும். உற்சாகமாக எதையும் கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். விருந்து கேளிக்கைகளில் பங்கு கொள்வீர்கள். கடன் பிரச்சினை குறையும். வீண் அலைச்சல் வீண் பயம் குறையும். அடுத்தவர் செய்யும் இடையூறுகளையும் உங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் சாமர்த்தியத்தைப் பெறுவீர்கள்.

**அரசியல்துறையினருக்கு:** எடுத்த காரியத்தை எப்படியும் செய்து முடித்து விடுவீர்கள். வீண் செலவு உண்டாக்கும். வேலை காரணமாக வீட்டை விட்டு வெளியில் தங்க நேரலாம். திட்டமிடுவதில் பின்னடைவு ஏற்படும். பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். பெரியோரின் நேசம் கிடைக்கும். வாகன யோகம் உண்டாகும். ஆன்மிக தலங்களுக்குச் சென்று வரும் வாய்ப்புக் கிடைக்கும்.

**மாணவர்களுக்கு:** கல்விக்கான செலவு உண்டாகும். திறமை வெளிப்படும். புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். அதன் மூலம் நன்மை ஏற்படும்.

**பரிகாரம்:** சனிக்கிழமையில் ஆஞ்சனேயரை வழிபட்டு வருவதால் மனதில் துணிச்சல் உண்டாகும். எதிலும் வெற்றி கிடைக்கும்.

**அவிட்டம் 3, 4 பாதங்கள்:**

இந்த மாதம் தொழில் வியாபாரம் சிறப்பாக நடக்கும். வியாபாரம் தொடர்பான பயணங்கள் செல்வதன் மூலம் கூடுதல் இலாபம் கிடைக்கப்பெறுவீர்கள். தொழிலை விரிவுபடுத்த ஆலோசனைகளை மேற்கொள்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களின் செயல்திறமை வெளிப்படும். அதனால் மேல் அதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கப்பெறுவீர்கள்.

**சதயம்:**

இந்த மாதம் வர வேண்டிய பணம் வந்து சேரும். குடும்பத்தில் சந்தோஷம் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களால் அதிகப்படி வருமானம் கிடைக்கும். கணவன், மனைவிக்கிடையே சுமூகமான உறவு காணப்படும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காகப் பாடுபடுவீர்கள். தாய், தந்தையாரின் உடல் நிலையில் கவனம் தேவை.

**பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள்:**

இந்த மாதம் எந்த விடயத்திலும் தெளிவான முடிவை எடுப்பீர்கள். புதிய விடயங்களை அறிந்துகொள்ள ஆர்வம் உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் இருக்கும். அறிவியல், கணித பாடங்களில் கூடுதல் கவனத்துடன் படிப்பது நல்ல மதிப்பெண் பெற உதவும்.

## நாளை

**29.07.2017**
சனிக்கிழமை

**ஆடி - 13**

திதி: ஷஷ்டி மு.ப.10.57 வரை
நட்சத்திரம்: அத்தம் மு.ப. 09.56 வரை
சுபநேரம்: 03.03–04.33 வரை
ராகுகாலம்: 09.03–10.33 வரை

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உற்சாக மனதுடன் பணியில் ஈடுபடுவீர்கள். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். மாணவர்களுக்கு படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும்.

**இடபம்:** பணியில் பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடலாம்.

**மிதுனம்:** மனதில் நேர்மை மேலோங்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் நிலுவைப் பணிகளை நிறைவேற்றுவர்.

**கடகம்:** குடும்பப் பிரச்சினையைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம்சுமாராகஇருக்கும். பணியாளர்களுக்கு சலுகை பெறுவதில் தாமதம் உண்டாகும்.

**சிங்கம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி மறையும். பண வரவு அதிகரிக்கும். பணியாளர்கள் பாராட்டு, வெகுமதி பெறுவர்.

**கன்னி:** அன்றாட பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய சலுகை கிடைக்கும்.

**துலாம்:** அடுத்தவர் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைத் திறம்படச் சமாளிப்பர்.

**விருச்சிகம்:** யாருக்கும் தகுதிக்கு மீறிய வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குறுக்கீடுகளை சரி செய்வது நல்லது. இலாபம் சுமார்.

**தனுசு:** சமயோசிதமாக செயற்பட்டு வருவீர்கள். திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்தி அளிக்கும். வருமானம் அதிகரிக்கும்.

**மகரம்:** நேர்மையுடன் செயற்பட்டு வருவீர்கள். நண்பரின் தேவையறிந்து உதவி செய்வீர்கள். தொழிலில் மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**கும்பம்:** சிலர் உங்களின் நற்செயலைப் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்குவர்.

**மீனம்:** நண்பரால் சங்கடத்திற்கு ஆளாக நேரிடும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4 | 7 | | 8 | | |
| | 7 | 1 | | | 6 | | 2 | |
| | | | | 5 | | 7 | | |
| | 4 | | | | | | 7 | 3 |
| | 8 | | 2 | 4 | 7 | | 5 | |
| 6 | 5 | 7 | | | | | 8 | |
| | | 6 | | 2 | | | | |
| | 9 | | 7 | | | 3 | 1 | |
| | | 5 | | 3 | 9 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | 3 | 1 | 8 | 6 | 2 | 5 | 9 |
| 8 | 6 | 9 | 2 | 5 | 4 | 3 | 1 | 7 |
| 1 | 2 | 5 | 3 | 9 | 7 | 8 | 4 | 6 |
| 7 | 8 | 2 | 6 | 4 | 1 | 5 | 9 | 3 |
| 3 | 9 | 4 | 7 | 2 | 5 | 6 | 8 | 1 |
| 6 | 5 | 1 | 9 | 3 | 8 | 4 | 7 | 2 |
| 2 | 1 | 8 | 5 | 7 | 3 | 9 | 6 | 4 |
| 9 | 4 | 6 | 8 | 1 | 2 | 7 | 3 | 5 |
| 5 | 3 | 7 | 4 | 6 | 9 | 1 | 2 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங் கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



அசுர உழைப்பின் பயனை விரைவில் காண்பீர்கள் என்கிறார் அக்சரா ஹாசன்

“விவேகம் படக்குழுவின் அசுர உழைப்பின் பயனை மக்கள் விரைவில் திரையில் காணப் போகின்றனர் என்று தெரிவித்தார் விவேகம் படத்தில் முக்கிய கதாப் பாத்திரத்தில் நடித்துள்ள அக்சரா ஹாசன்.

சத்யஜோதி பிலிம்ஸ் தயாரிப்பில், சிவா இயக்கத்தில், அஜித், விவேக் ஓபராய், காஜல் அகர்வால் நடிப்பில் மிகப் பெரியளவில் உருவாகியிருக்கும் படம் ‘விவேகம்’. இந்தப் படத்தின் மூலம் கமலஹாசனின் இரண்டாவது மகளான அக்சரா ஹாசன் தமிழ் சினிமாவில் அறிமுகமாகிறார். அண்மையில் இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அக்சரா இவ்வாறு தெரிவித்தார்.

“இயக்குநர் சிவா என்னிடம் எனது கதாபாத்திரத்தை விவரித்த விதம் என்னை உடனடியாக கவர்ந்தது. அந்த கதாபாத்திரம் முக்கியத்துவம் மிக்கதாகவும், கதையை அடுத்த கட்டத்திற்கு எடுத்து செல்லும் கருவியாகவும் இருந்தது. பல பரிமாணங்கள் கொண்ட இந்தக் கதாபாத்திரத்தைச் செய்ததில் எனக்கு மிக்க மகிழ்ச்சி.

அஜித்துடன் பணிபுரிந்தது ஓர் அருமையான அனுபவம். தான் ஒரு மிகப்பெரிய நட்சத்திரம் என்ற எண்ணம் துளியும் இல்லாமல் எல்லோர்க்கும் உதவியாக இருப்பார். பல்கேரியா மற்றும் சேர்பியாவின் கடும் குளிரிலும் உறையும் பனியிலும் படக் குழுவினர் மிகக் கடுமையாக உழைத்தனர். அந்த அசுர உழைப்பின் பயனை மக்கள் விரைவில் திரையில் காணப் போகின்றனர்” என அவர் மேலும் தெரிவித்தார்.

**விருந்து வைக்காதவன் என்ன ஆவான்!**



குருதி கக்கித்தான் சாவான்




**நாடு எங்க சார் போகுது?**



நாட்டு மக்கள் ஓவியா பின்னாடியும் தலைவர்கள் நாடு நாடாவும்தான் போயிட்டிருக்காங்க

மனைவி: இனி ஒரு நிமிஷம் கூட என்னால, உங்களோடு சேர்ந்து வாழ முடியாது! அதனால நான் தற்கொலை செய்யப் போறேன்...!

கணவன்: அந்த நிமிடமே நானும் என் உயிரை விட்டிடுவேன்!

மனைவி: நீங்க எதுக்காகச் சாகணும்?

கணவன்: எந்தவோர் அதிக சந்தோசமான செய்தியையும் தாங்கக் கூடிய சக்தி என் இதயத்துக்கு இல்லேன்னு டாக்டர் சொல்லி இருக்கார்!

மனைவி: ? ? ? ? ? ? ? ? ?





# பெரியதும் சிறியதும்

மதம் பிடித்த யானை ஒன்று
ஊருள் வந்தது
விதம் விதமாய் மாந்தருக்கு
வம்பு செய்தது

வீடுகளைப் பிடுங்கிக் கையால்
வீசி எறிந்தது
ஆடு மாடு அலறச் சிதற
அடித்துக் கொன்றது

இளைய தென்னை மரங்களையும்
இழுத்துச் சாய்த்தது
பழுத்த பலா மா மரங்களை
முறித்து மாய்த்தது

கட்டெறும்பு இதனைக் கண்டு
கவலை கொண்டது
சட்டெனவே யானையின் துதிக்
கைக்குள் புகுந்தது

துதிக்கையுள் இருந்த படி
எறும்பு கடித்தது
அதனைத் தாங்க முடியாது
யானை துடித்தது

வலி தாங்க முடியாது
பெரிய யானை தன்
பொலிவான துகிக்கையை
மரத்தில் அடித்தது

அடித்து அடித்து நோவெடுக்க
அழுது காட்டை அடைந்தது
கடித்த எறும்பு துக்கையினை
விட்டு வெளியே வந்தது

சிறிய உயிருக்கும் வலிமை உண்டு
தெரிந்து கொள்ளுவோம்
சிறிய உளியும் பெரிய பாறை
பிளக்கும் அறிவோம்

# சணல்



ஒரு வகைத் தாவரத்திலிருந்து எடுக்கப்படும் நார்தான் சணல். சணல் செடி சுமார் மூன்று மீற்றர் உயரம் வரை வளரும். நன்கு வளர்ந்த செடிகளை அறுவடை செய்து ஓரிடத்தில் அடுக்கி வைப்பார்கள். இவை காயும் போது இலைகள் யாவும் உதிர்ந்து விடும். பின்னர் இவற்றை ஒழுங்கு படுத்தி சுமைகளாகக் கட்டிச் சென்று குளம் குட்டை முதலிய நீர் நிலைகளில் ஊற வைப்பார்கள். அவை நன்கு ஊறிய பின்பு தண்டிலிருந்து நாரை உரிப்பார்கள். இவ்விதம் எடுக்கப்பட்ட நார் உலர்ந்த பின் சணல் எனப்படும். சணலை இயந்திரங்களில் துணி நெய்வதைப் போல நெய்கிறார்கள். நெய்த துணியினால் செய்த பெரிய பைதான் கோணிப்பை. சணல் துணிகள் தரை விரிப்புகளாகவும், சித்திர வேலைப் பாடமைந்த துணிகளாகவும் பல வகைகளில் பயன்படுகின்றன. திரித்த சணல் கயிறும் பல வழிகளில் பயனாகிறது. மிக மெல்லிய சணல் இழைகளைக் கொண்டு ஒரு வகைச் செயற்கைப் பட்டு தயாரிக்கிறார்கள். உலகில் உற்பத்தியாகும் சணலில் பெரும் பகுதி இந்தியாவிலும் பங்களாதேசிலும் பயிராகிறது. இந்தியாவில் நூற்றுக்கு மேற்பட்ட சணல் ஆலைகள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை மேற்கு வங்கத்தில் உள்ளன.



# இருளும் ஒளியும்



இரவு நேரம் நாரையொன்று காற்றில்பறந்துசென்றுகொண்டிருந்தது. எங்கும்பட்டப்பகல்போலஒளிபரவியிருந்தது. அந்த ஒளியில் வெப்பம் இல்லை. குளிர்ச்சி நிறைந்த அந்த இன்ப ஒளி எங்கிருந்து வருகிறது என்று தேடியே அந்த நாரை பறந்து கொண்டிருந்தது. உலகெங்கும் அந்த இன்ப ஒளி பரவியிருந்தது. நாரை சென்ற இடங்களிலும் அந்த ஒளி நிறைந்திருந்தது. நாரை சிந்தனையோடு வானை நோக்கி நிமிர்ந்தது.

உயரத்தில் ஒளித் தகடு போல் வட்ட நிலா அழகுடன் விளங்கியது. நாரை அதன் அழகில் மயங்கி நிலாவையே பார்த்துக் கொண்டு நின்றது. நிலா அழகாகத்தான் இருந்தது. உலகம் முழுவதும் ஒளி பரப்பும் பேரோளியைப் பெற்றுத்தான் விளங்கியது. ஆனால் அந்த ஒளி நிலாவின் இடையிலே ஓர் இருட்டுப் பகுதியும் நிலவின் இடையில் ஒரு கறை போல இருந்தது. இருந்தது.அது

''இவ்வளவு அழகான நிலவின் இடையில் இப்படி ஒரு கறையிருக்கிறதே" என்று வருந்தியது நாரை. "நிலவு தன்னிடம் உள்ள கறையை நீக்கிக் கொள்ளாமல் உலகைச் சூழ்ந்துள்ள இருளை ஓட்ட புறப் பட்டு தான் விட்டதே! இதன் கருத்து என்னவாக இருக்கும் என்று அறிய நாரை ஆசைப்பட்டது. அது நிலா இருந்த பக்கமாகப் பறந்தது. எவ்வளவு உயரம் பறந்தும் அதனால் நிலாவை அடைய முடியவில்லை. போகப் போக நிலா மேலும் மேலும் தொலைவில் தான் இருந்து கொண்டிருந்தது.

நிலாவை நெருங்க முடியாது என்று கண்டு கொண்ட நாரை, அருகில் காற்றில் தவழ்ந்து சென்று கொண்டிருந்த ஒரு மேகத்தைப் பார்த்தது. "மேகமே இந்த நிலா தன்னிடமுள்ள கறையைப் போக்கிக் கொள்ளாமல் உலகில் உள்ள இருளைப் போக்குகிறதே! இதன் கருத்து என்ன? என்று கேட்டது.

"நாரையே! குணத்தில் உயர்ந்த பெரியோர்கள் தங்களிடத்தில், தங்கள் குடும்பத்தில் வறுமை, துன்ப துயரங்கள் இருந்தாலும் அதனைக் காட்டிக் கொள்ளாது, பிறர் துயர் துடைப்பதும் குறைகளை நீக்குவதும் தம் முதற்கடமையாகக் கொள்வார்கள். அது போன்றதுதான் இந்த நிலவின் இயல்பும். தனக்குள் ஒரு பகுதியில் மாறாத இருள் இருந்த போதிலும், அதைப் பெரிதாகக் கொள்ளாமல், தன்னால் இயன்ற அளவில் இரவில் சீவராசிகளுக்கெல்லாம் ஒளி கொடுக்கிறது" என்றது முகில். நிலாவின் இந்த உயர்ந்த தன்மையை முகிலூடாகக் கேட்டு அறிந்து கொண்ட நாரை அதனை வியந்து பாராட்டிக் கொண்டு பூமி நோக்கி இறங்கி வந்தது.



**தன் துன்பத்தைக் காட்டிலும் பிறர் துன்பத்தைப் பெரிதாக நினைத்து அதைப் போக்க உதவி செய்வதே நல்லோர் இயல்பாகும்.**

**தன் தசை அரிந்து புறாவின் உயிர் காத்தான் சிபிசக்கரவர்த்தி.**

**தன் உயிர் பிரியும் வேளையிலும் தன் தர்மங்களைத் தாரை வார்த்தான் கர்ணன்.**



# நகைச்சுவைத் துணுக்கு



அதிபர் :- என்ன இருந்தாலும் அந்த மாணவனுக்கு அப்படி நீங்கள் அடித்திருக்கக் கூடாது. அப்படி அவன் என்னதான் செய்தான்?

ஆசிரியர் - உலகிலேயே உயரமான மலை எது என்று கேட்டேன்... தெரியாது என்றான்.

அதிபர் :- அதற்காகவா அடித்தீர்கள்?

ஆசிரியர் :-இல்லையே! விடை தெரியா விட்டால் ஏறு மேசை மேல் என்றேன் "மேசையில் ஏறினால் மலை தெரியுமா? சேர்" என்று கேட்கிறான்





அதிபர் :- பிள்ளைகளே! எங்கள் பாடசாலையில் மோசமான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. அவர்கள் கிடைத்ததும் உங்களுக்கு ஒரு ஆசிரியரைத் தருகிறேன். அதுவரை நீங்கள் சுயமாகப் படியுங்கள்

மாணவன் : - சேர்! எங்களுக்கு மோசமான ஆசிரியர் வேண்டாம். நாங்களே படித்துக் கொள்கிறோம்.

# வர்ணம் தீட்டுவோம்



# திமிங்கிலம்

## நீண்ட நாழிகைச் சுவாசமுடைய உயிருள்ள விநோதங்கள்

கோமகன்

லகத்தில் பல வகையான விநோதங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றுள் உயிரில்லா வினோதங்கள் அல்லது உயிர் உள்ள வினோதங்கள் என இருபெரும் பிரிவுகளும் உண்டு. உயிருள்ள விநோதங்களில் ஒன்றாக கடல் உயிரினங்களிலே அதிக வியப்பையும், அச்சத்தையும் ஏற்படுத்தக் கூடிய திமிங்கிலங்கள் பற்றி நாம் அறிந்துகொள்ளுதல் நன்று.

### குருதிப் பிராணி

திமிங்கலம் நீரில் வாழும் பாலூட்டி இனத்தைச் சேர்ந்த ஒரு விலங்கு. இவற்றின் ஒரு வகையான நீலத்திமிங்கலமே உலகின் மிகப்பெரிய பாலூட்டி என்று கருதப்படுகிறது. திமிங்கலங்கள் வெப்ப குருதிப் பிராணிகளாகும். திமிங்கிலத்தில் 75 இற்கும் மேற்பட்ட வகைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் தனித்தனி குணாதிசியங்களைப் பெற்று விளங்குகின்றன. கறுப்பு, வெள்ளை, நீலம் மற்றும் பல வண்ணங்களைக் கொண்டுள்ளன. 24 மீற்றர் நீளம் முதல் 1.25 மீற்றருக்குக் குறைவான நீளம் வரையும் இவை காணப்படுகின்றன. உப்புநீர் மற்றும் நன்னீரிலும் வாழக்கூடியவை. உலகில் உள்ள எல்லா கடல்களிலும் மற்றும் சில வகையானவை அமேசான், சீனாவின் மிகப்பெரிய ஆறான யாங்ட்ஜில் மற்றும் இந்தியாவின் கங்கை ஆறு போன்றவற்றிலும் வாழ்கின்றன.

இவற்றின் கர்ப்ப காலம் என்பது 10 தொடக்கம் 16 மாத காலம் என்ற வித்தியாசமான கர்ப்ப காலங்களை உள்ளடக்கியதாக அமைந்திருக்கும். மனிதனின் மூளையைக் காட்டிலும் அளவிலும் நிறையிலும் பெரிய மூளையையுடைய பாலூட்டிகளுள் யானைக்கு அடுத்தபடியாக திமிங்கிலம் விளங்குகிறது. உலகில் உள்ள பாலூட்டிகளில் மிகப் பெரிய மூளையுடையது என்ற சிறப்பும் இதற்கு உண்டு. இவை 60 தொடக்கம் 70 வருடங்கள் வரை உயிர் வாழக் கூடியவை.

### வகைப்பாடு

திமிங்கிலம் என்று சொல்லும் போது நாம் எல்லோரும் உணரக்கூடிய ஒன்று மிகப் பெரிய மீனாக தான் அவை இருக்கும் என்பதாகும். இவைகள் பல வகையிலும் மீன்களை ஒத்திருப்பினும் கூட இவை மீன் இனத்தைச் சாராத பாலூட்டிகளாக விளங்குகின்றன.

பொதுவாக கடல் வாழ் உயிரினங்களின் ஆராய்ச்சியின் அடிப்படையில் திமிங்கிலங்களை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கின்றார்கள். ஒன்று பற்கள் உள்ளவை. வாயின் இரு புறங்களிலும் வலிமையான தாடைகளுடன் கூடிய பற்களுடையவை. மற்றையது பற்கள் இல்லாதவை அல்லது பலீன் (baleen) என்ற அமைப்பைப் பெற்ற திமிங்கிலங்கள். பற்கள் உள்ள வகைகளில் Sperm whale, Beaked, Narwhals, Belugs, Dolphin, Porpoises போன்றவையும் பற்கள் அற்றவைகளில் Rorquals, Gray whales, Right whales என்ற மூன்று வகைகளும் உள்ளடங்குகின்றன.

பொதுவாக எல்லா பாலூட்டிகளுக்கும் இருக்கக் கூடிய பித்தப்பை (gall bladder) மற்றும் குடல்



வால்வு (appendix) போன்ற உள் உறுப்புக்கள் இல்லாத அமைப்புகள் விதிவிலக்கான அம்சமாக திகழ்கின்றன.

உலகிலேயே அதிக சத்தம் போடக் கூடிய உயிரினம் திமிங்கலம்தான். நீலத் திமிங்கிலங்கள் கொண்டுள்ள மற்றுமொரு தனிச்சிறப்பு என்னவெனில் இவை தண்ணீருக்கு அடியில் எழுப்பும் 150 இற்கும் மேலான டெசிபலைக் கொண்ட ஒலியே. ஒரு ஜெட் விமானம் புறப்படும் போது ஏற்படுத்தும் சத்தத்தைக் விடவும் கூடுதலாகும். இந்த ஒலி தண்ணீரின் அடியில் கடக்கும் தொலைவு என்பது 1000 கிலோ மீற்றர்களாகக் காணப்படும். இவைகள் அவ்வப்போது பாடவும் செய்கின்றன. அண்ணளவாக அரை மணி நேர காலம் திமிங்கலம் தொடர்ந்து பாடுவதை பதிவு செய்திருக்கிறார்கள் ஆய்வாளர்கள். சில திமிங்கிலங்கள் தொடர்ந்து பல மணி நேரங்கள் பாடுவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

### சுவாச அமைப்பு

இவை தங்கள் தலையின் மேற்பரப்பில் அமைந்துள்ள சுவாசக் குழாய் (Blow hole) மூலம் தண்ணீரை 9 மீற்றர் உயரம் வரை நீர் கம்பம் (Water Spout) போல பீய்ச்சி அடிக்கின்றன. இவ்வாறு மிகுந்த சத்தத்துடன் கூடியதாக இடம்பெறும் இந்த நிகழ்வுகளும் திமிங்கிலங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்ளும் சாதனமாக அமைந்துவிடுவதாக விஞ்ஞானிகள் நம்புகின்றனர். ஏனெனில் இவை சத்தம் எழுப்பும் போது அதற்குப் பதில் அளிக்கும் விதமாக தொலைதூரத்திலுள்ள திமிங்கிலக் கூட்டங்கள் சத்தமிடுவதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். உலகத்திலேயே எந்த ஒரு உயிரினங்களும் கொண்டிராத வினோதமான சுவாச அமைப்பை திமிங்கலங்கள் கொண்டுள்ளன. இவை தண்ணீருக்கடியில் தங்கள் செவுள்கள் மூலமாக ஒட்சிசனை கிரகிக்கும் அமைப்பைப் பெற்றுள்ளன.



திமிங்கிலம் மிக வித்தியாசமான சில தகவமைப்புகளைப் பெற்று விளங்குகின்றன.

வாழ்நாள் முழுதும் தண்ணீரிலேயே கழிக்கக் கூடிய ஒரே ஒரு பாலூட்டியாகத் திமிங்கிலங்கள் கூறப்படுகிறது. மேலும் நான்காயிரத்துக்கும் மேற்பட்ட பாலூட்டி இனங்களில் மீன்களை ஒத்த உடல் அமைப்பைப் பெற்று நடக்கக் கூடிய வகையில் கால்களின் அமைப்பைப் பெறாத ஒரேயொரு உயிரினமாக திமிங்கிலம் சிறப்புத் தன்மையைப் பெற்றுக்கொண்டுள்ளது. இதுவும் விதி விலக்கான அம்சமாகச் சொல்லப்படுகிறது. மேலும் இவற்றின் தலையின் மேற்பரப்பில் அமைந்துள்ள 'Blow hole' என்ற சுவாசக் குழாய் அமைப்பு நுரையீரலுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளதாலும், ஏனைய பாலூட்டிகளைப் போன்று தொண்டையின் மூலம் சுவாசம் செல்ல வேண்டிய அமைப்பு இல்லாததனாலும் ஒரே நேரத்தில் உண்ணவும் சுவாசிக்கவும் இவற்றுக்கு இயலுகின்றது.

இதுவரை நாம் அறிந்த உயிரினங்கள் அனைத்துமே அதிகபட்சமாக ஒரு முறை சுவாசித்தால் பத்து நிமிடங்கள் தொடக்கம் பதினைந்து நிமிடம் வரை சுவாசிக்காமல் இருக்க முடியும். ஆனால் ஒரு முறை சுவாசித்து 80 நிமிடங்கள் வரை சுவாசிக்காமல் இருக்கும் ஒரு உயிரினமாக திமிங்கிலங்கள் விளங்குகின்றன.

### எதிரொலியின் துல்லியம்

திமிங்கிலங்கள் தங்கள் இரையைத் தேடி கடலின் ஆழத்துக்குச் செல்லும் தூரம் என்பது எந்த பாலூட்டிகளாலும் அடைய முடியாத ஓர் இலக்காகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 1000 மீற்றர் தொடக்கம் 2000 மீற்றர் ஆழம் வரை செல்லக் கூடிய ஆற்றல் பெற்றது. ஆழக் கடலின் வெளிச்சம் இல்லாத அடர்ந்த இருளில் இரையைப் பிடிக்க இவை பயன்படுத்தும் உத்தியாக எதிரொலி (Echo Location) கூறப்படுகிறது. எதிரொலி மூலம் இரையின் இருப்பிடத்தை துல்லியமாக அறிந்து கொள்கின்றன.

இவைகள் சராசரியாக ஒரு நாளைக்கு ஆயிரத்து 500 கிலோ வரை உணவை உட்கொள்கின்றன. இதன் முக்கிய உணவாக 10 மீற்றர் நீளமுள்ளதான 'கெயிண்ட் ஸ்குவைட்' (Gaint squid) காணப்படுகிறது. பிடித்து உண்ணும்போது சில சமயம் இவைகளுக்கிடையே சண்டை ஏற்படுகிறது. இவை தங்களின் உணவைப் பிடித்து உண்டதன் பின்னர் தண்ணீரின் மேற்பரப்புக்கு வருகைதந்து 10 தொடக்கம் 15 நிமிடங்கள் வரை காற்றை நன்கு சுவாசிக்கின்றன. ஒட்சிசனை சேமித்துக்கொண்டு மீண்டும் ஆழ் கடலை நோக்கி தங்கள் பயணத்தைத் தொடர்கின்றன.

## இது புதுசு





பெண்களுக் கான பஞ்சாபி வகைகள் சில நவீன வடிவில் அறிமுகமாகி யுள்ளன. இவை ஏழாயிரம் ரூபாவிலி ருந்து விற்பனை செய்யப்படுகின்றன...

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1384
சீட்டிழுப்பு திகதி 2017.07.27
13 20 23 54 V
04 07 45 65
ரூ. 15,927,524/-

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 681
சீட்டிழுப்பு திகதி 27.07.2017 பச்சை
F 22 30 55 67
சுப்பர் ஜக்பொட் ரூ. 53, 825, 996/=
வெல்லப்படவில்லை
01 33 34 36
நீல நிற டிக்கட்டுகள் 29.07.2017 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
Web: www.dlb.lk

ஸம்வர்தன வாசனாவ
Development Fortune
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 60
சீட்டிழுப்பு திகதி 27.07.2017 நீலம்
வெற்றி இலக்கங்கள் 17 44 55 64
சுப்பர் இலக்கம் 02
அதிர்ஷ்ட மாதம் மார்ச்
ரூ.14, 530, 586/=
ரூ. 2, 514, 554/=
ரூ. 1, 748, 570/=
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்
04 18 35 60
29.07.2017 ஆம் திகதி சனிக்கிழமை ரோஸ் நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

பணிப்பெண் தேவை
இரண்டு வருடங்கள் வீட்டில் தங்கி நின்று பணியாற்றக் கூடிய பணிப்பெண் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
077 565 9888, 077 727 6622

**வீடு வாடகைக்குண்டு**

யாழ்ப்பாணம், அரியாலை A9 றோட் அருகில் தபால் கட்டை சந்தியில் அமைந்துள்ள 4 படுக்கை யறையுடன் கூடிய வீடு உடன் வாடகைக்கு உண்டு.

077 359 1549, 021 492 5178

(நிறுவனங்கள் விரும்பத்தக்கது)

**வீடு வாடகைக்கு தேவை**

நல்லூர் மாநகர எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு - 077 3437 561
021 4991 274

**வீடு வாடகைக்கு**

யாழ். மாநகரசபை எல்லைக்குள் சிறிய குடும்பத்துக்கு ஏற்றவகையில் வீடு வாடகைக்கு உண்டு.அரச வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது. அல்லது பல்கலைக்கழக மாணவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு :-077 768 4407

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

உதிப்பு
07 . 07 . 1937



உதிர்வு
30 . 06 . 2017

அமரர்

### சங்கரப்பிள்ளை நாகலிங்கம்

கடந்த 30.06.2017 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (29.07.2017) சனிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்குபற்றுவதுடன் அதன் பின்னர் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் சுகவீனமுற்று மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்ற வேளையில் பல்வேறு வழிகளில் உதவிய மருத்துவமனைகளின் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் குறிப்பாக மருத்துவ நிபுணர்களான யாழ்.போதனா மருத்துவமனை வைத்தியக் கலாநிதி சிவகுமார் சாவகச்சேரி ஆதார மருத்துவமனை மருத்துவ நிபுணர் மகாதேவா ஆகியோருக்கும் அவரது மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து எமக்கு பல்வேறு வழிகளில் ஒத்துழைப்பு வழங்கிய நல்லுள்ளங்களுக்கும் அவரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியோருக்கும் மலர்வளையங்கள் சாத்தியோர், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டு அனுதாபங்களை தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாகையடி வீதி,
கல்வயல், சாவகச்சேரி.

ஜக்ஸன் - ருக்குமணிதேவி
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சதாசிவம்



காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும் மருதடியை வசிப்பிடமாகவும் தற்காலிகமாக மாரீசன்கூடலை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சதாசிவம் நேற்று (27.07.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுந்தரம்மா - சோமசுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகனும் தனலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, செல்லாச்சி, தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மகாலிங்கம் (லண்டன்), நாகலிங்கம், வசந்தராணி, வசந்தமலர், சறோஜினிதேவி (பிரான்ஸ்), சந்திராதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராஜேஸ்வரி, தேவசேனா, கோபாலபிள்ளை, குமாரசாமி, நித்தியானந்தன்(பிரான்ஸ்).பாலச்சந்திரன்(லண்டன்)ஆகியோரின்அன்புமாமனும் மிருசன், ரதீசன், சதீசன், கஜரூபன், விஜயகுமாரி, விக்கினேஸ்வரன், ரூபி, கஜரூபி, லோஜினி, யசோதினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2017) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாரீசன்கூடல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குமாரசாமி (மருமகன்)

## மாணவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதியம் - பட்டப் பகலில் 9 பேர் கொண்ட வாள் வெட்டுக் குழு சரமாரியாக வெட்டியதில் மாணவன் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது:

கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் பயின்று வரும் மாணவன் மீது மோட்டார் சைக்கிளில் வந்த வாள்வெட்டுக் கும்பல் பட்டப்பகலில் பொதுமக்கள் மத்தியில் சரமாரியாக வெட்டினர். இளைஞனின் தலை, கைகள், முதுகுப் பகுதிகளில் வெட்டு விழுந்துள்ளது. வெட்டிய குழு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

இரத்தவெள்ளத்தில் இருந்த இளைஞனை பொதுமக்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கொண்டு சென்று சேர்த்தனர் என்று குறிப்பிட்டனர். (த-5-8-106)

## புளொட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரத்தின் பெயர் தேர்தல்கள் திணைக்களத்துக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் சுழற்சி முறை ஆசனத்தின் அடிப்படையில் பதவி வகித்த வவுனியா மாவட்ட உறுப்பினர் மயூரன், மாகாண சபையின் நேற்றைய நூறாவது அமர்வுடன் விடை பெற்றார். மாகாண சபையில் நன்றியுரையும் நேற்று நிகழ்த்தினார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இரண்டு நியமன ஆசனங்கள் கிடைத்தன. ஓர் ஆசனம் நல்லாட்சிக்கான மக்கள் முன்னணிக்கு வழங்கப்பட்டது. மற்றைய ஆசனம் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் இடையே சுழற்சி முறையில் பங்கீடு செய்யப்பட்டது.

சுழற்சி முறையில் நியமன ஆசனம் தமது கட்சிக்கே வழங்கப்படவேண்டும் என்று புளொட் அமைப்புகோரிக்கை விடுத்திருந்தது. இது தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா மற்றும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், வடக்கு மாகாண சபையின் நியமன ஆசனத்துக்கு, மாகாண சபைத் தேர்தலில் யாழ்ப்பாணமாவட்டத்தில் போட்டியிட்ட ஆர். ஜெயசேகரத்தின் பெயரை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தேர்தல்கள் திணைக்களத்துக்குப் பரிந்துரைத்துள்ளது. தேர்தல்கள் திணைக்களம் அதனை ஏற்றுக் கொண்டு. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. அதன் பிரதி வடக்கு மாகாண சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய நூறாவது அமர்வில் பங்கேற்க மயூரன் வந்தார். அவரது ஆசனத்துக்குப் புதியவரின் பெயர் பிரேரிக்கப்பட்டுள்ளமையால் அவரைச் சபை அமர்வில் பங்கேற்கஅனுமதிப்பதா இல்லையா என்பது தொடர்பில் சர்ச்சை எழுந்தது. இறுதியில் மயூரன் சபை அமர்வில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டார். (த-5-8)

**அலுவலக உதவியாளர் பெண் ஊழியர் தேவை**

வயது 34-45 வரை ,கல்வித்தகைமை O/L or A/L .வேலை நேரம் காலை 8.00 முதல் மாலை 5.00 மணி வரை சம்பளம் 13500 மட்டும். நேரில் சமுகம் தரவும் 30.07.2017 அன்று காலை 9.00 முதல் 11.00 மணி மட்டும்.

Air Tech Weighing Machines
No 58 Sir Pon.Ramanathan Road, Jaffna
021 300 3073, 071 7622719

## 25 ஆவது குருத்துவ வெள்ளிவிழா



Congratulations

எமது
பங்குத்தந்தை
அருட்பணி
S.J.Q. ஜெயரஞ்சன்

அவர்களின் 25 ஆவது குருத்துவ வெள்ளி விழா நிறைவை வாழ்த்துவதுடன் தொடர்ந்தும் இறைவனின் பராமரிப்பிலும் வழிநடத்தலிலும் பணியைத் தொடர எமது வாழ்த்துகளுடன் ஜெபங்களில் வேண்டி நிற்கின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்.

புனித அன்னாள் ஆலயபங்குமக்கள் ,மானிப்பாய்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes

கண்டாவளை பிரதேச செயலாளராக எமது பிரதேச செயலகத்தில் கடந்த ஆறு ஆண்டுகளாக உன்னதமான சேவையாற்றும்



### திரு. தவச்செல்வன் முகுந்தன்

B.A (Hons), Dip.in.Pub.Ad, M.A, SLAS - I

அவர்கள் 2016.10.03 ஆம் திகதி முதல் இலங்கை நிர்வாக சேவையின் தரம் I இற்கு பதவியுயர்வு பெற்றதை நாம் மனமுவந்து பாராட்டுவதுடன் மேலும் பல பதவியுயர்வுகள் பெற்று மக்கள் சேவையில் மகிமையுற வாழ்த்துகின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம், கண்டாவளை.

## 25 பக்கங்களாகக்....

பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வழிநடத்தல் குழுவின் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. தயாரிக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கையின் பக்க எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால் அதனைக் குறைக்கவேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டது. இதற்கு அமைவாக, உபகுழுக்கள் ஆராய்ந்த விடயங்கள் தொடர்பில் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையில் அதிக விடயங்கள் தேவை இல்லை என்பதன் அடிப்படையில், வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையை சுருக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

35 பக்கமாக இருந்த வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை 25 பக்கமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சி நிறைவேற்று அரச தலைவர் முறைமை தொடர்பில் வழங்கும் அறிக்கை, இடைக்கால அறிக்கையுடன் பின்னிணைப்பாகச் சேர்க்கப்படும். வழிநடத்தல் குழுவின் அடுத்த கூட்டம் ஒகஸ்ட் மாதம் 8ஆம், 9ஆம், 10ஆம் திகதிகளில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. (த-5)

## யாழ்....

தமான் இல.5, முதலாம் மாடி நவீன சந்தையில் டிடி தொலைக்காட்சி நிறுவனம், 2014ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்திலிருந்து 2017ஆம் ஆண்டு மே மாதம் வரையில் இயங்கியது. வாடகைக்குப் பெறப்பட்ட இந்தக் கட்டடத்துக்கு தொலைக்காட்சி நிறுவனம் வாடகைப் பணத்தை செலுத்தவில்லை.

வாடகைப் பணமாக 8 லட்சம் ரூபாவும், இதனைச்செலுத்தாமைக்குரியதண்டப்பணமாக 80 ஆயி ரம் ரூபாவும், வற் வரியாக ஒரு லட்சத்து 20 ஆயிரமும், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியாக 16 ஆயிரம் ரூபாவும் உள்ளது. (த-5-101)

## ஆட்சிக்...

பொதுச் சேவைகள் சட்டத்தின்கீழ், எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம் ஆகியவற்றை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கும்பிரகடனம்மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே சம்பந்தன் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டுமென எனக்கு முன்னர் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன வலியுறுத்தினார். உள்ளூராட்சிச் சபைத் தேர்தலையோ அல்லது மாகாண சபைத் தேர்தலையோ அவர் கோரவில்லை. நாடாளுமன்றத் தேர்தலையே மகிந்த அணியினர் குறிவைத்துள்ளனர். அதையே அவர் கோரினார்.

அரசை முடக்கவேண்டும், ஆட்சியைக் குழப்பவேண்டும், ஆட்சியைக் கவிழ்க்கவேண்டும் என்பதே மகிந்த அணியின் தொடர்ச்சியான நோக்கமாக - அழுத்தமாக இருக்கின்றது. இது மக்கள் ஆணைக்குப் புறம்பான செயலாகும்.

அரச தலைவர் தேர்தலில் மகிந்த ராஜபக்ச மீண்டும் போட்டியிட்டார். அதில் அவர் தோல்வி அடைந்தார். தலைமை அமைச்சர் பதவிக்காகவும் அவர் களமிறங்கினார். அதற்கு மக்கள் ஆணை வழங்கவில்லை. மாற்றுத் தரப்புக்கே மக்கள் ஆட்சியமைப்பதற்குரிய ஆணையை வழங்கினர்.

தேர்தல் ஊடாக ஆட்சியைக் கவிழ்ப்பதை விடுத்து, உரிய காலத்துக்கு முன்னர் அதைச்செய்ய முற்படுவது மக்கள் தீர்ப்புக்கு எதிரான செயலாகும்.

குறிப்பிட்ட காலத்துக்கு முன்னர் ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமானால் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்து அதை அரசமைப்புக்கு உட்பட்ட ரீதியில் செய்யலாம். இப்படி எதையும் செய்யாது மக்கள் ஆண்ணக்கு எதிராகச் செயற்படும் மகிந்த அணி உறுப்பினர் தினேஷ் குணவர்தன என்னிடமிருந்து எத்தகைய ஆதரவை எதிர்பார்க்கின்றார்?

ஜனநாயகக் கட்டமைப்பு வலுப்பெறவேண்டுமானால் தொழிற்சங்க கட்டமைப்பு அவசியம். அவற்றின் கோரிக்கைகளுக்கு செவிமடுக்கவேண்டும்.

அரசியல் நோக்கங்களோடு முறையற்ற விதத்தில் அத்தியாவசிய சேவைகளை முடக்கும் வகையில் தொழிற்சங்கப் போராட்டங்களை நடத்தி அரசைக் கவிழ்ப்பதற்கான முயற்சிகளை ஏற்க முடியாது.

இதனைத் தடுப்பதற்கு அரசு தைரியமான முடிவுகளை எடுத்து அவற்றைத் தைரியமாக நடைமுறைப்படுத்தவேண்டும் - என்றார். (த)

## விஜயகலா...

னர் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சுவிஸ்குமாரைத் தப்பிக்க வைத்த சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்க, கடந்த செவ்வாய்க் கிழமை, ஊர்காவற்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவரது சட்டத்தரணிகளால் மேற்படி காணொலி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்தக் காணொலி தொடர்பில் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இதனை ஆராய்ந்த பின்னரே, திருமதி விஜயகலா மகேஸ்வரனிடம் வாக்குமூலம் பெறப்படும் என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன. (த-5-26)

## 22 கிலோ கிராம்...

பட்டுள்ளது. சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கடற்படையினரின் உதவியுடன் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

அதேபகுதியைச் சேர்ந்த 52 வயதுடையவர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். வீட்டின் பின்பகுதியில் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். சந்தேகநபரை எதிர்வரும் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாண மாவட்ட மதுவரித் திணைக்கள ஆணையாளர் சோதிநாதனின் வழிகாட்டலில், பருத்தித்துறை மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் எஸ்.மதன்குமார் தலைமையில் பொறுப்பதிகாரி எஸ்.எ.எஸ்.யு சிறிமஞ்சு குழுவினர் இந்த கஞ்சாவைக் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-23,173,ரி)

## உள்ளூராட்சி...

அத்தியாவசிய பொதுச்சேவைகள் சட்டத்தின்கீழ், எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம் ஆகியவற்றை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கும் பிரகடனம் மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்றது.

நேற்று மாலையே அது தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும், மேலும் சில உறுப்பினர்கள் இது பற்றி பேசவிருப்பதால் இன்று வெள்ளிக்கிழமை வாக்கெடுப்பு நடத்தப்படும் எனச் சபை முதல்வர் அவைக்கு அறிவித்தார்.

இதன்போது, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டவரைவு எப்போது விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளிக்கையிலேயே சபை முதல்வர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அதேவேளை, அம்பாந்தோட்டை துறைமுகம் விவகாரம் குறித்த ஒப்பந்தம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் இன்று விவாதம் நடத்தப்படவுள்ளது. (த)

## புளொட்...

மல் தமிழ் அரசுக் கட்சி, வடக்கு மாகாண சபையின் சுழற்சி முறை நியமன ஆசனத்தை வழங்கி விட்டதாகவும் புளொட் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பிலும், எதிர்காலத்தில் எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பிலும் தீர்க்கமான முடிவு எடுப்பதற்காக புளொட்டின் மையக் குழுக் கூட்டம் நாளை சனிக் கிழமை வவுனியாவில் கூட்டப்படவுள்ளது. (வ-5,101)

## ஐங்கரநேசன்...

நேற்றுத் துணியினாலான பைகளை வழங்கினார். அந்தப் பைகளில் வடக்கு மாகாணச் சுற்றாடல் அமைச்சு என்று பொறிக்கப்பட்டிருந்தது.

இதனால் மாகாண சபை உறுப்பினர்களிடையே சலசலப்பு ஏற்பட்டது.

மாகாணசபை உறுப்பினர் பொ.ஐங்கரநேசன் திடீரென இதனை உறுப்பினர்களுக்கு நேற்றைய தினம் விநியோகித்தார். அதில் வடக்கு மாகாண சுற்றாடல் அமைச்சு என்று பொறிக்கப்பட்டிருந்தமை தொடர்பில் உறுப்பினர்கள் தங்களுக்குள் கேள்வி எழுப்பினர். அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பின்னரும் எவ்வாறு அமைச்சின் பெயரைப் பாவித்து இதனை விநியோகிக்கலாம் என்று பரவலாகப் பேசினர்.

இந்த விடயம் தொடர்பில் மாகாணசபை உறுப்பினர் பொ.ஐங்கரநேசனைக் கேட்டபோது, நான் முன்பு அமைச்சராக இருந்தபோது பொலித்தீன் பாவனைக்கு மாற்றீடாக விழிப்புணர்வுச் செயற்பாட்டுக்காக இதனைச் செய்திருந்தேன். இது எனது பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டிலேயே செய்யப்பட்டிருந்தது என்று குறிப்பிட்டார்.

அமைச்சுப் பெயரை ஐங்கரநேசன் பயன்படுத்தியமை தொடர்பில் விமர்சித்த உறுப்பினர்களிடம் அவரின் பதிலை தெரிவித்தபோது, அவர் (ஐங்கரநேசன்) இப்படித்தான் எல்லாத் 'திருகுதாளங்களையும்' செய்தார் என்றனர். (த-5-8)

## திடீர்...

குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களைத் தேடி வடமராட்சியில் பொலிஸார் சிறப்புத் தேடுதலை நேற்று மேற்கொண்டனர். இதன்போது இருவர் கைது செய்யப்பட்டனர்.

கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் தமிழ் பொலிஸ் அதிகாரி மீது நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. இந்த மாதம் 9ஆம் திகதி பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் இளைஞன் உயிரிழந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட பதற்ற நிலையின் போது பொலிஸ் காவலரண்கள், பொலிஸ் வாகனங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

இவற்றுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் சிலரைப் பொலிஸார் இனம் கண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவர்களைத் தேடி, இரண்டு பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன. வடமராட்சியில் குறிப்பாக துன்னாலைப் பகுதியில் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது இருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். (வ-5,26)

## வேலை....

ரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொதுச்சேவைகள் சட்டத்தின்கீழ், எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம் ஆகியவற்றை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கும் அரசின் தீர்மானத்துக்கும் அவர் ஆதரவு வெளியிட்டார்.

இது குறித்து நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய சுமந்திரன் மேலும் தெரிவித்ததாவது:

தொழிலாளர்களுக்குத் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குரிய உரிமை இருக்கிறது. தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக உரிய வகையில் அந்த சுதந்திரத்தைப் பயன்படுத்தவேண்டும்.

தொழிற்சங்கப் போராட்டங்கள் பல வடிவங்களில் முன்னெடுக்கப்படும். வேலைநிறுத்தம் என்பது அதன் இறுதி வடிவமாகவே இருக்கும். இன்று எதற்கெடுத்தாலும் தொழிற்சங்கங்கள், முன்னறிவித்தல் எதுவுமின்றி இறுதி வடிவத்தையே கையில் எடுக்கின்றன. இதனால், மக்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினரும் அடிக்கடி போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். இதனால் நோயாளிகளுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது.

போக்குவரத்துத்துறை மற்றும் பெற்றோலியத்துறை என்பனவும் மிகவும் அத்தியாவசியமான சேவைகளாகும். இந்தத் துறைகளைச் சேர்ந்தவர்களின் தொழிற்சங்கப் போராட்டங்கள் மக்களைப் பாதித்துள்ளன. அரசியல் நோக்கங்களோடு முன்னெடுக்கப்படும் வேலைநிறுத்தப் போராட்டங்களின் பின்னணியில் செயற்படுபவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (த)

## பதவிக்காக...

வையும் வெட்கம் கெட்ட அமைச்சர் எனவும் அவர் விமர்சித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அத்தியாவசிய பொதுச்சேவைகள் சட்டத்தின்கீழ், எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம் ஆகியவற்றை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கும் பிரகடனம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு விமர்சித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின்போது அமைச்சர் ராஜித சேனாரத்ன ராஜபக்சாக்கள் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைக்கின் றார். கைது செய்யப்படுவார்கள் என்றும் கூறுகின்றார்.

அவர் என்ன நீதி அமைச்சரா? வெட்கம்கெட்டவராக இருக்கின்றார். சட்டத்தைத் தனது சட்டைப்பைக்குள் போட அவர் முற்படுகின்றார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (நேற்றுமுன்தினம்) சட்டவிரோதமான முறையில் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டுள் என. வாக்கெடுப்புக் கோரியபோது அது நிராகரிக்கப்பட்டுள்ளது.

இப்படி நாடாளுமன்ற ஜனநாயகம் சாவு ஊர்வலம் செல்கையில் எதிர்க்கட்சித் தலைவர் அந்தப் பதவிக்காக மௌனியாக இருக்கின்றார்" என்றார். (த)

## தமிழரின்...

ரவை உயர் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை நீக்கம் செய்தது.

அத்துடன் பாதிக்கப்பட்ட மனுதாரருக்கு 5 லட்சம் ரூபா இழப்பீட்டை செலுத்த வேண்டும் என்றும் நீதியரசர் குழாம் தீர்ப்பளித்தனர்.

இந்தத் தீர்ப்பின் அடிப்படையில் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு கட்டடத்தை 8 வாரங்களுக்குள் அதன் உரிமையாளரிடம் மீளக் கையளிக்கவேண்டுமென உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தியதாகக் குற்றம்சாட்டி இந்தக் கட்டடத்தை பறிமுதல் செய்ய முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் மகிந்த ராஜபக்ச எடுத்த தீர்மானத்தை எதிர்த்து, அதன் உரிமையாளர்களான சுவிட்சர்லாந்தில் வசித்து வரும் சண்முகம் சிவராஜா மற்றும் சிவராஜா சரோஜினி தம்பதிகள் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்தனர்.

தங்களுக்குச் சொந்தமான இந்தக் கட்டடத்தை விடுதலை புலிகளுக்கு சொந்தமான நிதியைப் பயன்படுத்தி வாங்கியதாகவும் அங்கு விடுதலை புலிகளுக்கு உதவும் மருத்துவமனையை நடத்தியதாக குற்றம் சாட்டி பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் விசாரணையை ஆரம்பித்ததாக மனுதாரர்கள் தெரிவித்திருந்தனர்.

2009ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 17ஆம் திகதி, அப்போது பாதுகாப்பு அமைச்சராக இருந்த முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் உத்தரவுப்படி இந்தக் கட்டடம் பறிமுதல் செய்யப்பட்டதாக மனுவில் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

மனுவை ஆராய்ந்த நீதியரசர்கள், "அவசரகாலச் சட்டத்தின் கீழ் இந்தக் கட்டடத்தைப் பறிமுதல் செய்யும் அளவுக்குப் போதிய ஆதாரங்கள் இல்லை. அதனைப் பறிமுதல் செய்வதற்கு முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் மகிந்த ராஜபக்ச பிறப்பித்த உத்தரவு சட்டரீதியாக செல்லுப்படியாகாது. இந்த நடவடிக்கையால் மனுதாரர்களின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளது. அவர்களுக்கு ஐந்து லட்சம் ரூபா இழப்பீடு கொடுக்க வேண்டும்" என்று தீர்ப்பளித்தனர். (வ-5)

# ஆவரங்கால் மத்தி. இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 28
தைகடி சரஸ்வதி சனசமூக நிலையம் வடமாகாண ரீதியில் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.



கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தின் கரப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் அச்சுவேலி யுத் அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய அணி மோதியது. 5 செற்களைக் கொண்டதாக இந்த ஆட்டம் அமைந்தது.
முதலாவது செற்றை 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஆவரங்கால் மத்தி கைப்பற்றியது.
இரண்டாவது செற்றை 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது அச்சுவேலி யுத். சரிவில் இருந்து மீண்டு ஆக்ரோசமான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஆவரங்கால் மத்திய அணி மூன்றாவது மற்றும் நான்காவது செற்களை 25:19, 25:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-108)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 28
**இளைஞர் வி.க.**
**கால்பந்தாட்டம்**
திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகமும், இரவு 8 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.
**சரஸ்வதி ச.ச.நி.**
**கரப்பந்தாட்டம்**
கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 61ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தப்படும் 'ஏ' பிரிவு அணியினருக்கான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் மன்னார் சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## நோர்த் செவின் ஸ்டார் அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 28
கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமராட்சி பிறிமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நோத் செவின் ஸ்டார் அணி அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது. கொலின்ஸின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் நோத் செவின் ஸ்ரார் அணியை எதிர்த்து புளுரொக்கட் அணி மோதியது.
முதல் பாதியாட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய நோத் செவின் ஸ்ரார் அணி 8ஆவது, 14ஆவது, 22ஆவது நிமிடங்களில் தார்மிகன், மஜீத்தனன், கோகுலதீபன் ஆகியோரின் உதவியுடன் அடுத்தடுத்து கோல்களை பதிவுசெய்ய முதல் பாதியாட்டத்தில் அந்த அணி 3:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியில் புளுரொக்கட் அணி வீரர்கள் ஜெனா, ரஜீ ஆகியோர் 37ஆவது, 43ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரு கோல்களை பதிவு செய்தனர். அதன் பின்னர் நோர்த் செவின் ஸ்ரார் அணி வீரர் அருண் 47ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் அந்த அணி 4:2 என்ற கோல் கணக்கில்வெற்றிபெற்றுஅரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-422)



## கரப்பந்தாட்டச் சங்கத்தின் தலைமை அமைப்பாளராக மனோகரன் நியமனமானார்

யாழ்ப்பாணம், ஜூலை 28
வடமாகாண கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் தலைமை அமைப்பாளராக யாழ்ப்பாண மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் கி.மனோகரன் நியமிக்கப்பட்டார். கொழும்பில் அண்மையில் நடைபெற்ற கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் பொதுகூட்டத்தில் வைத்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ம)

## மன்னார் மாவட்ட கால்பந்து முடிவு

'ஏஜ' விளையாட்டு உபகரண விற்பனை நிலையத்தால் மன்னார் மாவட்ட ரீதியாக நடத்தப்படும் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் அந்தோனியார்புரம் சென். அன்ரனீஸ், சாவற்கட்டு கில்லறி, மூன்றாம்பிட்டி சென். அன்ரனீஸ் ஆகிய அணிகள் வெற்றிபெற்றன.
மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் பள்ளிமுனை சென். லூட்சியா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அந்தோனியார்புரம் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் அந்தோனியார்புரம் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில், சாவற்கட்டு கில்லறி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பெரிய கடை ஸ்ரார் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 4:0 என்ற கோல் கணக்கில் கில்லறி அணி வெற்றிபெற்றது.
பிறிதொரு ஆட்டத்தில் மூன்றாம்பிட்டி சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நறுவிழிக்குளம் நறுமலர் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணியினரும் ஏதுவித கோல்களையும் பதிவு செய்யாததினால், சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் மூன்றாம்பிட்டி சென். அன்ரனீஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

## ஆலடி சிந்து 'ஏ' இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 28
கைதடி குமரநகர் விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'ஏ' அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
குமரநகர் விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.
நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதியது.
இதில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'ஏ' அணி 7:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)



## விண்மீன் கழகம் இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 28
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கபடித் தொடரில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.
ஐக்கியத்தின் மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் துள்ளுமீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் பலாலி விண்மீன் அணி 37:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

## சிறப்புத் தேவையுடையவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நாளை

யாழ்., ஜூலை 28
வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள சிறப்புத் தேவையுடையவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்படி வடக்கு மாகாணத்தில் உள்ள சிறப்புத் தேவையுடையவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் கிளிநொச்சி மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன.
கிழக்கு மாகாணத்தில் உள்ள சிறப்புத் தேவையுடையவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் மட்டக்களப்பு நகர வெபர் மைதானத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் 5ஆம் மற்றும் 6ஆம் திகதிகளில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

# பயிற்சியாளராக வக்கார் யுனிஸ் தோல்வியடைந்தவர்

## அக்மல் கடும் காட்டம்

"வக்கார் யுனிஸ் ஒரு பயிற்சியாளராகத் தோல்வி அடைந்தவர், அவரால் பாகிஸ்தான் கிரிக்கெட் குட்டிச் சுவராகிவிட்டது" என்று அந்த அணியின் இலக்குக் காப்பாளர் கம்ரன் அக்மல் கடுமையாகச் சாடினார்.

பாகிஸ்தான் ஊடகமொன்றுக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். "வக்கார் பயிற்சியாளராகத் தோல்வியடைந்தவர், அவரால் பாகிஸ்தான் அணிக்கு ஏகப்பட்ட சேதம் ஏற்பட்டுள்ளது. பரிசோதனை முயற்சிக்கான தன்னார்வத்தில் நிரூபித்த வீரர்களை வீட்டுக்கு அனுப்பி அணியைக் குட்டிச்சுவராக்கியதோடு 2 தொடக்கம் 3 ஆண்டுகள் பின்னோக்கி நகர்த்திவிட்டார். சில வீரர்களுக்கும் அவருக்கும் பிரச்சினை இருந்தது. பாகிஸ்தான் அணியை முன்னுக்கு எடுத்துச் செல்வது எப்படி என்ற திட்டம் எதுவும் அவரிடமில்லை. இதற்கு உதாரணம் கூற வேண்டுமெனில் 2015 உலகக்கிண்ணத் தொடரில் யுனீஸ் கானை தொடக்க வீரராக களமிறங்குமாறு கேட்டார். மேலும் சர்பராஸ் அகமட்டை தாமதமாக அணிக்குக் கொண்டு வந்தார்.

உமர் அக்மல் ஆசியக் கிண்ணத் தொடரில் சதம் எடுத்தார், அடுத்த ஆட்டத்தில் அப்ரிடிக்குப் பின்னால் இறக்கப்பட்டார். வக்கார் யூனிஸ் அணிக்கு சிறந்த வீரர் ஆனால் பயிற்சியாளராக அவர் தோல்வி அடைந்தார். பங்களாதேஷுக்கு எதிரான தொடரில் 7 புதுமுகங்களை அழைத்துச் சென்றார் என்னாயிற்று? ஒருநாள் மற்றும் ரி-20 தொடரை அவர்களிடம் முதல் முறையாக இழந்தோம்" என கம்ரன் அக்மல் மேலும் தெரிவித்தார். (ம)



ஐரோப்பியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான புதிய பருவகாலத் தொடர் (2017 - 2018) தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பார்சிலோனா கால்பந்தாட்ட அணியுடன் நேற்றுமுன்தினம் இணைந்துகொண்டார் அந்த அணியின் நட்சத்திர வீரரான மெஸ்ஸி. (ம)



# இலங்கை திணறல்

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில், அந்த அணியின் பந்துவீச்சைத் தாக்குப்பிடித்து ஓட்டங்களைக் குவிப்பதற்கு திறணிவருகிறது இலங்கை அணி.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட தொடர் காலியில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. நேற்றுமுன்தின முதல் நாள் முடிவில் அந்த அணி 3 இலக்குகளை இழந்து 399 ஓட்டங்களைக் குவித்திருந்தது. புஜாரா 144 ஓட்டங்களுடனும், ரகானே 39 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 153 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் புஜாரா. 57 ஓட்டங்களுடன் ரகானேயின் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

பின்வரிசையில் அஸ்வின், பாண்டியா இருவரும் அடித்தாடி ஓட்டங்களை கிடுகிடுவென உயர்த்தினர். 47 ஓட்டங்களுடன் அஸ்வின் ஆட்டமிழந்தார். தனது அறிமுக ஆட்டத்தில் அரைச்சதம் கடந்தார் பாண்டியா. முடிவில் 600 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இந்தியா.

பந்துவீச்சில் பிரதீப் 6 இலக்குகளையும், லகிரு குமார 3 இலக்குகளையும், கேரத் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி 7 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கருணாரத்ன. தரங்க ஓர் முனையில் நிலைத்து நின்றாலும் மறுமுனையில் குணதிலக 16 ஓட்டங்களுடனும், குசல் மென்டிஸ் ஓட்டமெதனையும் பெறாமலும் ஆட்டமிழந்தனர். 64 ஓட்டங்களுடன் தரங்கவின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. தரங்க ரண்அவுட் முறையில் ஆட்டமிழந்தார். இவரின் இலக்குச் சரிவே இலங்கைக்கு மேலும் பின்னடைவைக் கொடுத்தது. முதல் நாள் முடிவில் இலங்கை 5 இலக்குகள் இழப்புக்கு 154 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

மத்தியூஸ் 54 ஓட்டங்களுடனும், டில்ருவான் பெரேரா 6 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)



## இந்தியாவுக்கு எதிராக அசல களமிறங்கார்

இலங்கை அணியின் சகலதுறை வீரர் அசல குணரட்னவின் கையில் மூன்று எலும்பு முறிவுகள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்தியாவுக்கு எதிரான அனைத்துத் தொடர்களில் இருந்தும் அவர் விலக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நடைபெற்றுவரும் டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நாளான நேற்றுமுன்தினம் தவான் கொடுத்த பிடியெடுப்பை பிடிக்க முற்படுகையிலேயே அசலவின் கையில் காயம் ஏற்பட்டது. இதையடுத்து அவருக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையில் கையில் மூன்று எலும்பு முறிவுகள் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. முன்னதாக அசல சுமார் ஓர் மாதமளவில் ஓய்வில் இருக்க வேண்டி வரலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது சுமார் இரண்டு அல்லது மூன்று மாதங்கள் அவர் ஓய்வில் இருக்க வேண்டி வரலாம் என்று தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் மட்டுமன்றி ஒருநாள் மற்றும் ரி-20 தொடர்களில் இருந்தும் அசல விலகியுள்ளார். (ம)

## பெண்களுக்கும் வேண்டும் ஐ.பி.எல்.

"உலக அளவில் பிரபலமாகியுள்ள ஐ.பி.எல். தொடர்களை பெண்களுக்கும் நடத்த வேண்டும்" என்று இந்திய மகளிர் அணியின் தலைவர் மிதாலி ராஜ் தெரிவித்தார்.

இங்கிலாந்தில் அண்மையில் நடைபெற்ற பெண்கள் உலகக் கிண்ணத் தொடரில் இந்திய பெண்கள் அணி இறுதியாட்டம் வரை முன்னேறியது. இறுதியாட்டத்தில் இங்கிலாந்திடம் கிண்ணத்தைப் பறிகொடுத்த போதிலும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தாயகம் திரும்பிய அந்த அணிக்கு மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது. இதன்போது உரையாற்றுகையிலேயே மிதாலி இவ்வாறு தெரிவித்தார்.

பெண்கள் கிரிக்கெட் அணிக்கு மக்கள் மத்தியில் எப்பொழுதும் இல்லாத வகையில் நல்ல வரவேற்புக் கிடைத்திருக்கிறது. இது பெண்கள் கிரிக்கெட்டுக்கு நல்ல தொடக்கமாகக் கருதுகிறேன். பெண்களுக்கு ஐ.பி.எல். தொடர் நடத்த வேண்டுமா? என்ற கேள்வியை சில ஆண்டுகளுக்கு முன்பு என்னிடம் கேட்டிருந்தால் இந்த திட்டத்துக்கு நானே ஆதரவு தெரிவித்து இருக்கமாட்டேன். ஆனால் தற்போது நிலவரம் அப்படியே மாறியுள்ளது. பெண்களுக்கு ஐ.பி.எல். தொடர் நடத்த வேண்டிய கட்டத்தில் நாம் உள்ளோம்" என மிதாலி மேலும் தெரிவித்தார். (ம)

# யங்கம்பன்ஸ் - விண்மீன் இறுதியில் நாளை மோதல்





யாழ்ப்பாணம், ஜூலை 28

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் பருத்தித்துறை லீக் மற்றும் வடமராட்சி லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையிலான அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி நாளை மோதவுள்ளது. நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நாளை மாலை 4 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.

முன்னதாக இடம்பெறும் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதவுள்ளது. (ம-422)

# றோஜர் பெடரர் மீது பெரும் எதிர்பார்ப்பு



பன்னாட்டு ரென்னிஸ் அரங்கில் படிப்படியாக தனது பழைய ஆட்டத்துக்கு திரும்பிக் கொண்டிருக்கும் சுவிற்சர்லாந்து வீரர் பெடரர் மீது, அவரது அடுத்த கட்டச் செயற்பாடுகள் தொடர்பில் அதிகளவில் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த வருடம் காயம் காரணமாக சுமார் 7 மாதங்கள் களத்தில் இருந்து விலகியிருந்தார் பெடரர். இதனால் அவருக்கு தரப்படுத்தலில் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. இந்த வருடத்தின் ஆரம்பத்தில் வெளியான தரப்படுத்தலில் முதல் 25 இடங்களுக்குள் அவர் இருக்கவில்லை.

ஜனவரி மாதம் நடைபெற்ற ஆஸ்திரேலியப் பகிரங்கத் தொடரில் பெடரர் சம்பியனானார். இதையடுத்து தரப்படுத்தலில் சடுதியான முன்னேற்றம் கண்டு 15ஆவது இடத்துக்கு வந்தார். அதன்பின்னர் அண்மையில் முடிவடைந்த விம்பிள்டன் தொடரையும் பெடரர் கைப்பற்றினார். இதனால் அவர் தற்போது மூன்றாம் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளார். அமெரிக்கத் தொடர் அடுத்த பகிரங்கத் தொடராக நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் இருந்து சேர்பிய வீரர் ஜோகோவிக் விலகியுள்ளார்.

இதனால் கிண்ணத்துக்கான போட்டி நான்கு வீரர்களிடம் இருந்து பெடரர், முர்ரே, நடால் என மூன்று வீரர்களாகக் குறைந்துள்ளது. இதையடுத்தே பெடரர் மீது அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. "விரைவில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடம் பிடிப்பேன்" என்றும் பெடரர் அண்மையில் தெரிவித்திருந்தார். இதுவும் எதிர்பார்ப்புக்கள் அதிகமாகியுள்ளமைக்கு ஓர் காரணம்.

தற்போதைய தரப்படுத்தலின் படி பிரிட்டன் வீரர் அன்டி முர்ரே 7ஆயிரத்து 750 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். ஸ்பெய்ன் வீரர் நடால் 7 ஆயிரத்து 465 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், சுவிற்சர்லாந்து வீரர் பெடரர் 6 ஆயிரத்து 545 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், சேர்பிய வீரர் ஜோகோவிக் 6 ஆயிரத்து 325 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், சுவிற்சர்லாந்து வீரர் வாவ்ரிங்கா 6 ஆயிரத்து 140 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர். (ம)

ரீயூசன் சென்ரருக்கு பெண் வேலையாள் தேவை. (Clerk)
தொடர்பு .077 2935265

# ஆஸி. வீரர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள்



ஊதிய ஒப்பந்தம் தொடர்பில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்கும், வீரர்களுக்கும் இடையில் இருந்துவந்த கருத்து மோதல்கள் அண்மைக்காலமாக மிகையாகக் குறைவடைந்ததை அடுத்து இந்த விடயத்தில் இரு தரப்பினருக்கும் இணக்கப்பாடு ஏற்பட்டு புதிய ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களுக்கும் அந்த நாட்டு கிரிக்கெட் சபைக்கும் இடையிலான ஒப்பந்தம், கடந்த முதலாம் திகதியுடன் நிறைவடைந்துள்ள நிலையில், புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடும் வரையில், கிரிக்கெட் தொடர்களில் பங்குபற்றப் போவதில்லை என வீரர்கள் அறிவித்திருந்தனர். இதனால் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்கும், வீரர்களுக்கும் இடையில் மிகப்பெரும் குழப்பநிலை நிலவியது. தற்போது அது ஓரளவு சுமூக நிலையை அடைந்துள்ளது என்பது ஆஸ்திரேலிய ஊடகங்கள் சிலவின் கருத்து. இதையடுத்தே புதிய ஒப்பந்தங்கள் தொடர்பில் பன்னாட்டு ஊடகங்களின் பார்வை திரும்பியுள்ளது. (ம)

Softlogic Finance தங்க கடன்
அவசர பணத்தேவைக்கு உங்கள் தங்கப் பவுணுக்கு அதிகூடிய முற்பணம்
முன்கூட்டிய அறிவித்தலின்றி தங்கநகைகளை துரிதமாக மீட்கும் வசதி
தங்க நகைகளுக்கு பூரண பாதுகாப்பு
செயற்றிறன் மிக்க சினேகபூர்வமான ஊழியர்கள்
பகுதிக் கொடுப்பனவுகள் செய்யும் வசதி
தெரிவுசெய்வதற்கு முற்பண கொடுப்பனவு முறைமைகள் பல
24 கரட் ரூ. 45,500/-
22 கரட் ரூ. 38,000/-
சுன்னாகம் - 0722 527664, 0212 242775
யாழ்ப்பாணம் - 0722 334596, 0212 219444
*நிபந்தனைகளுக்குட்பட்டது

வீடு வாடகைக்கு தேவை
யாழ். நகரப்பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.
தொடர்பு :-
077 201 7004

சேவை
பைக்கோ இயந்திரம் மூலம் சிறந்த முறையில் கிணறு வெட்டித் தரப்படும்.
075 907 8805/ 077 542 8937/ 077 642 8927
(CS 6239) (14)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
2018 ஜனவரி பரீட்சைக்கான
aat (Sri Lanka)
(AA1, AA2, AA3)
Qualification -G.C.E. O/L 6 Passes
Medium - Tamil & English
ஆரம்பம் - 29.07.2017 காலை 8.00 am
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna,
021 222 3382/ 021 222 9149



இந்தியாவில் நடைபெற்றுவரும் 27 ஆவது ஆசிய கூடைப்பந்தாட்டத் தொடருக்கான இலங்கை தேசிய கூடைப்பந்தாட்ட அணியில் தமிழ் வீராங்கனை துசியந்தி இடம்பிடித்துள்ளார். இவர் யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மட பழையை மாணவி ஆவார். (ம-23)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி ச.றஞ்சினிதேவி
அவர்கள் பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா (PGDE) பட்டத்தினைப் 18.07.2017 அன்று BMICH இல் பெற்றமையையிட்டு மனதார வாழ்த்துகின்றோம்.
Best Wishes
Congratulations
வாழ்த்துவோர்:-
ஆசிரியர் நலன்புரிசங்கம்,
கிளி/ பாரதி வித்தியாலயம்

பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.